# மேலான கவனத்திற்கு !

கைதடியில் முதியோர் இல்லத்தின் மீது குண்டு வீசியும் எறிகணை ஏவியும் பத்தொன்பது முதிய உயிர்கள் பறிக்கப்பட்டிருந்தன.
தென்மராட்சியில், கடந்த சில வாரங்களில் மட்டும் நூறிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். பல நூற்றுக்கணக்கானோர் படுகாயங்களுக்கும் காயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.
இந்து ஆலயங்கள் உட்பட பொதுமக்களின் வீடுகள், பொதுச்சொத்துக்கள் நாசமாக்கப்பட்டுள்ளன.
அனைத்துலக யுத்தவிதிகளுக்கு மாறாக பொதுமக்களை மனிதக்கவசங்களாக்குவதும், பொதுமக்களின் பாதுகாப்பான இடம்பெயர்வுக்கு வழிவிடாமல் ஊரடங்குச் சட்டத்தை அமுல்ப்படுத்துவதும், பொதுமக்கள் இடம்பெயரும் பாதைகளில் தாக்குதல் நடத்துவதும் தொடர்கிறது.
இருந்த போதும்.. கொழும்பில் குண்டுவெடித்ததும் யார்செய்தார்கள் என்று ஆராயக்கூட நேரமில்லாமல் விடுதலைப் புலிகள் மீது கண்டன அறிக்கை விடும் அந்த மனித நேயங்கள்........
தமிழர்களின் இந்த அவலங்களைக் கண்டுகொள்வதில்லையே....?
காரணம். என்னவோ.......?



எமது மக்கள், சுதந்திரமாகவும் கௌரவமாகவும், பாதுகாப்பாகவும் வாழ வேண்டும். இந்த இலட்சியம் நிறைவேற வேண்டுமாயின் நாம் போராடியே ஆகவேண்டும். இரத்தம் சிந்தித்தான் ஆகவேண்டும்.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு. வே. பிரபாகரன்


# களத்தில்

(15.06.2000) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (210)



கவிதை பக்கம்-4

வரம்புடைத்துப் பாயும் வல்லமையை ஒரு நாள் எம் பிள்ளைகள் பெறுவர் இருளகற்ற ஒளி கொண்டு வருவர்

கவிஞர் புதுவை இரத்தினதுரை

கருத்து பக்கம்-5

“கொண்ட கொள்கையை ஒரு போதும் விட்டுவிட மாட்டார்” தேசியத் தலைவரைப்பற்றி

கட்டுரை பக்கம்-7

நீறுபூத்துக் கிடந்த தமிழகம் நெருப்பாய் எரிகின்றது

காலப்பதிவு பக்கம்-10

கடலலைகள் எழுதிய காவியம் கடற்புலிகளின் தாக்குதல் தளபதி சாள்ஸ்


# அடிக்கு மேல் அடி!

## உயிர் விடும் நிலையில் சிங்களத்தின் விநியோக மார்க்கம்



கடலிலே காவியம் படைப்போம்

பலாலி சென்று திரும்பி வந்ததாக செய்தியாளர்களிடம் பரபரப்பான தனது பிரயாண அவலங்களைத் தெரிவித்திருந்தார் சிறீலங்காவின் பிரதிப்பாதுகாப்பமைச்சர் அநுருத்த ரத்வத்தை. அவர் உண்மையில் பலாலி சென்று திரும்பியிருந்தாரா? அல்லது வெறுமையான வார்த்தை ஜாலமா? என்பது நமது கவனத்திற்குரிய விடயமல்ல. மாறாக, அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்த விடயங்கள் பல முக்கியமானவை. தான் பயணம் செய்த உலங்குவானூர்தி பலாலித் தளத்தில் இறங்க முடியாதவாறு விடுதலைப் புலிகளின் எறிகணைகள், அங்கு பரவலாக வீழ்ந்து வெடித்த வண்ணம் இருந்தன எனத் தெரிவித்திருந்தார். விமானியால் உலங்குவானூர்தியை தரையிறக்க முடியவில்லை. உந்தி எழுந்து உலங்குவானூர்தியில் இருந்து வெளியில் குதிக்க வேண்டியதாக இருந்தது என்றார் அவர்.

ரத்வத்தையின் வாக்குமூலத்திலிருந்து பலாலிப் படைத்தளம், விமான ஓடுதளம் விடுதலைப் புலிகளின் முறையான தாக்குதல்களுக்கு இலக்காகிவருகின்றன என்பது தெளிவாகப் புலப்படுகின்றது. உலங்குவானூர்திகள் உட்பட வான்கலங்கள் இறங்கி ஏறுவதும் மிக மிகக் கடுமையான தொன்றாகிவிட்டது என்பதும் புலப்படுகின்றது. படையினரின் வான்வழிப் போக்குவரத்தும் மிகுந்த நெருக்கடிக்குள்ளாகியுள்ளது, ரத்வத்தையின் உந்திக் குதித்தேன் என்ற செய்தியால் நிரூபணமாகின்றது. இதிலிருந்து, வான்வழி இராணுவ விநியோகம் என்பது எத்துணை கடுமையானது என்பது மிகத்தெளிவாகப் புரிந்து கொள்ளப்படலாம்.

சிங்களப் படைக்கு இருக்கின்ற ஒரே அரைகுறை நம்பிக்கை கடற்படைதான். கடல்வழி விநியோகத்தை நம்பியே. குடாநாட்டிலுள்ள சிங்களத்தில் நாற்பதினாயிரம் படையினரும் உள்ளனர். இந்த அரைகுறை நம்பிக்கையிலும் மண்விழுவது போல், கடற்புலிகள் தமிழீழக் கடற்பரப்பில் தமது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி, சிங்களக் கடற்படையை நிலைகுலையச் செய்து வருகின்றனர்.

கடந்த ஐந்தாம் திகதி வடமராட்சி கிழக்குக் கடற்பரப்பில் சிறீலங்காக் கடற்படைக் கலங்களின் தொடரணி மீது, ஓயாதஅலைகள் மூன்று கடற்புலிகள் அணி நடத்திய துணிகரத் தாக்குதலும் மூன்று மணிநேரமாகத் தொடர்ந்த மோதலும் சிங்களத்தின் நம்பிக்கையை மோசமாகப் பாதித்துள்ளது. காங்கேசன்துறையிலிருந்து, இராணுவத்தினரை ஏற்றிய கப்பல்கள், அவற்றிற்கு பாதுகாப்பு வழங்கியபடி டோராக்கள் மற்றும் பீரங்கிப்படகுகள், நீரூந்து விசைப்படகுகள் என, பலமேறிய ஒரு கடற்படைக்கலங்களின் தொடரணி, காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டு விட்டதென்பதை அறிந்து கொண்ட கடற்புலிகளின் அணிகள், பெரும் கடற்சண்டைக்குத் தயாராக விரைந்தன. வெற்றிலைக்கேணி, சுண்டிக்குளம், பகுதியிலிருந்து சுமார் இருபத்தைந்து கடல்மைல் தொலைவில், சிங்களக் கடற்படையை காலை 6.25 மணியளவில் விடுதலைப் புலிகள் வழிமறித்து

→ 11

# சிறீலங்காவில் குண்டுவெடிப்பு



யுத்தத்திற்கு நிதிதிரட்டி ஊர்வலமாகச் சென்ற சிறீலங்கா அமைச்சர் சி.வி குணரத்தினா, அவரது மனைவி, தெகிவளை மவுன்ரலவேனியா பிரதி நகரபிதா ஆகியோர் உட்பட 23 பேர் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டுள்ளனர். ஐம்பதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். பல வாகனங்கள் சேதமடைந்துள்ளன.

தமிழீழ மக்கள், தேச விடுதலைக்காக தமது இன்னுயிர்களை ஈந்த மாவீரர்களுக்காக மாவீரர் நாள் நினைவை உலகம் பூராகவும் அனுட்டித்து வருகின்றனர். இந்த நாளில் இனத்தின் விடுதலைக்காக உழைத்த அந்த உயரிய மனிதர்களின் நினைவோடு, அவர்களின் இலட்சியக் கனவு ஈடேற உழைப்பதென்று உறுதியெடுத்துக் கொள்வதும், எழுச்சி கொள்வதும் தமிழீழ மக்களின் வழமை.

ஆனால் சிறீலங்கா அரசோ, தமிழீழ மண்ணையும், தமிழீழ மக்களையும் ஆக்கிரமித்து அடிமைகொள்ளும் தனது மேலாதிக்கக் கனவுக்காக, ஆசைக்காக உயிர்ப்பலி கொடுத்த தனது படையினருக்காக

→ 11

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்



# சமதானத்தை வலியுறுத்துபவர்களே சமாதானவாதிகள்

ஆனையிறவு விடுதலைப் புலிகளால் வெற்றிகொள்ளப்பட்டு, விடுதலைப் புலிகளின் படையணிகள் யாழ் குடாநாட்டுக்குள் முன்னேறிய வேகத்தில், உலகத்தின் சில நாடுகளில் படபடப்பு. மனிதாபிமான உதவிகள், சமாதான முயற்சிகள் குறித்த குரல்கள் ஆங்காங்கே சற்று ஓங்கியே ஒலித்தன. யாழ் குடாநாட்டைவிட்டு ஐந்து இலட்சம் மக்கள் உடுத்த துணியுடன் ஒரே இரவில் வெளியேறியபோது, செம்மணிப் புதைகுழி மர்மம் பகிரங்கப்படுத்தப்பட்டபோது, வன்னியில் உணவு மருந்தின்றி, மரங்களின்கீழும், தெரு ஓரங்களிலும் எம்மக்கள் துன்பம் சுமந்து தெருத் தெருவாய் அலைந்தபோது, பட்டினிச்சாவுகள் மலிந்தபோது மௌனம் காந்த இந்தக் குரல்கள், விடுதலைப் புலிகளின் கை ஓங்கி தமிழர்சார்பு வெற்றி சாத்தியம் என்ற நிலையில், தமிழீழ மக்களின் விடிவு அருகில் தென்படுகின்றதென்ற நிலையில் மனம் புளுங்குகின்றார்களா..? அல்லது இரண்டு தசாப்தங்களுக்கு மேலாகத் தொடரும் இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானத்தை ஏற்படுத்த உண்மையிலேயே துடிக்கின்றார்களா..?

இப்படியான கேள்விகள் எம்மக்கள் மத்தியில் நிலவுகின்றன. சரி, இந்தவிதமான கேள்விகளுக்கு மத்தியில், சமாதான முயற்சிக்கு மத்தியத்துவம் செய்யவும் தீர்த்துவைக்கவும் "நாம் தயாராக இருக்கின்றோம்", "நாம் தயாராக இருக்கின்றோம்" என்ற குரல்களும் இங்கும் அங்குமாக எழுகின்றன.

இரத்தம் சிந்தாமல் உயிர்ப்பலி கொடுக்காமல் சமாதானவழிமுறையில் தீர்வு காண்பதென்பது வரவேற்புக்குரியவிடயமே. அதனை விடுதலைப் புலிகளோ தமிழ்மக்களோ நிராகரிக்க சாத்தியமேயில்லை. இனஅழிப்புக் கொடுமையில் இரத்தம் சித்தியவர்களும், தாங்கும் வல்லமைக்கு மீறிய உயிர்ப்பலி கொடுத்தவர்களும் நம் மக்களே என்பதால், இதுவிடயத்தில் எம்மக்கள் இரட்டிப்பு ஆர்வம் காட்டுவர் என்பது தெளிவானது.

சமாதான முயற்சியாளர்கள், எந்தவகையானவர்களாய் இருக்கவேண்டும் என்பதில் எம்மக்கள் நியாயமான கருத்தொன்றை வகுத்து வைத்திருக்கின்றனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒரு விடுதலைப் போராட்டமாகவும், தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லுகின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை, ஒரு தேசிய விடுதலை இயக்கமாகவும் முதலில் அவர்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது எம்மக்களின் நிலைப்பாடு.

இந்த நிலைப்பாடு, ஒரு அடிப்படையான நியாயத்தன்மையைக் கொண்டுள்ளது என்பதில் மாறுபாடான கருத்து இருக்கமுடியாது.

சிறீலங்கா அரசையும் விடுதலைப் புலிகளையும் சமாதான மேசைக்குக் கொண்டுவந்து, ஆழ அகல வேரோடி நிற்கும் இனமுரண்பாட்டு விருட்சத்தின் ஆணிவேரைக் கண்டறிந்து தீர்வு காண முற்படும் சமாதான முயற்சியாளர்கள், இரு தரப்பையும் சமநிலையில் நோக்கும் பக்குவம் வாய்ந்தவர்களாக இருப்பது முக்கியமானது.

பொய்யான தகவல்களால் உந்தப்பட்டும், சந்திரிகா அரசின் தூண்டுதலாலும், தமது உள்விவகார வெளிவிவகார நலன்களைக் கருத்திற்கொண்டும், விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பின் பட்டியலில் சேர்த்தவர்களும், தடைசெய்யப்பட்ட அமைப்பாக அறிவித்தவர்களும், மத்தியத்துவம் செய்வதும் சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதும் சாத்தியந்தானா..?

கூர்மைபெற்றுள்ள, ஒரு சிக்கலான இனமுரண்பாட்டைத் தீர்த்துவைப்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. அழிக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் திரிபுபடுத்தப்பட்டும் வந்துள்ள ஒரு இனவரலாற்றின் உண்மைத்தன்மையைக் கண்டறிந்து, நவீன உலகத்தின் தேசியக்கோட்பாடுகளுக்கு ஏற்ப நீதியான தீர்வைக் காண்பதென்பது எவ்வளவு சிக்கலானது. பொறுப்புவாய்ந்த இந்தக் காரியத்தை ஆற்றத்துணிபவர்கள், எள்முனையேனும் பக்கம் சாராதவர்களாகவும் நீதி பிசகாதவர்களாகவும் இருக்கவேண்டும் என்பது எவ்வளவு முக்கியமானது என்பது குறித்து எம்மக்கள் மிகுந்த அவதானமாகவே இருக்கின்றனர்.

தமது தேசத்தின் நலன்களை, இலங்கைப் பிரச்சினையில் போட்டுக் குழப்பிக்கொள்பவர்களால், நீதியான தீர்வைக் காணமுடியுமா..?

தமிழீழத்தை ஒரு போதும் அங்கீகரிக்கமாட்டோம் எனக் கூறிக்கொள்வோர்கூட, சமாதானப் பேச்சுவார்த்தைக்கு மத்தியத்துவம் செய்ய அபிப்பிராயப்படுகின்றனர்.

தமிழீழமக்களின் பிரச்சினைக்கு அம்மக்களாலேயே ஒரு தீர்வு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. 1977ஆம் ஆண்டுத் தேர்தலில், சனநாயக ரீதியாக தமிழீழமக்கள் தமிழீழமே தமது பிரச்சினைக்கான தீர்வு என அறிவித்திருந்தனர்.

தமிழீழ மக்களின் சனநாயகத் தீர்ப்பை, சனநாயக உரிமைகளை நிராகரிப்பவர்களாக தம்மை இனங்காட்டிக்கொள்பவர்கள், தமிழீழ மக்களின் பிரச்சினைக்கு எப்படி தீர்வுகாணப் போகின்றார்கள்.

ஏற்கெனவே தமிழ்மக்களுக்கு பாதகமான நிலையை எடுத்துக்கொண்டு, சமாதானம் பேச முற்படுவோர் உண்மையான நடுநிலையாளர்களாக இருக்கமுடியுமா..?

தமிழீழத்திற்கு எதிரான, தமிழீழமக்களின் விடுதலைக்கெதிரான சிங்கள அரசின் நிலைப்பாட்டை, மேலும் பலப்படுத்தும் வேலையைத் தானே இத்தகைய சமாதான முயற்சியாளர்களால் செய்யமுடியும். இப்படியான கருத்துக்களாலும் கேள்விகளாலும் எம்மக்கள் உந்தப்படுகின்றனர்.

சிறீலங்காவின் இனஅழிப்புப் போருக்கு, ஆயுதங்களும் பயிற்சிகளும் ஆலோசனைகளும் வழங்கிக்கொண்டு, இனப்பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வு காணப்படமுடியாதெனவும், சமாதானப் பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்படமுடியும் எனவும், சில நாடுகள் கூறுகின்றன. பேச்சுக்கும் செயலுக்கும் எதுவித தொடர்புமில்லாத இத்தகைய நாடுகளின் கூற்றுக்கள் எத்தனை அபத்தமானவை, அர்த்தமற்றவை.

இலங்கை இனப்பிரச்சினைகுறித்து, அண்மையில் ஐரோப்பிய நாடொன்றின் பாராளுமன்றத்தில் விவாதம் ஒன்று ஏற்பாடாகியிருந்தது. சிறீலங்காவிற்கு அந்நாட்டில் இருந்து வழங்கப்படும் ஆயுதங்களால், அங்கு தமிழினம் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது என, ஒரு பாராளுமன்ற உறுப்பினர் பிரஸ்தாபித்தார். இதற்கு பதிலளித்த அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர், சிறீலங்காவிற்கு பல நாடுகளில் இருந்து ஆயுதங்கள் செல்வதாகத் தெரிவித்ததுடன், தமது நாட்டில் இருந்து செல்லும் ஆயுதங்களால்தான் அங்கு தமிழ்மக்கள் கொல்லப்படுகின்றார்கள் என்பதற்கு ஆதாரங்கள் இல்லை என்றார். இந்த நாட்டினால் சிறீலங்காவிற்கு அனுப்பப்பட்டு வரும் ஆயுதங்கள் யாரைக் கொல்லுகின்றன..? என்பது நம் மக்களின் கேள்வி.

அமைச்சரின் இந்தப்பதிலைவிட வேறு விதமான சளாப்பல் பதில்கள் இதற்கு இருப்பதாகத் தெரியவில்லை. அந்த நாட்டில் இருந்து செல்லும் ஆயுதங்கள் தமிழர்களைக் கொல்லாது என்பதுதான் அவரது வாதம்போலும்.

இப்படியாக தமது நலன்களுக்கு ஏற்ற வகையில் போரை ஊக்கப்படுத்துவதும், பின்னர் சமாதானம் பேசுவதுமாக இந்த நாடுகள் மனித உயிர்களிடத்தே விளையாட்டை மேற்கொள்ளுகின்றன. ஒரு இனத்தின் வாழ்வுரிமைமீது, விடுதலைமீது தமது இஸ்டப்படி தீர்வைத்திணிக்க முற்படுகின்றன.

நேர்மையும் நேரிய சிந்தனையும், சார்பு நிலையற்ற சமத்துவ நோக்குடன், யுத்தமற்ற சமாதான உலகம் ஒன்றைக் காணத்துடிக்கும் சுயநலமற்ற சமாதான சக்திகளையே, மத்தியத்துவம் செய்யும் தகுதியைக்கொள்பவையாக, அடக்கியொடுக்கப்பட்ட மக்கள்இனம் வகைப்படுத்தும் என்பதுவே நமது மக்களின் மேலான கருத்தாகும். ■

# நோர்வேயின் சமாதான முயற்சி முடக்கப்படுகின்றதா..?

இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வைக்காணப் போவதாகக் கூறிக்கொண்டு, சிறீலங்கா அரசு நோர்வேயின் துணையை நாடியிருந்தது. இதன்படி, கடந்த ஆண்டு, நோர்வே அரசு தனது சமாதான முயற்சியை மிகுந்த முனைப்புடன் ஆரம்பித்தது. விடுதலைப் புலிகளையும் சிறீலங்கா அரசையும் சந்தித்துப் பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகளை நடத்தியது. இலங்கை இனப்பிரச்சினையை தீர்த்துவைக்கும் முயற்சி கடுமையானதென்றபோதும், அதனை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லமுடியும் என்ற நம்பிக்கையையும் நோர்வே அரசு வெளியிட்டது.

ஆனால், நோர்வேயின் சமாதான முயற்சி சிங்களப் பேரினவாதிகளின் கடும் எதிர்ப்பை சந்தித்துள்ள நிலையில், எங்கே தனது பேரினவாதத் தலைமைப் பாத்திரம் பறிபோய்விடுமோ என அஞ்சும், சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா இந்த முயற்சியில் இருந்து பின்வாங்குவதுபோல் தெரிகின்றது என, அரசியல் பார்வையாளர் மத்தியில் ஒரு கருத்து நிலவுகின்றது.

சிங்களப் பேரினவாதிகள் நோர்வே அரசின் சமாதான முயற்சிக்கு எதிராக ஊர்வலங்கள் போயினர். நோர்வேயின் தேசியக்கொடியை எரித்தனர் என்பதுடன் நிறுத்திக் கொள்ளாமல், நோர்வேயின் சமாதான முயற்சிக்கு எதிரான தமது நிலைப்பாட்டை, நோர்வே தூதரகம் மீது கைக்குண்டு வீசியும் நிரூபித்தனர்.

சிங்களப் பேரினவாதிகளின் அச்சுறுத்தலுக்கு நோர்வே தூதரகம் உள்ளாகியிருக்கின்ற நிலையில், அதற்கு சிறீலங்கா அரசு உரிய பாதுகாப்பை வழங்கியிருக்கவேண்டும். அப்படி, உரிய பாதுகாப்பு வழங்கப்படவேண்டிய ஒரு முக்கிய தலத்தில், கைக்குண்டு வீச்சை மேற்கொள்வது எளிதான காரியமல்ல. இருந்தபோதும் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது என்பது, சிறீலங்கா அரசும் இந்த நாசகாரச் செயற்பாடுகளுக்கு மறைமுகமாகவேனும் உடந்தையாக இருந்திருக்கக்கூடும் என்றே கருத இடமுண்டு.

இதனை உறுதிப்படுத்தும் வகையில், சிறீலங்காவின் ஆளும்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மாத்திரமல்ல பொறுப்புவாய்ந்த சந்திரிகாவின் அமைச்சரவை உறுப்பினருமான, மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த ராஜபக்ஸ்ச, நோர்வேயின் சமாதான முயற்சியை சந்தேகிப்பதாக வெளிப்படையாகவே அறிவித்தார். நோர்வே விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நாடு என்றும், விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திற்கு மருத்துவ சிகிச்சை வழங்கியிருக்கின்றது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். அதனால், இந்தியாவே சமாதான முயற்சிக்கு சிறந்த நாடு எனவும் அவர் முன்மொழிந்திருக்கின்றார்.

(தன்னைக் கொல்ல முயற்சித்தபோதும், விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் சிகிச்சைக்கு தானே அனுமதி வழங்கியிருந்ததாக சிறீலங்கா

# ரணவீரு நாள்:........ சந்திரிகாவின் போர்ஓலம்!



ஓயாதஅலைகள் 3 ஏற்படுத்திவரும் இராணுவ - அரசியல் நெருக்கு வாரத்திலிருந்து தப்பிப் பிழைத்து போர் வெறிச் சுவாலைகளை பாதுகாக்கும் சிங்கள பேரினவாதத் தேவைகளிற்கான உத்திகளில் ஒன்றாக சிங்கள அரசினால் ரணவீரு நாள் (தேசிய வீரர்கள் நாள்) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தமிழர்களின் மீது வன்முறையையும், கொடூர இனவெறியையும் கட்டவிழ்த்துவிடும் சிங்களப் படைகளை ரணவீருகளாக சந்திரிகா நிருபிக்க முயல்கின்றார். பௌத்த மதவெறி கொண்ட பீடங்களும், அரசியல் - சமூக சக்திகளும் சந்திரிகாவின் இம்முயற்சியைப் போற்றின. தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைப் போரை நியாயமானது எனக்கருதும் சிங்கள இயந்திரம், தமது தேசத்தின் கெப்பிட்டிபொல காலத்து வீரதீரங்களைக் கூறி இனிவரும் போரில் தமிழர்கள் தோற்கடிக்கப்பட வேண்டும் என ரணவீரு நாளில் சபதமிடுகின்றன.

தமிழர் தாயகத்தில் நிலைகொண்டுள்ள சிங்களப் படைகளை மீளப் போரிடும் சக்திமிக்கவர்களாக்க சிங்களம் பெரு முயற்சி எடுக்கின்றது. போர்க்கால ஏற்பாடு என்ற பதாகையின் கீழ் பெரும் நிதியை ஒதுக்கி தமது ஆயுததளபாட பலத்தை அதிகரித்துவரும் சந்திரிகா, அத்தளபாடங்களைப் பாவிக்கும் சிங்களப் படையினரை தமிழர்களுக்கு எதிரான போர்வெறியுடன் போராடும் இராணுவமாக மாற்றும் பல்வகை முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார். தமது பணிமனையில் சிங்கள இராணுவத்தின் மனோநிலை சிகிச்சைக்கான பிரிவை உடனடியாக ஏற்படுத்தினார். ரணவீரு சேவா எனும் பிரிவை ஏற்படுத்தி சிங்கள இராணுவத்திற்கு ஆதரவாக தனது அரசு செயற்படுவதாகச் சுட்டிக்காட்டினார். பெரும் ஆயுததளபாட வருகை இடம்பெறுவதாக அறிவிப்புக்கள் வெளியிடப்பட்டு இராணுவம் உற்சாகப்படுத்தப்பட்டது. சிங்கள இராணுவத்திற்கு ஆதரவான பரப்புரை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. கொழும்பில் அரச ஆதரவுடன் ஒட்டப்பட்ட சுவரொட்டியொன்றில் செம்மணிக் கொலையில் உயரதிகாரிகளைக் காப்பாற்ற பலிகொடுக்கப்பட்ட இராணுவத்தினரை விடுதலை செய்யுமாறு கோரும் வேண்டுதல்கள் விடுக்கப்பட்டன. இத்தகைய முய்ற்சிகளின் ஒரு வடிவமாக ரணவீரு நாள் அறிவிக்கப்பட்டது. போரில் கொல்லப்பட்ட சிங்களப் படையினர், காணாமல்போன படையினர், போரிடும் படையினர் அனைவரையும் கதாநாயகர்கள் ஆக்கும் பணியே இங்கு முன்னிலைப்படுத்தப்பட்டது.

இம் முயற்சிகளில் தமிழர் எதிர்ப்புணர்வும், போர்வெறியும் ஆழ வேரூன்றி நின்றன. யாழ் குடாவில் உள்ள சிங்களப் படையினருக்கு துட்டகைமுனுவைக் காட்டி கடிதம் எழுதிய சந்திரிகா, ரணவீரு நாள் மூலம் அவ்வாறான இனவாதத் தூண்டுதலை நிறுவனமயப்படுத்தினார். சிங்கள மக்களை போரிற்கு பங்களிக்குமாறும் - இராணுவத்திற்கு உதவிடுமாறும் கோரி, போரை தொடரும் தமது நோக்கத்தை அரசும் - இனவாத அமைப்புக்களும் வெளியிடுவதற்கு நிறுவனமயப்படுத்திய ரணவீரு நாட்கள் துணைநிற்கின்றன.

சந்திரிகா ரணவீரு நாளின் உண்மை நோக்கை, தனது அரசியல் குயுக்தி நிறைந்த வார்த்தை ஜாலங்களால் மறைத்து போரிடும் இராணுவத்திற்கு மக்கள் துணைநிற்க வேண்டும் எனவும், அமைதிக்காக உழைப்போம் என்றும் ஓலமெழுப்புகையில், அவரது தாயார் பகிரங்கமாகவே சிங்கள வீரத்தைப் பேசினார். தமது முன்னையவர்கள் 450 வருடங்களாக சக்திமிக்க அந்நியர்களுக்கு எதிராக போராடியதாக அவர் கூறுகின்றார். தற்போதும் அது போன்று, தமது வீரமிக்க படையினர் போராடுவதாகவும் சிறீமாவோ கூறுகின்றார். தமது நாட்டைப் பாதுகாப்பதற்கான யுத்தம் என சந்திரிகாவின் நெருங்கிய சகா மங்கள சமரவீர கூறுகின்றார். தமது ரணவீரு நாள் போர்வெறியை ஊட்டுகின்றது என்பதை உலக சமூகத்திடம் மறைப்பதற்காக தமது அரசு போர் வெறியை ஊட்டவில்லை ஆனால் தாய் நாட்டைப்பாதுகாக்க வேண்டும் என்ற போர் மனோநிலையை ஏற்படுத்துகின்றது என அவர் விளக்கம் கூறுகின்றார். முப்படைத்தளபதிகளும் தமிழர்களுக்கு எதிரான போரை வெல்வோம் என ரணவீரு நாளில் அறிக்கை விடுகின்றனர்.

இவ்வாறு சிங்களப் போர்வெறியை நிறுவனமயப்படுத்தி முழுச்சிங்கள தேசமும் போர் வெறியுடன் செயற்பட வேண்டும் என்ற நோக்குடன் சந்திரிகா மேற்கொண்ட முடிவானது தமிழர்களின் தேசிய விடுதலைப் போரை மேலும் ஒரு முறை பலப்படுத்தியுள்ளது. சிலநாடுகள் தமிழ் - சிங்கள இனமுரண்பாட்டிற்கான தீர்வு சிறீலங்காவின் பிரதேச ஒருமைப்



ஆயுதம் ஏந்திய ஆனந்தாக்கல்லூரி சிங்கள மாணவர்கள்

பாட்டை பாதுகாத்தவாறுதான் அமைய வேண்டும் என நிபந்தனை விதிக்கையில் சிறீலங்காவின் பிரதேச ஒருமைப்பாடு என்பதே சிங்களப் பேரினவாதத்தின் கட்டமைப்பை பாதுகாக்கும் ஏற்பாடுகளுடன் கட்டமைக்கப்பட்ட போலித் தோற்றம் என்பதை ரணவீரு நாள் தெளிவுபடுத்தியுள்ளது. பெரும் இனப்படுகொலைகளைப் புரியும் கொடூர இராணுவம் சிங்கள தேசத்தின் ரணவீருக்களாக இருக்கையில் தமிழீழம் பிரிந்துசெல்வதே, இந்த ரணவீருக்களிடமிருந்து தப்பிப் பாதுகாப்பாக நாம் வாழ உள்ள ஒரே வழியாகும்.

நாதன்




பிடிவாதம் காட்டாமல் இலங்கை அரசே ஒரு தீர்வை கண்டுகொள்ள வேண்டும்.- பிரதமர் வாஜ்பாய்

நன்றி- தினகரன் (தமிழ்நாடு)

சனாதிபதி, அன்று தெரிவித்திருந்ததும், மனிதாபிமான அடிப்படையில் தம்மால் மேற்கொள்ளப்பட்ட சிகிச்சைக்கு தாம் யாரிடமும் அனுமதி கோரவேண்டியதில்லை என, நோர்வே வெளிவிவகார அமைச்சகம் அறிக்கை வெளியிட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. சந்திரிகா படுபொய்காரி என்பதை அவரது கட்சி பாராளுமன்ற அமைச்சரே தற்போது உறுதிப்படுத்தியிருக்கின்றார்.)

சிறீலங்காவின் சனாதிபதி சந்திரிகா, கடந்த சில வாரங்களாகத் தெரிவித்துவரும் கருத்துக்களை எடுத்து நோக்கின், சிறீலங்கா அரசு சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து குழம்பிப்போயுள்ளதா அல்லது மற்றவர்களைக் குழப்ப முயற்சிக்கின்றதா என்ற சந்தேகம் ஏற்படும்.

ஆராயுமிடத்து இதற்கூடாக ஒரு தெளிவான விடையும் கூடவே கிடைக்கப்பெறும். உண்மையில் சந்திரிகா சமாதான முயற்சி எதனையும் வரவேற்கவில்லை என்பதும், யுத்தத்தை தீவிரமாய் நடத்த முனைப்புக் கொண்டிருப்பதும் புலப்படும். அதேவேளை, சர்வதேச நாடுகளை தனது போலித்தனமான சமாதான நாடகத்தில் ஈடுபடுத்தி, விடுதலைப் புலிகளுக்கெதிரான, தமிழினத்திற்கு எதிரான இனஅழிப்பு யுத்தத்தை நியாயப்படுத்தவும், ஆதரவைப்பெறும் நோக்கம் கொண்டது.

சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா வாரம் ஒரு கதை பேசுபவர். முதல் வாரத்தில் விடுதலைப் புலிகளை அழிப்பேன் சமாதானம் காண்பேன் என்று உரைக்கும் அவர் மறுவாரத்தில், விடுதலைப் புலிகளுடன் பேசப்போவதாக அறிவிப்பார். கடந்த சில நாட்களின் முன்னால் அவர் சொன்னார், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு மாகாணசபை முதலமைச்சர் பதவியை வழங்குவதாகவும், தேர்தல் நடத்தாமலேயே அவர் சில ஆண்டுகளுக்கு முதலமைச்சராக இருக்கலாம் எனவும் தான் ஒரு திட்டத்தை முன்வைத்தபோதும் புலிகள் அதனை நிராகரித்துவிட்டனர் எனச் சொன்னார்.

ஆனையிறவு வீழ்சிகண்டதன் பின்னராக, விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினையை தீர்க்கமுன்வரவேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தார். தற்போது யாழ் குடாநாட்டுப் படையினருக்கு நவீன ஆயுதங்கள் வழங்கப்பட்டிருக்கும் நிலையில், படையினர் இனி விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போரிடுவர் என நம்பும் சந்திரிகா, விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுக்கே இடமில்லை என்கின்றார்.

கடந்த ஏழாம் திகதி, சிறீலங்காவின் இறந்த படையினருக்கான நாளில் பேசிய சந்திரிகா, யுத்தத்தால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படமுடியாதெனவும், பேச்சுவார்த்தை நடத்தியே இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியும் எனவும் தெரிவித்திருந்தார்.

ஆனால் அடுத்த சில மணிநேரங்களில், சிறீலங்கா அமைச்சர் சி.வி. குணரட்னா கொல்லப்பட்ட நிலையில், சிறீலங்கா சானாதிபதிச் செயலகம் விடுத்த செய்தியில், இனப்பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியில் தமது இருவழிப் பயணத்தில், குணரத்தினாவின் கொலை எதுவித தாக்கத்தையும் மாற்றத்தையும் ஏற்படுத்தாது எனத்தெரிவிக்கப் பட்டிருக்கின்றது.

அந்த இருவழிப்பாதைகளுக்கு சிறீலங்கா அரசு கொடுக்கும் விளக்கம், ஒன்று விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை நசுக்க இராணுவ நடவடிக்கை. மற்றையது அரசியல் பேச்சுவார்த்தை முயற்சிகள்.

சிறீலங்காவின் முன்னைய சனாதிபதிகளான பிரேமதாசா, டி.பி. விஜயதுங்கா ஆகியோர் கூட இதே கருத்தைத்தான் கூறி, இன ஒடுக்குமுறையையும், இன அழிப்பையும் மேற்கொண்டனர். ■

# பால் செம்பும் பறவைக்காவடியும்

-புதுவை இரத்தினதுரை-

உள்ளே உயிர்மட்டுமாடும்
இந்த உடற்கூட்டை
இன்னும் எத்தனையிடத்தில் ஒளிப்பது?
அகலக்கூந்தல் பரத்திய மரத்தின் கீழும்,
தூர்ந்து போன தடிமல் மதவுக்குள்ளும்,
ஏலவே அகதிவெளவால் தொங்கும்
கோயில் மாடங்கள்; குழிகளென்றும்
வேண்டா விருந்தாய் நுளைந்து
இரவல் வீடுகளின் ஓட்டுத்திண்ணைகளிலும்,
வீதியோரப் பறுகுப்பற்றையுள்ளும்,
இந்தப் பாவச்சடத்தை விழுத்தியும்; படுத்தும்
எத்தனை நாளுக்கென்றுதான்
இன்னும் காக்கமுடியும்?

சவமாகிப் போனால்மட்டுமா ஜடம்
இப்போ மட்டும் என்னவாம்?
உயிர் மீதான பெருவிருப்பில்
ஓடிக்களைக்கிறது உடல்.
உத்தரவாதமற்ற நாளைப்பொழுதில்
எதுவாகினும் நடந்து தொலையட்டும்
இன்று மட்டும் உயிர்தப்பும் வரம் தா.
எல்லாக் கடவுளிடமும் இறைஞ்சி
அலைகிறது ஏழைமனம்,
இறைவனின் தீர்ப்பில் எல்லைவிதித்திருப்பதாக
எழுதினானே ஒருவன்
அவனிப்போ முன்னேநின்றால்
அவலத்தின் எல்லை எத்தனை அடியெனக் கேட்கலாம்;
வாய்க்கிடங்கு கிளறி சும்மா ஆறுதலுக்காக
வார்த்தைகளைக் கொட்டிவிட்டு
அவனவனெல்லாம் தப்பிவிட்டான்
அகப்பட்ட இளிச்சவாயர் நாமானோம்.

நெஞ்சுக்கும் தனக்கும்
சொந்தமில்லாதன வழங்குவதில்
எல்லோரும் வள்ளல்கள்
தன்கூட்டில் ஒன்றாயும்,
கூடுவிட்டோடி வேறு மரங்களில் குடியிருக்கும்போது
இன்னொன்றாயும்,
கத்துகின்றன எழுத்துக்காகங்கள்.
நேற்றொன்றாய்,
இன்றொன்றாய்,
நேரத்திற்கொன்றாய்
மாறி மாறிக் கத்துகின்றன மரம்தாவிக் குருவிகள்
இரவோடிருத்தல் எத்தனை சுகமாம்
சொல்லலாம்
வாழ்ந்தாலல்லவோ தெரியும் அதன்வதை.

வீட்டைத்தொலைத்து,
பூசித்தெழும் என்முற்றத்தின்
புதிய வைகறை தொலைத்து
நெஞ்சுக்குள்ளே அதிசயம் நிகழ்த்தும்
கோயில் மணியின் குதுகலம் தொலைத்து,
வாசற் படலையில் வாசம் பாத்தும்
வேப்பமரத்தின் சிநேகிதம் தொலைத்து,



வெள்ளாப்புப் பொழுதின் வீரியம் தொலைத்து,
எல்லாவற்றையும் தொலைத்து
எத்தனை வருடங்கள்?
எழில் குலைந்த இந்த இடைவெளியில்
ஆறியிருக்க நொடிதானும் அகப்படவில்லை
கால்கள்தான் பாலம் காவித்திரிகிறது.

புகைவண்டித்தொடராகப் புறப்பட்டோம்.
நானே எஞ்சின்
மனைவியும், பிள்ளைகளும் பெட்டிகளாயினர்.
கைகாட்டி மறுமின்றி
காடுமேடெல்லாம் ஓடுகின்றது வண்டி.
ஓடியோடி அலுத்து விட்டது.
இங்கே வராதே என
எங்கும் சிவப்புக் கொடிகள்
வண்டித்தொடரை இனி எங்கே நகர்த்துவது!
வருவது வரட்டும் தரித்து நிற்போமெனில்
உயிர்மீதான பெருவிருப்பு ஓடவைக்கிறது.
எல்லாமிழந்து வெறுங்கையனாய்
நாவற்குழிப் பாலமேறிய போதே
நான் செத்துவிட்டேன்
இப்போது என்பாஃம் செய்யாத வெறும்கூடு
ஊரூராய் இரந்து ஊர்வலம் வருகிறது.

சந்தைக் கூட்டமெனக் கூடி
சரக்கு விற்க வந்தவரெல்லாம்
விற்றவரை போதுமெனச் சொல்லி
வெற்றுச்சாக்குடன் வீடுபோய் விட்டனர்.
விளையாத காட்டில் என்னதான் விற்பாய்?
விட்டு விட்டு வீடு வந்து சேரென
வந்து போன வாய்கள்
என்னையும் கூப்பிடுகின்றன.

முற்றமெல்லாம் முள்பரவிக் கிடந்தாலும்
சுற்றத்தோடிருப்பதே சுகமாம்
பகற்பொழுது பரவாயில்லை,
இரவுதான் கொஞ்சம் இடிக்கிறதாம்.
இஷ்டம் போல சிறகுவிரிக்க இயலாதாம்.
கூட்டுக்குள்ளே குடியிருந்தால்
ஒரு குறையுமே வராதாம்,
எப்படி முடியும் என்னால்?
ஆறு மணிக்குள்ளே
அர்த்தஜாமப்பூசையேற்று அடங்கிப்போதல்
கடவுளுக்குச் சரியெனப்படலாம்
நான் கட்டுகளற்ற சிட்டுக்குருவியல்லவா?
வரையறுக்கப்பட்ட வலயத்துள்ளே
என்னால் வாழமுடியாது.
நள்ளிரவிலும் எழுந்து நடப்பேன்.
காவலரண்கள் என்னைக் கட்டுப்படுத்தலாகாது
ஒரு இராஜகுமாரனென ஆரோகணித்து
நானென் பல்லக்கில் பவனிவருவேன்.
அடையாள அட்டை காட்டென
யாருமென்னை அதட்டக்கூடாது.
அது முடியாதெனில்
நானும் வரமுடியாது.


எனக்கிங்கு என்னதான் குறை?
சாவிரட்ட ஓடவேண்டியதாய்
வயிற்றுக்கு நாளாந்தம் வகை செய்ய
நிவாரண வரிசையில் நிற்கவேண்டியதாய்,
ஊர் நினைவு உறுத்துவதாய்
வாழவேண்டியுள்ளது உண்மைதான்.
“எனக்குன் கையாலே கொள்ளிவைப்பாயா மகனே’’
என்றானே எந்தை
வாக்குறுதி முடிகளும் வாய்ப்பிழந்து போகலாம்
நினைக்கும் போதில் நெஞ்சில் வடிகிறது குருதி.

வாழ்வின் சுமை வருத்துவதும்
பரவசங்களை இழந்ததுயர் படுத்துவதையும் தவிர
எனக்கிங்கு என்னதான் குறை?
நள்ளிரவில் எழுந்து நடக்கவும்,
“நந்திக்கடற்கரையில்’’ சரிந்து கிடக்கவும்,
வந்து தழுவும் வசந்தக்காற்றைச் சுகித்தபடி
“வட்டுவாகல்’’ வரை சென்று திரும்பவும்
ஏனென்று கேட்க எவருமற்ற சுதந்திரம்.
விடுதலையை நேசிக்கும்
வேருடனும், விழுதுகளுடனும்
கழிகிறதென் காலம்.

சாவின் விளிம்பில் நின்று தள்ளாடினாலும்,
வன்னியில் மட்டும்தான்
வாழ்வுக்கொரு அர்த்தம் தெரிகிறது.
மனதுள்ளே பூவாய்ச்சிலிர்க்கிறது நாளாந்தம்.
யாருக்கும் அடங்கோமெனும் நிமிர்விருக்கிறதே,
அது என் மனதுக்கிசைவான மமதையுடன்
ஒத்துப்போகிறது.
விலங்குகளற்று கையுதறி நடக்கும்
ஒரு விடிபொழுதுக்காக
களங்களில் எம்பிள்ளைகள் காவலிருக்கும்
இரவும், பகலும்
அவர்களுக்காகவே பிரார்த்தித்து விழிப்பதில்
அலாதியான சுகம் தெரிகிறது.
வென்றாலும் வாழ்வோம்
வீழ்ந்தாலும் வாழ்வோம்
இந்தக்குரலின் குமுறலே வித்தியாசமானது.
என் உயிரையே தொட்டுப்போகிறது இதன்தொனி
நான் விழுவேன்
நாம் விழுவோம்
நாடு விழமாட்டாது என்று
பாடுகின்ற இம்மண்ணின் பாடலிருக்கிறதே
எனக்கது பரவசம் தருகிறது.
துயர் மேவிய நெஞ்சின் அடியில்
சுனை ஊற்றொன்று சுரக்கிறது.

என்னை விடுங்கள்
எவரும் அழைக்க வேண்டாம்.
சிறையிருக்க என் ஜீவன் ஒப்பாது.
என் வாழ்வு எளிமையாக,
என் வாழ்வு இனிமையாக,
என் வாழ்வு வீரியம் தவறியதாக,
மனிதம் வதைபடும் போது கொதிப்புற்றும்,
மனிதம் மகிழ்வுறும் போது சதிரிட்டும்,
வாழ்வு இங்கேயே கழியட்டும்
என் இறப்பு வரை.

எனினும் வருவேன் என் ஊருக்கு.
வருவேன் என் வீட்டுக்கு.
வருவேன் என் அப்பனுக்கு கொள்ளிபோட
வரம்புடைத்துப் பாயும் வல்லமையை
ஒரு நாள் எம்பிள்ளைகள் பெறுவர்.
இருளகற்ற ஒளிகொண்டு வருவர்.
அப்போது வருவேன் அவர்களுடன்
தலை நிமிர்த்தியபடி.



## தமிழீழத் தேசியக்கொடி

தமிழீழத் தேசியக்கொடியின் பயன்பாட்டு விதிமுறைகள் குறித்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையால் வெளியிடப்பட்ட தேசியக்கொடி பயன்பாட்டு விதிக்கோவை என்ற சிறுகைநூலில் தெரிவிக்கப்பட்ட விடயங்களை, பகுதி பகுதியாக, இங்கு பிரசுரிக்கின்றோம்.

# தேசியக்கொடி

## கொடி வணக்க ஒழுங்கு முறை

- ஏழு பேருக்குக் குறைவானவர்கள் முன்னிலையில் தேசியக்கொடியை ஏற்றுதல் கூடாது.

- தேசியக்கொடி ஏற்றப்பட்ட கொடிக்கம்பத்தைவிட ஏனைய கொடிக்கம்பங்கள் 2 அடி உயரம் குறைந்தனவாக இருக்கவேண்டும்.

- தேசியக்கொடியுடன் பிறநாடுகளின் தேசியக்கொடிகள் ஏற்றப்படுவதாயின் ஒரே அளவு உயரமுள்ள கொடிக்கம்பங்களில் ஒரே அளவான கொடிகளை ஏற்றலாம். ஆனால் எமது தேசியக்கொடிக்கு இடப்புறமாகவே ஏனைய நாடுகளின் கொடிகள் அந்தந்த நாடுகளின் பெயர் அகரவரிசைப்படி பறக்க விடப்பட வேண்டும்.

- எமது தேசியக்கொடியுடன் பிறநாடுகளின் தேசியக் கொடிகளை ஏற்றுவதாயின் எமது தேசியக்கொடி ஏற்றப்பட்டதன் பின்பே அவை ஏற்றப்பட வேண்டும்.

- கொடிகள் இறக்கப்படும் பொழுது ஏனைய நாடுகளின் தேசியக்கொடிகள் முதலில் இறக்கப்பட வேண்டும். இறுதியாகவே எமது தேசியக்கொடி இறக்கப்படவேண்டும். ஏனைய கொடிகள் பறந்து கொண்டிருக்கும்போது எமது தேசியக்கொடியை ஒரு போதும் இறக்கக்கூடாது.

-நாடுகளின் தேசியக்கொடிகள் தவிர, பிரதேசக் கொடிகள், திணைக்களங்களின் கொடிகள், சங்கங்களின் கொடிகள், பாடசாலைகளின் கொடிகள் என்பன எமது தேசியக்கொடியுடன் ஏற்றப்படுவதாயின் அக்கொடிகள் யாவும் தேசியக்கொடியின் கம்பத்தைவிட 2 அடி குறைவான கம்பத்தில், தேசியக்கொடியைவிட அளவில் பெரிதாக இராத கொடிகளை தேசியக் கொடிக் கம்பத்தின் இரு புறங்களிலும் பறக்கவிடலாம். ஏற்றலாம்;

# சர்வதேச ஊடகங்களில் தமிழீழத் தேசியத் தலைவர்

ஓயாத அலைகள் மூன்று தாயகமீட்பு நடவடிக்கையானது, எமது சிறிய தாயகமண்மீது உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது என்பது கூறித் தெரியவேண்டியதில்லை. உலகத்தின் பலம்வாய்ந்த நாடுகளின் ஆயுத உதவிகள் ஆலோசனைகள் பெற்று, யுத்த முறுக்கேறிப்போயிருந்த பெரும் படையை எதிர்த்துப் போரிட்டு, சில ஆயிரங்களைக் கொண்ட சிறுவர் படை என, எதிரிகளால் மதிப்பிடப்பட்ட, விடுதலைப் புலிகள் பெற்ற, பெற்றுவரும் மகத்தான வெற்றிகள், உலகத்தின் புருவத்தை உயரவைத்துள்ளது. நாற்பத்தி எட்டு மணித்தியாலங்களில் பதினையாயிரம் படையினர் நிலைகொண்டிருந்த ஆனையிறவுப் பெருந்தளத்தைக் கைப்பற்றியிருப்பது, சாதாரண சாதனையா? உலகத்தின் பார்வையையே தமிழீழத்தின் பால் திரும்பவைத்த, ஓயாத அலைகளின் நாயகன், தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களைப்பற்றித்தான் உலக இராணுவ விற்பனர்களும், உலகப் பத்திரிகைகளும் அலசி ஆராய்கின்றன. உருவத்தில் சிறிய அந்த மனிதரிடம் இத்தனை ஆற்றல் புதைந்திருப்பதன் மர்மம்தான் என்ன என்பது, அவர்களால் விளங்கிக்கொள்ளப்படமுடியாத அவர்களைக் குடைந்து கொண்டிருக்கும் கேள்வி. தமிழீழத் தேசியத் தலைவர் குறித்து, உலகச் செய்தியாளர்கள் இராணுவத் தளபதிகள் என்ன சொல்லுகின்றார்கள்?

## "பிரபாகரன் எங்களின் தேவன்"

— மக்கள் —

## OUTLOOK மிகச் சிறந்த விடுதலைப் போராளி



"அவுட் லுக்கில்" பிரபல பத்திரிகையாளர் அனிதாப் பிரதாப்

கற்பனைகள் இந்த மனிதனிலும் பார்க்கப் பெரியவை. 80களின் ஆரம்பத்தில் நான் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்தேன். இந்தச் சந்திப்பை எனது வாழ்க்கையில் நான் மறக்கமாட்டேன். அருமையான காலைப்பொழுதில் நான் புலிகளின் அலுவலகம் ஒன்றிற்கு சென்றிருந்தேன்.

முதன் முதலாக அன்று தான் திரு. பிரபாகரனும் பத்திரிகையாளரைச் சந்திக்கின்றார்.

அங்கு வைத்து எனக்கு வண்ணத் தொலைக்காட்சியில் புலிகளின் விவரணப்படம் ஒன்று புலிகளால் காண்பிக்கப்பட்டது அதில் பிரபாகரன் மிகப்பெரியவராக காண்பிக்கப்பட்டார். அதில் பார்க்கும்போது பிரபாகரன் பலம் மிக்கவராக, கடின உழைப்பாளியாக, வீரம்மிக்கவராக பார்ப்போருக்கு உணர்வை ஊட்டத் தக்கவராகத் தோன்றினார். சீரான இராணுவ உடையில் கம்பீரமாக வந்த பிரபாகரன் காற்றில் அசைந்தாடிய புலிக்கொடியின் கீழ் நின்றிருந்த புலிப்போராளிகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். ஈழ விடுதலை கீதம் உணர்சி இசையோடு முழங்கியது. பிரபாகரனின் விழிகள் பெருமையோடு பறக்கின்ற புலிக்கொடியையும் வீரர்களையும் நோக்குகின்றன. சூட்டிகைமிக்க சிந்தனா வலுமிக்க போராளியாக, அவரை நான் சந்திப்பதற்கு முன்பே எனது மனதில் அவர் ஆழமாகப் பதிந்து விட்டார். ஆனால் நான் அவரை நேரில் சந்தித்த வேளையில் பேச்சு எதுவும் வராத நிலையை அடைந்தேன். அவர் நான் இருந்த அறைக்குள் வந்த வேளையில் என்னால் அவரை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. நான் ஒளிநாடாவில் பார்த்த பிரபாகரனின் கம்பீரப் போராளி உருவத்தை 6அடி உயரத்தோடு ஒப்பிட்டு பார்த்து வைத்திருந்தேன். திரு. பிரபாகரன் நான் இருந்த அறைக்குள் வந்தபோது யாரோ ஒரு புலிகளின் ஆதரவாளர் வந்திருக்கின்றார் என்றே நினைத்தேன்.

சில நிமிடங்களின் பின்னர் மிருதுவான அழகு தமிழ்க்குரல் ஒன்று கேட்டது நான்தான் பிரபாகரன் என்று. நான் அவரது தோற்றத்தை வைத்து அவரை மதிப்பிடத் தவறிவிட்டேன். நம்ப முடியாது வியப்போடு அவரைப் பார்த்தேன். புன்முறுவலோடு நின்ற மனிதரின் முகத்தினை நான் ஆழமாக ஊடுருவிப் பார்த்தேன், என்னால் எவ்விதப் பயங்கரத்தையும் அவர் முகத்தில் பார்க்க முடியவில்லை.

அதன் பின்னர் இடம்பெற்ற இரண்டு மணித்தியால பேட்டியின்போது நான் இதுவரை சந்தித்த குறிப்பிடத்தக்க மனிதர்களில் இவரைப் போன்ற சிறந்தவர்களை இதுவரை நான் சந்தித்ததே இல்லை.

நான் அவரைச் சந்தித்த வேளையிலேயே என்னால் திரு பிரபாகரன் கொண்ட கொள்கையை ஒருபோதும் விட்டு விட மாட்டார் என்பது உணரக்கூடியதாக இருந்தது. அவருடைய மதியூகம் வியக்கத்தக்கது. அவர் இன்றே அவரது எதிரிகள் பல வருடங்களுக்குப் பிறகு என்ன செய்வார்கள் என்பதை அனுமானித்துவிடுவார்.

என்னுடைய பேட்டியின் போது என்னுடைய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் தேவைப்படின் எமது போராட்டத்திற்கு எதிராக இந்தியா வருமாயின் அதனையும் எதிர்ப்போம் என்று கூறினார். இது இந்திய அமைதிப்படை இலங்கைக்கு அனுப்பப்படுவதற்க்கு பல வருடங்களுக்கு முன்னர் என்னிடம் கூறியிருந்தார். இதனை பல வருடங்கள் கழித்து என்னால் உணரக் கூடியதாக இருந்தது.

ஐந்து வருடங்களுக்கு முன்னர் சந்திரிகா அம்மையார் ஒரு பேட்டியில் எந்தத் திறமையான போராளிகளும் தொடர்ச்சியான யுத்தத்தில் களைப்படைந்து விடுவர் என்று கூறியிருந்தார். ஆனால் அவர் கூறியது முற்றிலும் மாறாகவே உள்ளது. இன்று பிரபாகரன் முன்னரிலும் பார்க்க மிகச் சிறந்த நிலையிலேயே உள்ளார். அவருடைய போர்வலு தளர்ந்தமைக்கான எதுவித அறிகுறியும் இல்லை. இன்று, தாக்கிவிட்டு மறையும் கொரில்லாக்களின் தலைவர் என்ற நிலையிலிருந்து பல சமர்களை வெற்றிகொள்ளும் பல பெருந்தளங்களை தகர்த்தழிக்கும் தேசிய விடுதலை இராணுவத்தின் தலைவராக இருக்கின்றார். அவரது படையினரே உலகின் 4வது பெரிய இராணுவத்தினை பின் வாங்கச் செய்தவர்கள், இன்று சிறீலங்கா இராணுவத்தினை ஓட ஓட விரட்டி பின்வாங்கச் செய்ததோடு, நாடு நாடாய் பணம் தேடி சிறீலங்கா அரசை ஓடும் படி செய்து கொண்டிருக்கின்றனர்.

திரு. பிரபாகரன் தமது இலச்சினையாகப் புலியைத் தெரிவுசெய்தமைக்கு காரணம் இல்லாமல் இல்லை. அவரது நேரந்தவறாத, மதிநுட்பமிக்க, தந்திரோபாயத் தாக்குதல்கள் புலியின் குணத்தை ஒத்தவையாக உள்ளன. ஒரு தடவை அவரிடம் கேட்டேன் இருபது வருட யுத்த வாழ்க்கையில் என்ன கற்றுக் கொண்டீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் துணிந்தவனுக்கு வெற்றி கிடைக்கும் என்று கூறியிருந்தார். ஆம் இன்று அவர் கற்பனைகளை எல்லாம் விஞ்சிப் பெரியவராகி விட்டார். உலகெங்கும் பிரபலமாகி விட்டார். ■

## மிகச்சிறந்த யுத்த திட்டமிடல் அறிஞர்



உலகின் பல்வேறுபாகங்களிலும் பரபரப்பாக விற்பனையாகும் சஞ்சிகையான "நியூஸ்வீக்கின்" செய்தியாளர் இயன் மக்கினன்

மே 29ஆம் திகதி இதழில்

புலிகளின் தலைவர் பிரபாகரன் மிகச்சிறந்த யுத்த தந்திரோபாயமிக்க இராணுவ அறிஞர்.

உலகின் மிகச்சிறந்த யுத்த திட்டமில் ஆற்றலுள்ளவர்களில் இவரும் ஒருவர். இவரது இயக்கம். உலகின் மிகச்சிறந்த கெரில்லா இயக்கமாக பரிணமித்துள்ளது. திரு.பிரபாகரன் தமிழர்களால் சேகுவேரா, மாவோசேதுங், நெப்போலியன் போன்று போற்றப்படுகின்றார். இலங்கைத் தீவிலுள்ள தமிழர்களின் விடுதலைப் பயணத்தில் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்து இன்று வரை தொடர்பவர். மிகச்சிறு வயதிலேயே சிறீலங்கா அரசின் இனவாதக் கொள்கைகளின் பாதிப்பினால் தான் அவர் தமிழர்களுக்கான ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டி வந்தது. ■

## பிரபாகரன் எங்களின் தேவன்


"லண்டன் கார்டியனில்", அதன் கட்டுரையாளர் லுக் கார்டிங், சிறீலங்காவிலும் தமிழீழப் பகுதிகளிலும் பொதுமக்களை நேரடியாகச் சந்தித்து மே12ஆம் திகதி நீண்ட கட்டுரை ஒன்றை வரைந்துள்ளார்.

சிறீலங்கா அரசு விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் எனக் கூறிக்கொள்ளுகின்றது, ஆனால் அவர்கள் விடுதலைப் போராளிகள், தேசத்தின் வீரர்கள் என, மக்கள் போற்றுகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

தான் சந்தித்த வவுனியா வாசிகளிடம், விடுதலைப் புலிகளையும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைப் பற்றியும் கேட்டதாகத் தெரிவித்த அவர், அவர்கள் பெருமைபொங்க தனக்குரைத்தவற்றை தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். அவர்கள், பிரபாகரன் மிகமிகப் பெரிய மனிதன் என தெரிவித்ததுடன், பிரபாகரன் எங்களின் தேவன் என்று உரைத்தார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார். அவருடைய வேங்கைகள் எங்களுக்கு மண்ணை மீட்டுத் தருவார்கள். எங்களுக்கு ஆனையிறவு வீழ்ந்தது கிறிஸ்மஸ் கொண்டாட்டம் போலிருந்தது என்று அவர்கள் தன்னிடம் கூறினர் எனவும் அவர் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். ■

## மிக எளிமையான மனிதர்


இந்திய அமைதிப்படையின் முதற்தளபதியாக இருந்த லெப்.ஜெனரல் தீபெந்தர் சிங் அவர்கள் மூத்த பத்திரிகையாளர் ஜோசி ஜோசப்பிற்கு வழங்கிய செவ்வியின் போது கூறியவை.



திரு. பிரபாகரன் அவர்கள் சாதாரண மனிதரல்ல. அவர் ஒரு மாபெரும் தலைவர். அதுவும் அர்ப்பணிப்பு தியாகம்மிக்க தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தளகர்த்தர். அவருடைய உயிர் பெறுமதியானது. ஆனால் அவர் மிகவும் எளிமையான மனிதர். எதுவித மாசுமறுவும் அவர் பின்னால் கிடையாது. அவருடைய மனைவி மூன்று புடவைகளே வைத்திருந்தார். ஒன்று அவர் அணிந்திருப்பார், மற்றையது தோய்த்து காயவிடப்பட்டிருக்கும் மூன்றாவது அணிவதற்கு தயாராக இருக்கும். பல தடவைகள் அவர்களைச் சந்தித்திருக்கின்றேன் அவர்கள் ஒரு போதும் கொக்கோ கோலா போன்ற ஆடம்பர மென்பானம் அருந்தியதே கிடையாது. எங்களுக்கு குடிப்பதற்கு அவ்வகையான மென்பானங்களைத் தருவார்கள். தாங்கள் சாதாரண குளிர்பான வகைகளையே அருந்துவார்கள்.

திரு. பிரபாகரன் சொன்ன சொல் தவறாதவர். ஆயுத ஒப்படைப்பு சம்மந்தமாக நான் அவருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டபோது எனக்கு 1987 ஆகஸ்ட் 5 இல் ஆயுத ஒப்படைப்பிற்கு சம்மதிப்பதாக வாக்களித்தார் அதன் படியே செய்தார். ஆனால் றோவும் இந்திய அரசும் அவருக்கு விசுவாசமாக நடக்கவில்லை. ■

## சொன்னதைச் செய்பவர்



இந்திய அமைதிப்படையின் கட்டளை அதிகாரியாக இருந்த, ஓய்வு பெற்ற கட்டளை அதிகாரி லெப்.ஜெனரல். கவூர் "நியூஸ் ருடே" யிற்கு வழங்கிய பேட்டியில்

திரு. பிரபாகரன் யாழ் குடாநாட்டை கைப்பற்றும் வரை ஓயமாட்டார். யாழ்ப்பாணப் போரின் போக்கைத் தீர்மானிக்கக் கூடிய நிலையில் அவர் இன்று உள்ளார். குறிப்பிட்ட இலக்கை அடையும்வரை அவர் ஓயமாட்டார். தமது மக்களுக்கு ஏதாவது வாக்குறுதி அளித்தாராயின் அதை நிறைவேற்றியே தீருவார். இன்று யாழ்ப்பாண மக்களுக்கு யாழ் நகரை மீட்டெடுக்க உறுதி கூறியுள்ளார் அதனை நிறைவேற்றியே தீருவார்.

பல தடவைகள் சிறீலங்காச் சிப்பாய்களை தப்பியோட சந்தர்ப்பம் கொடுத்துள்ளார். இதன் மூலம் எதிரியின் போரிடும் மனோபலத்தையும் தகர்த்தெறிந்து வெற்றியை நோக்கி அணிநடை போடுகின்றார். ■

# விழித்தெழுங்கள் மாணவரே !

**தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு தமிழீழ மாணவர்களால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை கீழ்வருமாறு.**

தமிழீழ விடுதலைப் போராட்டம் தோற்றம் பெற்றதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று சிங்கள அரசாங்கம் தமிழ் மாணவர்களின் கல்வியில் காட்டிய ஓரவஞ்சனையாகும்.

ஈழத்தமிழர்கள் நீண்டகால தனிப் பெரும் கல்வி பாரம்பரியத்தைக் கொண்டு விளங்கியவர்கள். தமிழீழ மாணவர்கள் தமது திறமையினாலும் முயற்சியினாலும் கடும் உழைப்பினாலும் கெட்டிக்காரர்களாகவும் விளங்கியது சிங்கள அரசிற்கு சகிக்கவில்லை.

தமிழ் மாணவர்களது உயர் கல்வியை நசுக்கும் பொருட்டு சிங்கள அரசு தரப்படுத்தலைக் கொண்டு வந்தது. இதுவே தமிழீழப் போராட்டத்தின் மற்றொரு அத்தியாயத்தை விரித்தது.

தமிழ் மாணவர்கள் எழுந்து போராடத் தொடங்கினார்கள். இப்போராட்டத்தின் முதன்மையாளராகவும், முனைப்புச் சக்தியாகவும் பட்டதாரி மாணவன் பொன். சிவகுமாரன் விளங்கினார்.

பொன்.சிவகுமாரன் சிங்களப் பேரினவாத அரசின் படைக்கு எதிரான தீவிர மான செயற்பாட்டில் இறங்கிப் போராடினார். எனினும் சிங்களப்படை சிவகுமாரன் மீது 1974ஆம் ஆண்டு இதே நாள் தாக்குதல் நடாத்தி மாணவர் போராட்டத்திற்கு ஆப்பு வைக்க முயன்றது.

இவ்வாறே அவ்வப்போது ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் தமிழ் மாணவர்களின் கல்வி மூலதனத்தில் மண்ணைப் போட்டன.

அக்கரைப்பற்றில், யாழ் பல்கலைக் கழக மாணவன் கிருபாகரன் ரயர் போட்டு எரிக்கப்பட்டான். மாணவி கிருசாந்தி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டாள். நாகர்கோவிலில் 34 மாணவர்கள் விமானக் குண்டு வீச்சு மூலம் அழிக்கப்பட்டனர். மட்டு நகரில் 09 சிறுவயது மாணவர்கள் சுட்டுத்தள்ளப்பட்டனர். கல்முனை வட்டாரத்தில் திட்டமிட்டு கல்வி முதன்மையாளர்கள் அழிக்கப்பட்டனர். பாடசாலைகள் இராணுவ முகாம்கள் ஆக்கப்பட்டும், குண்டுகள் வீசி அழிக்கப்பட்டும் வருவதும் சதாரண நிகழ்வுகளாகின்றன.

இவைகள் அரசின் கல்வி அழிப்புக்குக் கூறப்பட்ட சொற்ப உதாரணங்கள மட்டுமே. இப்படி அரசு தமிழ் மாணவர்களின் கல்வி மீது தொடுத்த யுத்தம் மிகவும் பெரியது, அட்டூழியமானது.

**அன்பார்ந்த தமிழீழ மாணவர்களே!**

கல்விப் போராட்டத்திற்கு கவசமாகவும் போராட்டம் கல்விக்கு காப்பரணாகவும் இருக்க வேண்டும் என்ற தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் சிந்தனைக்கு இணங்க ஒன்று சேருவோம் வாருங்கள்.

சிங்கள அட்டூழியப்படைக்கு எதிராக நமது போராளிகள் இன்று மிகப்பெரிய யுத்தத்தை தொடுத்து முன்னேறியிருக்கின்றார்கள். தமிழீழம் உருவாகும் சூழ்நிலை உருவாகிவிட்டதென்பதை இன்று உலகமே உணர்ந்து கொண்டிருக்கின்றது. எனவே இவ்வேளையில் எமது போராட்டத்திற்குப் பக்கபலமாக இருந்து தோளோடு தோள்நின்று உழைப்பது மாணவர்களது வரலாற்றுக் கடமையாகும்.

எனவே சுதந்திர தமிழீழத்தில் நிலைநாட்டப்படும் தமிழ்க் கல்வியின் பெருமையை உலகறியச் செய்வோம். விழித்தெழுங்கள் மாணவரே!

கல்வி ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடி மடிந்த மாணவன் பொன்.சிவகுமாரனின் நினைவுநாளாம் இன்று, பொங்கி எழுவோம் புதுமைகள் படைப்போம். புயலென எழுந்து நிற்கும் புலிப் படைக்கு ஒத்துழைப்பு வழங்கி எம் தேசத்தை மீட்போம் வாருங்கள் எம் மாணவரே! ■

# சிறீலங்காவில் War heros Day

யுத்தத்தில் ஒடித்தப்பும் படையினரை இழுத்துப் பிடித்துப் போரிட வைப்பதும், கொல்லப்பட்ட படையினரின் பெற்றாரை




குடும்பத்தினரை கௌரவிப்பது போல பாசாங்கு காட்டுவதன் மூலம், படையினரை சற்று குளிரப் பண்ணுவதும், படையில் சேர்வதால் இருக்கக்கூடிய சமூக அந்தஸ்த்தை உணர வைப்பதன் மூலம் மேற்கொண்டு இளைஞர்களைக் கவர்ந்து இழுப்பதும் இந்தப் படைவீரர்கள் தினம் அறிவிக்கப்பட்டதற்கு முக்கிய காரணம். படையினர் மீது கொண்ட அக்கறையோ, இறந்த படையினரின் குடும்பத்தினர் மீது கொண்டுள்ள பரிவோ இதற்கு நிச்சயமாகக் காரணமில்லை.

யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்தபோது, தமிழீழ மண்ணிற்காக மக்களின்




விடுதலைக்காக தமது இன்னுயிர்களை உவந்தளித்த மாவீரர்களின் கல்லறைகள்

பட்டபாட்டை என்னவென்பது? காட்டுமிராண்டித் தனமான முறையில், மாவீரர்களின் கல்லறைகளை, சிங்களப்படை உடைத்து நொறுக்கியது. உழவு இயந்திரம் கொண்டு, நிலத்தைப் பிளந்து, மாவீரர்களின் கல்லறைகளை இருந்த இடம் தெரியாமல் பிரட்டிப் போட்டது. தமிழ் மக்களின் இதயம் எவ்வளவு தூரம் நொந்து போயிருக்கும். நெஞ்சில் இரத்தம் வடிய அந்தக் கொடுமைகண்டு கண்ணீரை மாத்திரமே எம்மக்களால் சிந்தியிருக்க முடியும். அதிலும் மௌனமாக.

மாவீரர்களுக்கு இன்றுவரை அர்த்தம் தெரியாதவர்கள், இன்று யுத்தத்தில் இறந்து போன தமது இராணுவத் தினருக்கு புனித நாள் அறிவித்திருக்கின்றனர். தமிழீழ மண்ணிலே ஆக்கிரமித்து நின்ற போதும், கொடுமைகள் செய்த போதும் கொல்லப்பட்ட சிங்களப்படையினருக்கே இந்தக் கௌரவம். இந்த நினைவு நாளைச் சாட்டாக வைத்து நிதி சேகரித்து யுத்தத்தைத் தொடர்வதும். சிங்கள மக்களிடையே இன எழுச்சியைத் தோற்றுவித்து, தமிழ் மக்களுக்கெதிரான குரோதத்தை வளர்ப்பதும், தமிழ்மக்கள் மீதான தமது ஆதிக்கப்பிடியை மேலும் பாதுகாப்பதும் நோக்கம்.

ஆனால், தமிழீழத் தாயின் மடியில் கல்லறைகளில் நிம்மதியாய் தூங்கிக் கொண்டிருந்த அந்த மாவீரர்களை, அரக்கத்தனமான காட்டுக்கூச்சலுடன் துயில் கலைத்த சிங்களத்து வீரர்களுக்கு நினைவு நாள் கொண்டாட அந்த மாவீர ஆத்மாக்கள் அனுமதிக்குமா? ■

# போருக்குத் தயாராகும் புத்தபிக்கு

சாந்தி சமாதானத்தை வலியுறுத்துவதும் அதற்காக பாடுபடுவதும்தான் மதத்துறவிகளின் வழி என்பதெல்லாம் மலையேறிவிட்டது. இப்பொழுது அவர்கள், வீதியில் இறங்கி, தமிழின அழிப்புக்குச் சார்பாக ஊர்வலங்கள் போவதும், சமாதானத்திற்கு எதிராக கோசங்கள் போட்டு ஆர்ப்பாட்டங்கள் செய்வதும் சகஜமாகப் போய்விட்டது. சிறீலங்காவில் சமாதானம் தோன்ற வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் அதற்காகச் செயற்பட்ட நோர்வேயின் தேசியக்கொடியைக்கூட இந்த புத்த மதத் துறவிகள் விட்டுவைக்க வில்லை என்பது பழைய கதை.



இப்பொழுது அவர்கள், நேரடியாகவே களமிறங்குகின்றனர். துப்பாக்கி பிடித்து, தமிழனின் உயிர்குடிக்கும் ஆவல் கொப்பளிக்க... இராணுவ ஆட்சேர்ப்பு மையத்தில் இராணுவத் தேர்வுக்குத் தோற்றுகின்றனர்.

கொழும்பில், இராணுவ ஆட்சேர்ப்பு மையத்தில், இராணுவத் தேர்வுக்கு தோற்றிய புத்தபிக்கு ஒருவரையே படத்தில் காண்கிறீர்கள்.

புத்தபிக்கு ஒருவரே போரிட வரும் போது... சாதரண இளைஞர்களே என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள் எனக் கேளாமல் கேள்வி கேட்கும் விதமாய் அமைந்துள்ள இப்புகைப்படம், சிறீலங்கா அரசால், விருப்புடன் வெளியிடப்பட்டுள்ளது. பௌத்தம் எங்கே போய்க்கொண்டிருக்கின்றது ...? ■




## மூழ்கடிக்கப்பட்ட மிதக்கும் மினிமுகாம்கள்

கடந்த 05-06-00 அன்று விடுதலைப் புலிகளின் கடற்புலிகளால் வடமராட்சிக் கடற்பரப்பில் வைத்து சிறீலங்கா கடற்படைக்குச் சொந்தமான இரு டோராக்கள் மூழ்கடிக்கப்பட்டன. வடமராட்சிக் கடற்பரப்பில் எம்.ஐ 24 உலங்கு வானூர்திகளின் வழித்துணையோடு சென்ற 16 சுப்ப டோராக் களைக் கொண்ட அணியே புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானது. ஓயாத அலைகள்-3 இல் கடந்த 7-04-00 அன்றும் இரு டோராக்கள் நாகர்கோவில் கடற்பரப்பில் கடற்புலிகளின் பீரங்கித் தாக்குதலில் அழிக்கப்பட்டதும் யாவரும் அறிந்ததே. கடந்த மூன்று மாதங்களில் சிங்களம் மொத்தம் 5 கடற்கலங்களை இழந்துள்ளது

**சுப்பர் டோரா M.K II**

வகை: அதிவேக ரோந்துப்படகு
தயாரிக்கும் நாடும் நிறுவனமும்: இஸ்ரேலின் றம்ரா நிறுவனம் (IAI)
மொத்த நிறை: 54தொன்
நீளம்: 21.6 m
அகலம்: 5.5m
கரைக்கு வரக்கூடிய ஆழம்: 1.8m
வேகம்: 36 நொட்ஸ - 46 நொட்ஸ் வரைக்கும், தொடர்ச்சியான வேகம் 40 நொட்ஸ்
பொருத்தப்பட்டுள்ள ஆயுதங்கள்: 20 mm ஓர்லிக்கன் பீரங்கி-2 , 12.7mm கனரக இயந்திரத் துப்பாக்கிகள்-2
பாவிக்கக் கூடிய உந்து கணைகள்: கால் கஸ்ரொவ் 84 mm றொக்கட் லோஞ்சேர்ஸ்
றாடார்- றேதியோன் சேபேஸ் தேடி, 1 அலைவரிசை கொண்டது.
பணியாற்றும் சிப்பந்திகள்: 9-14 வரையான மாலுமிகள் பணியாற்றுவர்.
பொறுப்பதிகாரி: லெப்பிரினன் (தரைப்படையில் கப்டன் தரத்திற்கு சமமான பதவி)

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு. பழ.நெடுமாறன்

## வரலாறு அறியாமல் உளறக் கூடாது



தமிழீழ வரலாறு தெரியாமல் பேசும் முன்னாள் பாரத நிதிய மைச்சர் பா.சிதம்பரம் மன்னிப்புக் கேட்க வேண்டும். செக்கோசிலோ வாக்கியாவின் வரலாற்றோடு ஒப்பிடமுடியாது என்றும், இலங்கையில் சிங்களவர்களும் தமிழர்களும் தனி நாடுகளாக இருந்து பிறகு கட்டாயமாக ஒரு போதும் இணைக்கப் படவில்லை என்ற சிதம்பரத்தின் கூற்றை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

எங்கேயோ உள்ள செக்கோசிலோவாக்கியா வரலாற்றை அறிந்த சிதம்பரம் அருகே இருக்கும் ஈழம் பற்றிய உண்மைகளை அறியாமல் பேசியதற்கு தமிழர்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும். இலங்கைப் பிரச்சனையில் முன்னாள் பிரதமர் ராஜீவிற்கு ஒரு காலகட்டத்தில் ஆலோசகராக இருந்த சிதம்பரம், அடிப்படை வரலாற்று உண்மைகளை தெரியாமல் கூறிய ஆலோசனைகளின் விளைவாகவே ராஜீவ் தவறான முடிவுகளை மேற்கொள்ள நேர்ந்திருக்கின்றது என்பதும் இப்போது அம்பலமாகிவிட்டது. ■

தாய் ஆசிரியர் வலம்புரி ஜான்

## இனஉணர்வுக்கு எதிரானவர்களை வரலாறு ஒரு போதும் மன்னிக்காது.

ஒரு நாட்டைப் பிரிப்பதுதான் மனிதாபிமானமா என்று கேட்கிறார் மூப்பனார். ஈழத் தமிழர்களைக் கொன்று குவிக்கலாம், அவர்களது உரிமைகளை பிரிக்கலாம் ஆண்டுக்கணக்கில் அவர்களை அடிமைகளாக நடத்தலாம் அதன் பிறகும் அடிமைகளாக வாழுங்கள் என்று கீதோபதேசம் பண்ணலாமா?

ஈழத்தின் உதயத்தை ஒருகோடி மூப்பனார்களால் ஒத்திவைத்து விடமுடியாது. ஏன் தமிழர்கள் சிங்களவர்களோடு சேர்ந்து வாழவியலாது என்று அமெரிக்காவே பட்டியல் போடுகின்றது. சிங்களவர்கள் சிரமப் படுகின்றபோது மாத்திரம் மனிதாபிமானம் பேசுகிற மூப்பனார் தமிழர்கள் அடிமைகளாக நடத்தப்படுகின்ற போது எங்கே இருந்தார்? தமிழ்ப்பெண்களின் மானம் பறி போனபோது எங்கே இருந்தார்?

மொழி, இன உணர்ச்சிக்கு எதிராக நிற்கிற மூப்பனார், சிதம்பரத்தை வரலாறு ஒரு போதும் மன்னிக்காது. ■

புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஸ்ணசாமி

## சிங்களவர்க்கு இந்திய இராணுவத்தை பயன்படுத்தும் நோக்கம்தான் உண்டு!



சிங்கள அரசிற்கு இந்தியப் படைகளை பயன்படுத்தும் எண்ணம் தான் உள்ளதே தவிர அமைதிப் பேச்சுக்களில் நம்பிக்கை இல்லை. இது வெட்ட வெளிச்சமாகத் தெரிகின்றது. இதற்கு பாரத அரசு பலியாகி விடக்கூடாது. இழந்த உரிமைகளுக்காக போராடும் தமிழ் மக்கள் மீது யுத்தம் தொடுத்து வரும் சிங்கள அரசினது இனவாதப் போக்கிற்கு வேறுநாடுகள் துணைபோவதையும் இந்தியா அனுமதிக்கக் கூடாது. ■

பேராசியர் கு. அரசேந்திரன்

## உலகத் தமிழினத்தின் வரலாறு

பிரபாகரன் ஒரு மனிதனின் பெயர் மட்டுமல்ல. அது காலத்தின் பெயர், தமிழீழத்தின் உயிர் என்றார் உணர்ச்சிக் கவிஞர் காசிஆனந்தன். என்னால் அத்துடன் நிறுத்த முடியவில்லை. பிரபாகரன் தமிழ் ஈழத்தின் உயிர் மட்டுமல்ல தமிழ் இனத்தின் உயிர், உலகத் தமிழினத்தின் வரலாறு, பிரபாகரனுக்குப் பின் பிரபாகரனுக்கு முன் என்றுதான் எதிர்காலத்தில் எழுதப்படும். ■

இந்தியப் பிரதமர் வாஜ்பாய்

## ஈழத் தமிழர்கள் மீதான அடக்குமுறைகள் உடன் நீக்கப்படவேண்டும்.



ஈழத் தமிழர்களுக்கு எதிரான அடக்கு முறைகளை சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா கைவிட வேண்டும். தமிழர்க்குரிய உரிமைகளை வழங்கும் விடயத்தில் திருமதி சந்திரிகா வெளிப்படையாக நடந்து கொள்ள வேண்டும். சிறீலங்கா அரசின் கோரிக்கைக்கு இணங்க எக்காரணம் கொண்டும் இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்ப மாட்டோம். ■



# நீறுபூத்துக் கிடந்த தமிழகம் நெருப்பாய் எரிகிறது

தமிழகத்தின் பட்டிதொட்டிகளிலெல்லாம் இன்று பேசப்படுகின்ற விடயமாக, தமிழீழப் பிரச்சனையே திகழ்கின்றது. தமிழீழ விடுதலைப் போராட்டம் குறித்து, தமிழீழ மக்களின் துன்பதுயரம் குறித்து சற்றுக் கூடுதலான மௌனத்தைச் சாதித்து வந்த தமிழகம் இன்று, வெளிப்படையாக தனது கருத்துக்களை முன் வைக்கின்றது. தமிழீழத்தை, தமிழீழ மக்களின் விடுதலையை முழுமையாக எதிர்பார்த்துக் காத்திருக்கும் போக்கே பொதுவாக தமிழகத்தில் தற்போது வெளிப்படுகின்றது. அதற்கான குரல்கள், எங்கும் பரவலாக ஒலிக்கின்றன. உள்ளத்தில் ஊமையாய்க் கிடந்த, இன உணர்வு புத்துணர்ச்சி பெற்று கிளர்ந்திருக்கின்றது.

சில தமிழகக் கட்சிகள், அன்று தொட்டு இன்று வரை தமது நிலைப்பாட்டில் மாற்றம் எதனையும் ஏற்படுத்தாமல், தளம்பல் தன்மையின்றி தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முழுமையாக ஆதரித்து வந்துள்ளன. தமிழீழ விடுதலைப் போராட்ட வெற்றிக்காய் பல தளங்களில் குரலெழுப்பி வந்துள்ளன. சில பத்திரிகைகளைத் தவிர, பொதுவான பத்திரிகைகள் தமிழீழப் பிரச்சனைகள் குறித்து தீண்டிப்பார்க்கவும் அஞ்சி, நமக்கேன் வம்பு என்ற நிலைப்பாட்டில் அவை மௌனித்தன.

தமிழின உணர்வுக்கு எதிரான, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை எதிர்ப்பதென்றே முடிவெடுத்துக்கொண்ட சக்திகளால் வெளியிடப்படும் பத்திரிகைகளோ, விடுதலைப் போராட்டத்தையும், விடுதலைப் புலிகளையும் கொச்சைப் படுத்துவதிலும், சேற்றைவாரி இறைப்பதிலும் முழுமூச்சாய் ஈடுபட்டிருந்தன.

இன்று, தமிழகம் புதுவிதப் பொலிவும், ஈழத்தமிழ் மக்களின் விடுதலையைக் காணும் ஆவலில் காத்திருக்கின்றது.

இந்திய இராணுவம் சிறீலங்கா இராணுவத்திற்கு உதவி வழங்கப் போகின்றது என்ற பேச்சு அடிபட ஆரம்பித்ததிலிருந்து, தமிழ்நாட்டில், அதன் இயல்பான உணர்வு கிளம்ப ஆரம்பித்துவிட்டது. தமிழர் தேசிய இயக்கம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சி, புதிய தமிழகம் கட்சி, விடுதலைச்சிறுத்தைகள் என்பன, சிறீலங்காவிற்கு இந்திய இராணுவம் உதவி வழங்கக்கூடாது என கண்டிப்பாக வலியுறுத்தின. சில கட்சிகளோ, விடுதலைப் புலிகளுக்கு இந்திய அரசு உதவி வழங்க வேண்டும் என வலியுறுத்தின.

விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்திய அரசு உடனடியாக நீக்கவேண்டும் என, பல கட்சிகளின் மத அமைப்புக்கள் வலியுறுத்தின.

தமிழகப் பத்திரிகைகள் சஞ்சிகைகளோ ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவான நிலைப்பாட்டை வரித்துக்கொண்டு, கட்டுரைகள், செய்திகள், கருத்துக்களை வெளியிட்டன.... வெளியிட்டு வருகின்றன.

இது நாள் வரையும் விடுதலைப் புலிகள் குறித்து உண்மைக்குப் புறம்பான செய்திகளைப் பிரசுரித்து வந்த பத்திரிகைகள் சஞ்சிகைகள்கூட, ஏற்பட்டுள்ள பொது உணர்வை மீறமுடியாத நிலையில், விடுதலைப் புலிகளின் வெற்றிகளை அழகான படங்களுடன் பிரசுரித்தன.

இந்திய இராணுவம் சிறீலங்கா இராணுவத்திற்கு உதவிசெய்யக் கூடாது என்பதை வலியுறுத்தி, கோயம்புத்தூரில், தமிழ் நாட்டு மாணவர்கள் இருவர் தீக்குளிக்க முனைந்தது நிலைமையின் தீவிரத்தை உணர்த்தப் போதுமானது.

சென்னை ஐக்கிய கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமை ஆயர் ஆரோக்கியசாமி ஆண்டகை, சிறீலங்காப் படையினரின் பிடியில் சிக்கித் தவிக்கும் தமிழ் மக்களின் நிலை குறித்து கவலை தெரிவித்ததுடன், விடுதைலப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

புகழ்பூத்த தமிழக எழுத்தாளர்கள், பேச்சாளர்கள் தமது முன்னைய தயக்கங்களைக் கைவிட்டு, தமிழீழ மக்களின் விடுதைல குறித்து வெளியரங்கமாகவே செயற்பட ஆரம்பித்துள்ளனர்.

மத்திய அரசிலும் தமிழகக் கட்சிகளின் செல்வாக்கு கணிசமான அளவு இருப்பதால், மாநில மக்களின் உணர்வுப் போக்கையும் கவனத்தில் எடுக்க வேண்டிய நிலையிலேயே இந்திய மத்திய அரசு உள்ளது.

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் அவர்கள், சிறீலங்காவிற்கான இராணுவ உதவியை நிராகரித்தார் என்பதுடன், சிறீலங்கா அரசு, தமிழ் மக்களுக் கெதிரான கொள்கைகளைக் கைவிடவேண்டும் என வெளியரங்கமாகவே அறிவித்தார்.

தமிழகத்தில், தமிழீழம் உதயமாக வேண்டும் என்ற கருத்துக்களும், கூடாது என்ற கருத்துக்களும் ஆக்ரோசமாக மோதிக்கொள்ளுகின்றன. தமிழீழம் உதயமாகவேண்டும் என்ற கருத்து பூதாகரமாகி, தமிழீழம் விடுதலைப் பெறக்கூடாது என்ற கருத்துக்களை, குரல்மெலியச் செய்துள்ளன.



திரு. பழ. நெடுமாறன் தலைமையில் பெரும் இன உணர்வுப் படையே அணிவகுத்து நிற்கின்றது. திரு. வைகோ, டாக்டர். ராமதாஸ், டாக்டர். கிருஸ்ணசாமி போன்ற கட்சித் தலைவர்களின் பின்னால் வெகுசனங்கள் திரண்டு நிற்கின்றன. தமிழீழத்தை அங்கீகரி! சிறீலங்கா இராணுவத்திற்கு உதவி செய்யாதே! விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கு என்பது இத்தகைய இன உணர்வுத் தலைவர்களின் பின்னால் திரண்டு நிற்கும் தமிழக மக்களின் பொதுக்கோசமாகியுள்ளன.

தமிழகத்தில், உலகச் செய்தி நிறுவனங்கள் மக்களிடம் அபிப்பிராயம் பெற்று, செய்திகள் வெளியிடுகின்றன. தமிழகத்தில் தங்கியுள்ள, ஈழத்தமிழ் மக்கள், விடுதலைப் புலிகளின் வெற்றிக்காக காத்திருக்கின்றனர் என பி.பி.சியின் செய்தி முகவர் செய்தி தெரிவிக்கின்றார். அதேவேளை, விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் திட்டமிட்டு பிரச்சாரம் செய்யும், துக்ளக் சோ போன்றவர்கள் ஈ.பி.டி.பி, ரெலோ, ஈபி.ஆர்.எல்.எவ் போன்றவர்களைப் பேட்டிகண்டு, ஈழத்து அகதிகள் சொல்லுகின்றார்கள் என விடுதலைப் புலிகளுக்கெதிரான கருத்துக்களைப் பரப்புவதிலும் ஈடுபடாமல் இல்லை.

விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தைப் பிடித்தால், அங்குள்ள ஐந்து இலட்சம் தமிழ் மக்களை யார்தான் காப்பாற்றுவது? என்று இத்தகைய பிரக்கிருதிகள் நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர். இவர்களைப் பொறுத்த வரையில், செம்மணிகளைத் தோற்றுவித்த அம்மணியின் ஆட்சியில் தமிழீழ மக்கள் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் வாழ்வார்கள் போலும்.

எது எப்படியிருந்தபோதும், இத்தகைய உதிரிகளைத் தவிர்த்து ஒட்டுமொத்தமான தமிழகம், விடுதலைப் புலிகளின் வெற்றியையும், தமிழீழ விடுதலையையும் கொண்டாடும் ஆவலுடன் காத்திருக்கின்றதென்பதே உண்மையாகும். ■

# கிடைக்கப் பெற்ற மாவீரர்களின் பெயர்கள்





*தொடரும் ஓயாத அலைகள் நடவடிக்கையில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் கிடைக்கப்பெற்ற பெயர் விபரங்கள்*

- **கப்டன் நிலவொளி அல்லது சஜந்தன்**
  *குமாரசூரியர் பிரதீபன்*
  *யாழ்ப்பாணம்*
- **கப்டன் யோகா**
  *சிறிராம் வளர்மதி*
  *மட்டக்களப்பு*
- **லெப். அருள்மணி**
  *அருள்பாஸ்கரன் சதீசன்*
  *யாழ்ப்பாணம்*
- **2ம் லெப். வான்முகில்**
  *சதாசிவம் சதீபா*
  *மட்டக்களப்பு*
- *எல்லைப்படை வீரர்* **சண்முகநாதன் அன்பழகன்**
  *யாழ்ப்பாணம்*
- **2ம் லெப் அறிவரசன்**
  *சுப்பிரமணியம் சிவலோகநாதன்*
  *திருமலை*
- **கப். நற்றவன்**
  *ராசரத்தினம் காந்தரூபன்*
  *திருமலை*
- **வீரவேங்கை இலக்கியா**
  *வேலுச்சாமி மகேஸ்வரி*
  *கிளிநொச்சி*
- **வீரவேங்கை குறிஞ்சி அல்லது தர்சி**
  *தங்கரத்தினம் புஸ்பமலர்*
  *யாழ்ப்பாணம்*
- **வீரவேங்கை வைகை அல்லது மதி**
  *பேரின்பநாதன் புவனேஸ்வரி*
  *யாழ்ப்பாணம்*
- **வீரவேங்கை யாழ்மொழி**
  *நல்லையா தாரணி*
  *யாழ்ப்பாணம்*
- **வீரவேங்கை தயாளினி**
  *சிவசுப்பிரமணியம் ஜெனி*
  *யாழ்ப்பாணம்*
- **வீரவேங்கை புவனா**
  *நடராசா கலாவதி*
  *யாழ்ப்பாணம்*
- **வீரவேங்கை சுகந்தி**
  *சுப்பிரமணியம் விஜயகலா*
  *யாழ்ப்பாணம்*
- **வீரவேங்கை கலைப்பிரியா**
  *யோகேஸ்வரி நிர்மலா*
  *யாழ்ப்பாணம்*

*05-06-00 அன்று வடமராட்சிக் கடற்பரப்பில் இடம்பெற்ற இரு டோராக்களின் அழிப்பின் போது. வீரச்சாவடைந்தவர்கள்.*

- **லெப்.கேணல் சசிகரன் அல்லது ஆண்டான்**
  *முத்துக்குமார் சதீஸ்குமார்*
  *யாழ்ப்பாணம்*
- **வீரவேங்கை மதியழகன்**
  *முனுசாமி சசிகுமார்*
  *புதுக்குடியிருப்பு*
  *முல்லைத்தீவு*
- **வீரவேங்கை மதிவண்ணன்**
  *ஞானப்பிரகாசம் அன்ரனி ஜெராட்*
  *யாழ்ப்பாணம்*
- **வீரவேங்கை சத்தியவேணி**
  *வேலு சறோஜினி*
  *கிளிநொச்சி*
- **வீரவேங்கை ஜெயசுதா**
  *தியாகராசா பகீரதி*
  *யாழ்ப்பாணம்*
- **வீரவேங்கை மருதா**
  *இராசதுரை நேசராணி*
  *யாழ்ப்பாணம்*
- **வீரவேங்கை அமுதப்பிரியா**
  *அமிர்தநாயகன் மேரிபுளோரன்*
  *யாழ்ப்பாணம்*
- **வீரவேங்கை குவிக்மாறன்**
  *குலசேகரம் செல்வக்குமார்*
  *யாழ்ப்பாணம்*
- **வீரவேங்கை குட்டிக்கண்ணன்**
  *சிவஞானசம்பந்தமூர்த்தி அரசலிங்கம்*
  *திருமலை*
- **வீரவேங்கை மதிவதனன்ள**
  *நவரத்தினம் சசிகரன்*
  *யாழ்ப்பாணம்*
- **வீரவேங்கை இளஞ்சேரன்**
  *சோமசுந்தரம் ஜெகதீஸ்வரன்*
  *திருமலை*
- **வீரவேங்கை கலைமுகிலன்**
  *இராமச்சந்திரன் ஜனகுமார்*
  *கிளிநொச்சி*




அடக்குமுறை இராணுவங்களின் பிடியில் சிக்கி எம்மக்கள் பட்ட வேதனைகள் கொஞ்சமா நஞ்சமா..? மக்களின் கசப்பான அந்த வேதனை அனுபவங்களை வாங்குமூலம் என்ற இந்தப் பகுதிக்கு அனுப்பிவைக்குமாறு வாசகர்களைக் கேட்டிருந்தோம். இதோ, எமது ஜேர்மன் வாசகியின் வாக்குமூலம்.

வெளியிலே மைதானத்திலே சின்னச் சின்னப்பிள்ளைகள் எல்லோரும் விளையாடிக் கொண்டிருக்கினம். சில பிள்ளையளோடை, அவையளின்ரை தாய் தகப்பன்மாரும் நிற்கினம்.

இவரை இன்னும் காணேல்லை, வழக்கத்திலை நாலு மணிக்கெல்லாம் வந்திடுவார். இண்டைக்கென்ன 5 மணியாகியும் காணேல்லை. யன்னலாலை அவர் வாற வழியைப் பார்த்துப் பார்த்துக் கொண்டு நிற்கின்றேன். வருகிற பாடாய்த் தெரியவில்லை. நல்லா வேலை கொடுத்திட்டாங்களோ? பிள்ளையளும் ரியூசனுக்கு போயிட்டினம்.

மே மாதம் என்ற படியால் பனிபோய் வெய்யிலும் வந்திட்டுது. இந்த ஜேர்மன் சனம் வெய்யிலைக் கண்டால் வீட்டுக்குள்ளேயே இருக்காதுகள் எப்பவும் வெளியிலைதான் நிக்குங்கள்.

எனக்கென்னவோ ஜேர்மனிக்கு வந்து 3 வருசமாகியும் ஒன்றிலேயும் மனசு ஒட்டமாட்டனென்குது. ஓம் நான் 10.5.86 இலை ஜேர்மனிக்கு வந்தனான். இண்டைக்கு கலண்டர் 2.5.89 எண்டு காட்டுது.

இந்த 3 வருசத்திலையும், இந்த மனசு எப்படி எப்படியெல்லாம் கிடந்து தவிக்குது. என்ரை மூன்று பிள்ளைகளையும் என்ரை கணவரையும் விட்டால் வேறை ஒண்டையுமே எனக்கிங்கை பிடிக்கேல்லை. மனசு ஒண்டிலையும் ஒட்டமாட்டேனெண்டுது.

எப்பவும் ஊரிலை விட்டிட்டு வந்த தம்பிமாரையும் தங்கச்சிமாரையும், அண்ணனையும், அப்பா, அம்மாவையும் தான் மனசு நினைச்சுக் கொண்டு இருக்குது.

எப்படிச் சொன்னாலும் நான் ஒரு சுயநலக்காரிதான் எனக்கு மனசு வந்ததுதானே அதுகளை அங்கை விட்டுட்டு இங்கை மட்டும் ஓடிவர. இப்ப இருந்து புலம்பிறன். என்ன பிரயோசனம்.

எனக்கு அங்கை போகோணும். அம்மான்ரை முகத்தைப் பார்க்கோணும். தங்கைச்சிமாரோடை சினிமாப்பாட்டிலை இருந்து அரசியல் வரை எல்லாத்தைப்பற்றியும் அரட்டை அடிக்கோணும். முக்கியமாக தம்பியைப் பிடிச்சு, கட்டிப் பிடிச்சுக் கொஞ்சோணும். அவனை ஆமியள் தேடுறாங்களாம்.

அவன் எங்கே? என்று கேட்டுக் கேட்டு என்ரை சகோதரங்களை மட்டுமில்லை. ஊர்ச்சனங்களையெல்லாம் சித்திரவதைப்படுத்திறாங்களாம். தங்கைச்சிதான் இதெல்லாம் எனக்கு எழுதிறவள்.

நேற்றும் சாமத்திலை, கனவிலை தம்பிதான், அவன் சாப்பிடறதுக்கெண்டு மேசையிலை இருக்க, அம்மா சோறு போட்டுக் கொண்டிருக்க ஆமி வந்திட்டான் போலையும், தம்பி சாப்பிடாமலே ஓடுகிற மாதிரியும் கனவு. நான் முழிச்சிட்டன். எனக்கு ஒரே அழுகையாக வந்திட்டுது.

எத்தினை நாளைக்கெண்டுதான் என்ரை தம்பிமார் சாப்பிடாமல், குடியாமல், நித்திரை கொள்ளாமல் ஓடித்திரியப் போறாங்கள். கடவுளே! எல்லாத்தையும் நிற்பாட்டு. என்ரை தம்பிமார் வீட்டை போயிடோணும். அவங்கள் மட்டுமில்லை எல்லாப் பிள்ளையளும் வீட்டுக்குப் போயிடோணும். கடவுளே....! நீதான் துணை.

தலைக்கு மட்டும் தலையணை இருந்தால் போதாதெண்டு காலுக்கொரு தலையணை, கையுக்கொரு தலையணை எண்டு வைச்சுப் படுக்கிறவங்கள் என்ரை தம்பிமார்.

இப்ப எங்கை....! எந்தக் கல்லிலையும் முள்ளிலையும் படுக்கிறாங்களோ?!

நானும் போகோணும். அவங்களோடை வாழோணும். எனக்கு அடக்க இயலாமல் அழுகை வந்திட்டுது. விக்கி விக்கி அழத் தொடங்கீட்டன். சத்தத்துக்கு இவர் எழும்பிட்டார். என்ன இப்ப நடந்திட்டதெண்டு, இப்படி அழுகிறாய்? ஆதரவாய்த்தான் கேட்டார்.

நான் போப்போறன் ஊருக்கு. எனக்கு அம்மாவைப் பார்க்கோணும். பரதனைப் பிடிச்சுக் கொஞ்சோணும் போலை இருக்கு.

'என்ன இப்படி பைத்தியக் கதை கதைக்கிறாய். அப்ப அங்கை போய் என்ன சாகப்போறியே? நீயாவது இங்கை இருக்கிறாயெண்டு கொம்மாவும் கொப்பரும் எவ்வளவு நிம்மதியாய் இருப்பினம்.'

'..........'

'இன்னும் ஒரு வருசத்திலை பிரச்சனை எல்லாம் முடிஞ்சிடும். அதுக்குப் பிறகு நாங்களேன் இங்கை இருக்கப் போகிறோம். ஐஞ்சு பேருமாப் போவோம். இப்ப படு, நாளைக்கு எழும்போணும் எல்லே.'

ஓம் எண்டு சொல்லி படுத்திட்டன். ஆனால் நித்திரையே வரேல்லை. கண்ணை மூடிக் கொண்டுதான் படுத்திருந்தனான். மனசு மட்டும் அப்படியே கொட்டக் கொட்ட விழிச்சுக் கொண்டு இருந்தது.

'என்ரை தம்பிமாரைக் காப்பாற்று. அம்மா அப்பா தங்கைச்சிமாருக்கு ஒண்டும் நடந்திடக் கூடாது. எல்லாரையும் காப்பாற்று' எண்டு மனசு எல்லாத் தெய்வங்களையும் மன்றாடிக் கேட்டுக் கொண்டிருந்தது. பிறகு எப்படியோ நித்திரையாயிட்டன்.

காலையில் எழும்பி இவரையும் வேலைக்கு அனுப்பி, பிள்ளையளையும் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பிப் போட்டன்.

எனக்கு வேலை செய்யவும் அனுமதியில்லை. இந்த நகரத்தையும் விட்டு, ஒரு இடமும் போகக் கூடாது.

எனக்கு அதிலையெல்லாம் கவலையில்லை. கவலையெல்லாம் ஊரிலை இருக்கிற என்ரை உறவுகளைப் பற்றித்தான்.

எண்டாலும் ஒரு ஸ்ரூடியோவிலை களவா மூன்று மணித்தியாலம் வேலை செய்யிறன். வேலை அனுமதிப் பத்திரம் இல்லாமல் வேலை தர அந்த லேடி பஞ்சிப்பட்டவதான். பிறகு ஏதோ ஓமெண்டு தந்திட்டா. நல்லவா. பிள்ளையள் பள்ளியாலை வருமுன்னம், வேலையை முடிச்சிட்டு ஓடிவந்து சமைச்சுப் போடுவன்.

என்னையறியாமலே என்ரை கண்கள். அவர் வாறாரோ எண்டு யன்னலுக்குள்ளாலை பாத்துக் கொண்டுதான் இருந்தன். பார்த்துக் கொண்டிருக்கவே அவர் வாறார்.

என்ன..! ஒரு மாதிரி தளர்ந்து போய் வாறார்.

பாவம், நல்லா வேலை வாங்கிப் போட்டாங்களோ? ஊரிலை எத்தினை பேரைத் தனக்குக் கீழை வைச்சு வேலை வாங்கினவர். இங்கைவந்து இவங்களுக்கு கீழே.....!

ஏன் இப்படியெல்லாம் நடந்தது? ஏன் இந்த ஜேர்மனிக்குத் தனியாக வந்து சேர்ந்தோம். எல்லாம் ஏதோ பிரமையாய்.... நம்ப முடியாததாய்...........

எனக்கு ஓடிப்போய் அம்மான்ரை மடியிலை முகத்தை வைச்சு அழோணும் போலை இருக்கு.

அம்மா முதுகைத் தடவி தலையை கோதிவிடுவா.

அப்பான்ரை கையைப்பிடிச்சபடி, கதைச்சுக் கொண்டு ஊரெல்லாம் சுத்தோணும் போலை ஆசை ஆசையாய் வருகுது.

எங்கையேனும் போட்டு வந்தால் 'அக்கா களைச்சுப் போட்டியள் இந்தாங்கோ குடியுங்கோ' என்று தங்கைச்சிமார் எதையாவது குடிக்கத்தருவினம். அந்த அன்பு வேணும் எனக்கு. அதிலை நான் குளிக்க வேண்டும். மனசு சொல்லுக் கேளாமல் அடம்பிடிச்சுக் கொண்டு ஊரையும் உடன் பிறப்புக்களையும் சுற்றிச் சுற்றிக் கொண்டே நிக்குது.

இப்படியே நான் மனசை அலையவிட்டுக் கொண்டிருக்க வீட்டுக்குள்ளை வந்திட்டார். நான் என்ரை கவலையொண்டையும் இவருக்கு காட்டக் கூடாதெண்டுடக் கெண்டு சிரிச்சுக் கொண்டு 'என்ன வேலை கூடவே லேற்றா வாறியள்' எண்டு கேட்டுக் கொண்டே குசினிக்குள்ளை போய் ரீயைப் போட்டன்.

ரீயோடை வெளியிலை வந்து

# எமது போராட்டமும் தன்சார்புப் பொருண்மியமும்

## விவசாயம்

தமிழீழ நிலப்பயன்பாட்டை நோக்குவோமாயின் தமிழீழத்தின் மொத்த நிலப்பரப்பில் 36.6 வீதமானாது காடு சூழ்ந்தும், 14.47 வீதமானது நெற் செய்கைக்காகவும் 20.64 வீதமானது மேட்டுநிலச் செய்கைக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. அத்துடன் தமிழீத்தின் மொத்த நிலப்பரப்பில் 27.3 வீதமானது (நிரந்தரமானது) நெற் செய்கைக்காகவும், 4.72 வீதமானது தமிழீழ மக்களுக்கான கட்டடங்ளையும், 5.49 வீதமானது நீர் நிலைகளால் மறைக்கப்பட்டும் உள்ளது. அதே வேளையில் 13.62 வீதமானது மணற்தரை, புற்தரை, தரிசுக் காணிகளாகப் பயன்படுத்தப்படாமல் உள்ளது.

இலங்கையின் வரண்டவலயப் பிரதேசத்தை கொண்டதாக தமிழீழம் காணப்படினும் சமதரையான நிலமும், பருவ கால மழையும், ஆறு, குளங்களின் எண்ணிக்கையும் இதை ஒரு விவசாய உற்பத்திக்கு ஏதுவான ஒரு நாடாக மாற்றி அமைத்துக் காட்டி நிற்கின்றது. தமிழீழத்தின் தேவைக்கு அதிகமான இயற்கைத் தாவரங்கள் (காடுகள்) காணப்படுகின்றமை நாம் அறிந்ததே. எனினும் இத் தாவரங்களின் பரம்பல் தமிழீழத்தில் எவ்வாறு காணப்படுகின்றது என்பது பின்வருமாறு காணப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரை பெரும்பாலான நிலப்பகுதி காடுகள் அற்ற பிரதேசமாகக் காணப்படினும் வடமராட்சிப் பகுதியில் தொண்டமானாறு கடல் நீரேரியின் தென்மேற்கு கரையோரப் பகுதியை அண்டிய ஒரு சிறிய நிலப்பரப்பில் என்றும் பசுமையாகக் காட்சிதரும் வரண்டவலயக் காடுகள் காணப்படுகின்றன. அத்தோடு இப்பகுதியில் கரையை அண்டிய பகுதியில் சதுப்பு நிலத் தாவரங்களும் காணப்படுகின்ன.

இதற்கு மாறாக கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்பாலான நிலப்பகுதியில் என்றும் பசுமையான வரண்ட காடுகள் காணப்படுகின்றன. மிகச் சொற்பமான பகுதியே காடுகளற்ற பகுதியாகக் காணப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏறக்குறைய 2/3 நிலப்பகுதியில் என்றும் பசுமையாக வரண்டகாடுகள் காணப்படுகின்றன. எஞ்சிய பகுதியில் பெரும்பாலான நிலப்பகுதி ஈர இலையுதிர் காடுகளாக காணப்பட மிகச் சொற்பமான பகுதி காடுகள் அற்ற பகுதியாக உள்ளது.

வவுனியா மாவட்டத்தில் ஏறத்தாழ 80 வீதத்திற்கு மேல் ஈர இலையுதிர் காடுகள் பரம்பிக் காணப்பட ஏனைய பகுதிகள் பெரும்பாலும் காடுகளற்ற பகுதியாகக் காணப்படுகிறது. மன்னார் மாவட்ட தாவரப்பரம்பலை அவதானிக்கும்போது நான்கு வகையான வலயங்களை இனம் காணலாம். இதில் அயன சவனாக் காடுகள். ஈர இலையுதிர் காடுகள் ஒப்பீட்டு ரீதியில் குறைந்தளவு காணப்பட வரண்ட என்றும் பசுமையான காடுகளும் காடுகளற்ற நிலப்பகுதியும் நிலப்பரப்பை உள்ளடக்கியுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் மூன்று வகையான தாவர வலயங்களை இனம் காணலாம். ஏறத்தாழ 1/3 பகுதி காடுகளற்ற நிலமாக காணப்பட 1/3 பகுதி என்றும் பசுமையான ஈரக் காடுகளாக காணப்பட, எஞ்சிய 1/3 பாகம் ஈர இலையுதிர் காடுகளாக இருக்கிறது. மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை கிழக்குக் கரையோரம், தெற்கு, தென்மேற்கு, மத்திய பகுதிகள் பெரும்பாலும் காடுகளற்ற பகுதியாக இனம் காணப்படினும் மிகச் சிறிய அளவில் (கிழக்கு கரையோரத்தை அண்டி) இடை ஈர என்றும் பசுமையான காடுகளும் சிறுபற்றைக் காடுகளும் காணப்படுகின்றன. மேற்கு, வடமேற்கு பாகங்கள் ஈர இலையுதிர் காடுகளைக் கொண்டுள்ளது. இதனிடையே ஒரு சிறிய நிலப்பரப்பில் வரண்ட என்றும் பசுமையான காடுகள் காணப்படுகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் 1/3 பங்கு நிலப்பகுதி காடுகளற்ற நிலப்பகுதியாகக் காணப்படுகின்றது.

எஞ்சிய 2/3 பகுதியில் பெருமளவு பகுதி வரண்ட, இடை ஈர, பசுமையான காடுகளையும் எஞ்சிய சிறு பகுதி புற்தரைகளையும் இலையுதிர் காடுகளையும் கொண்டுள்ளது. ■

---

பார்த்தாலும் இவர் ஒருமாதிரி இருக்கிறார். வழக்கம் போலை முஸ்பாத்தியும் விடேல்லை. சிரிக்கவும் இல்லை. இவர் இப்படி இருக்க மாட்டார். முஸ்பாத்தி விடுவார். இல்லாட்டி கோபப்படுவார். கவலைப்படுகிற மாதிரி எல்லாம் காட்டமாட்டார். இண்டைக்கென்ன நடந்திட்டுது? ஏன் இப்படி இருக்கிறார். சரியாகக் கதைக்கவும் மாட்டாராம்.

நான் இவற்றை மூட்டை நல்ல தாக்க பிள்ளையளின்ரை பகிடியளைச் சொல்லிப் பார்த்தன். கின்டர் கார்டன் ரீச்சர் சொன்ன கதையளையும் சொல்லிப்பார்த்தன். ஒண்டுக்கும் மாறமாட்டாராம். அப்படியே இருக்கிறார். இப்ப ஏதோ சொல்ல வாறார் போலை இருக்கு. நான் அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

'பரதன் போயிட்டான்' என்றார். எனக்கொண்டுமே புரியவில்லை.

'பரதன் எங்களையெல்லாம் விட்டிட்டு போயிட்டான்' என்றார் மீண்டும்.

இப்ப எனக்கு ஏதோ ஒன்று உறைத்தது.

சடாரென்று ஆரோ என்ரை நெஞ்சிலை சுத்தியலாலை ஓங்கி அடிச்சது போலை இருந்தது. அப்பிடியே நெஞ்சைப் பிடிச்சுக் கொண்டு நான் இருந்திட்டன். என்ரை தம்பி...! பரதா..!

போயிட்டியோ....!

இப்ப அழத் தொடங்கீட்டன்.

இருக்காது அவன் செத்திருக்க மாட்டான். அவனை நான் பார்க்கோணும். இவரைப் பார்த்தன். என்ன செய்யிறதெண்டு தெரியாமல் அப்பிடியே இருக்கிறார். 'உண்மையான நியூஸ் தானோ அது?' இவரைக் கேட்டன். இல்லையெண்டு சொல்லமாட்டாரோ என்ற பயமும் ஏக்கமும் நிறைந்த அவா எனக்குள்.

'தகவல் நடுவச் செய்திகளிலை அப்படித்தான் சொல்லுறாங்கள். பிழையான செய்தியாயும் இருக்கலாம்.' இவர் என்னை இப்ப ஆறுதல்ப்படுத்த சும்மா சொன்னார். எனக்கு அவன் செத்திட்டான் எண்டு நம்பவே ஏலாதாம். நானும் தகவல் நடுவங்களுக்கு அடிச்சுப் பார்த்தன். புனைபெயர், அப்பான்ரை பெயர், வயது எல்லாம் சரியாகத்தான் சொல்லுறாங்கள்.

'மே முதலாம் திகதி பருத்தித்துறைப் பொறுப்பாளர் மொறிஸ் ஆமியோடை நேரடியா மோதி வீரச்சாவு அடைஞ்சிட்டார்' எண்டு சொல்லுறாங்கள். பருத்தித்துறை எல்லாம் கர்த்தாலாம். கதவடைப்பாம். கறுப்புக் கொடியாம்.

கடவுளே...! இந்தச் செய்தியெல்லாம் பொய்யா இருக்கோணும். நான் பள்ளிக் கூடத்தாலை வீட்டை மத்தியானம் சாப்பிடப் போகேக்கை, அப்படியே தவண்டு வந்து மூ....த்தக்கா என்று இப்படியே அஞ்சு விரலையும் என்ரை வெள்ளைச் சட்டையிலை பதிச்சிடுவான். நான் அவனை தூக்கிக் கட்டிப்பிடிச்சுக் கொஞ்சுவன். அம்மாதான் 'வெள்ளைச் சட்டை ஊத்தையாகுது' என்று கத்துவா.

எனக்கு பத்து வயசாயிருக்கேக்கை, அவன் பிறந்த உடனை அப்பாவோடை மந்திகை ஆஸ்பத்திரிக்கு போய்ப் பார்த்தனான். பஞ்சு மாதிரி இருந்தவன். என்ரை விரலைக் குடுக்க அப்படியே இறுக்கிப் பொத்தி வைச்சிருந்தவன்.

அப்பா, அம்மாவோடை கதைச்சுக் கொண்டிருக்க, நான் அவனைத்தான் பார்த்துக் கொண்டும், தொட்டுக் கொண்டும் இருந்தனான்.

எனக்கும் அவனை விட்டிட்டுப் போக மனம் வரவில்லை. வாச்சர் வந்து 'ஆறு மணியாச்சு எல்லோரும் போங்கோ' எண்டிட்டான். அப்பா அவன்ரை கைக்குள்ள இரண்டு ரூபா திணிச்சு விட்டார். இன்னும் கொஞ்ச நேரம் நிற்க விட்டான்.

எனக்கு அப்பாவோடை வீட்டை திரும்பிப் போகேக்கையும் அவன்ரை மெத்தென்ற பாதம்தான் நினைவுக்குள்ளை இருந்தது. சுருட்டை மயிரோடை எவ்வளவு வடிவாயிருந்தான். இப்ப அவன் உலகத்தில இல்லையோ..! நெஞ்சு கரைஞ்சு கண்ணீராய் ஓடிக் கொண்டே இருந்திச்சு.

முதன் முதலா அவன் நடக்கத் தொடங்கினபோது எவ்வளவு சந்தோசமாக இருந்திச்சு. கொஞ்சம் வளர்ந்தாப்போலை, இரவு படுக்க வைக்கேக்கை 'மூத்தக்கா கதை சொல்லுங்கோ' எண்டு அடம் பிடிப்பான். ஒவ்வொரு நாளும் கதை சொல்லிச் சொல்லி எனக்குத் தெரிந்த கதையெல்லாம் முடிஞ்சிடும்.

'மூத்தக்கா, கதை சொல்லுங்கோ. இல்லாட்டி படுக்க மாட்டன்' என்பான் பிறகு நானே இயற்றி இயற்றிக் கதையெல்லாம் சொல்லுவன். அப்படியே என்னை இறுக்கிக் கட்டிப்பிடிச்சுக் கொண்டு நித்திரையாப் போடுவான்.

இப்ப எனக்கு அவனைக் கட்டிப் பிடிக்கோணும் போல ஒரே அந்தரமாக இருக்குது. நெஞ்செல்லாம் ஏக்கமாக இருக்கு. அவனைப் பார்க்கோணும். நிறையக் கதைக்கோணும். மூத்தக்கா என்று கூப்பிடுறதைக் கேக்கோணும். அப்படியே பல்லெல்லாம் காட்டிக் குழந்தையாச் சிரிப்பானே அதைப் பார்க்கோணும்.

கடவுளே..! இனி இதெல்லாம் ஏலாதே!

உலகத்து சோகமெல்லாம் என்னை அழுத்த, எனக்கு அழுகை அழுகையாக வந்து கொண்டே இருக்குது.

இன்னும் வளர்ந்தாப்போலை, எப்படியெல்லாம் முஸ்பாத்தி விடுவான். நான் அவனுக்குச் சொன்ன கதையெல்லாம், அவன் என்ரை பிள்ளையளுக்குச் சொல்லுவான். அவசரத்துக்கு என்னைச் சைக்கிளிலைகூட ஏத்திக்கொண்டு போவான். என்ரை பிள்ளையளோடை எப்படியெல்லாம் செல்லங் கொஞ்சுவான்.

தம்பி...! அவன் செத்திருக்க மாட்டான். நான் எத்தினை கடவுள்களை எல்லாம் மண்டாடினேன். அப்படி நடந்திருக்காது. அவனையே நினைச்சு அழுதழுது கண்ணீர் ஆற்று நீரின்ரை கணக்கிலை ஓடிக்கொண்டே இருக்குது. வத்தவேயில்லை.

எனக்கு இப்ப அப்பா, அம்மா, தங்கைச்சிமார் எல்லாரையும் கட்டிப்பிடிச்சு அழோணும் போலை இருக்கு. ரெலிபோன்கூட பருத்தித்துறைக்கு அடிக்கேலாது. தம்பியின்ரை மறைவிலை அம்மா அப்பா எல்லோரும் எப்படி அழுவினை எண்டு நினைக்க எனக்கு இன்னும் அழுகை கூடவாய் வருகுது. எனக்கு ஒண்டையும் தாங்கேலாதாம்.

'பரதா..! என்னட்டை ஒருக்கால் வாடா' மனசுக்குள் அவனை கூவி அழைச்சேன்.

படுக்கையறைக்குள் ஏதோ சரசரத்துக் கேட்டிச்சு. ஆவியோ...! மனசு பரபரக்க ஓடிப்போய் படுக்கையறையைப் பார்த்தன். நேற்று முன்தினம் சின்னவன் கின்டர் கார்டனிலிருந்து, ஈயப்பேப்பரிலை வெட்டின ஒரு படம் கொண்டு வந்து தந்தவன். அதை லைற்றிலை கொழுவிவிட்டனான். அது தான் யன்னலாலை வந்த காத்துக்கு ஆடிக்கொண்டிருந்திச்சு. எனக்கு ஒரே ஏமாற்றமாய் போட்டுது.

அடுத்த நாள் இவர் வேலைக்குப் போகாமல் நிண்டு, மத்தியானம் சமைச்சுப்போட்டு, சாப்பிடச் சொல்லி கோப்பையிலே போட்டும் தந்தார். எனக்கு ஒரு வாய்வைக்கவே தம்பி இந்த உலகத்திலை இல்லை எண்ட நினைவிலை அழுகை வந்திட்டுது. உப்புக் கரிச்சது.

'இங்கை பார் அவன் மாவீரனாகப் போயிருக்கின்றான். நீ அழக்கூடாது. நீ இப்படியே அழுது கொணடிருந்தால், நானும் வேலைக்குப் போக, பிள்ளையளை யார் பார்க்கிறது? இவர் என்னைப் பேசினார். அவர் சொல்லுறது சரிதான். அதுக்காண்டி அழுகை நிண்டிடுமோ! இல்லை என்ர சோகம்தான் வடிஞ்சிடுமோ!

சும்மா சும்மா சின்னச்சின்ன விசயத்திற்கெல்லாம் எத்தினை தரம் கவலைப் பட்டிருப்பன். அழுதிருப்பன் இப்பதான் தெரியுது. அதெல்லாம் ஒண்டுமே இல்லையெண்டு. சாவைப் போலை சோகம் வேறையொண்டும் இல்லை. யாராவது தெரியாதவர்கள் செத்தாலே கவலைப்படுகின்றோம். இளம் போராளிப்பிள்ளையள் செத்ததைக் கேட்டாலே வயிறு கொதிக்குது. மனசு பதைக்குது.

இந்தக் கவலைகளும், சோகங்களும் எல்லாருக்கும் தெரியும். ஏன் எல்லோரும் அனுபவிச்சிருப்பார்கள். நானும் அனுபவிச்சிருக்கிறன்? மில்லர் போலை ஒவ்வொரு கரும்புலியும், மரணத்தைக் குண்டுகளாய் உடம்பிலே கட்டிக்கொண்டு, சிரிச்சுக்கொண்டு கைகாட்டிட்டுப் போறதை, அவையள் வெடிச்ச பிறகு வீடியோவிலை பாக்கேக்கை, அப்படியே மனசைப்பிடிச்சுக் கொண்டு சோகம் கண்ணீராய்க் கொட்டும்.

மரணத்தின் முன்னால் மற்றதெல்லாம் பூச்சியம்தான். அதை நான் என்ரை தம்பி என்னை விட்டுப் போன பொழுதுதான் முழுமையாக உணர்ந்தேன்.

இத்தனை துாரம் மனசு அழுதழுது அவலப்படக்கிளேயும் நூலிழையில் ஒரு நம்பிக்கை தொங்கிக் கொண்டிருந்திச்சு 'தம்பி சாகேல்லையெண்டு ஊரிலை இருந்து தங்கச்சி எழுதின கடிதம் வருமெண்டு.'

அந்த நம்பிக்கை நூலைப் பிடிச்சுக் கொண்டு, நடக்கையில், இருக்கையில், படுக்கையில், பயணிக்கையில்... என்று, எந்த நேரமும் நினைவுகளுக்குள்ளேயே மூழ்கி, அழுத விழிகளைத் துடைக்க மறந்து, ஏதோஒரு உலகத்திலை நான் வாழ்ந்து கொண்டு இருக்கேக்கைதான்- சரியா 21ம் நாள்

கூட வந்த தோழர்களிற்கு
ஓடவழி செய்து விட்டு
தனித்திரண்டு புலிகளுடன்
களத்தினிலே போராடி
ஆக்கிரமிப்புப் பேய்களது
பாவரத்தம், களம் சிதற
கோரமுடன் படைசரித்து
எம் தம்பி
வீரமுடன் மண் சாய்ந்தான்
என்று எனது தங்கைச்சி எழுதிய
கடிதம் என்னை வந்தடைந்தது.

**சந்திரவதனா செல்வக்குமரன்**
**சுவாபிஸ் கால்–ஜேர்மனி**



# கடலலைகளில் எழுதிய காவியம்

## கணப்பொழுது



லெப். கேணல் சாள்ஸ்

இன்று யாழ் குடநாட்டிற்கான நேரடிப்பாதைகளான ஆனையிறவு, பூநகரி, சுண்டிக்குளம், கொம்படி என்பன புலிகளின் பூரண கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளன. ஆனால் 1992 காலகட்டத்தில் அன்று யாழ் குடாநாடு புலிகளின் ஆளுகைக்கு கீழ் இருந்தது. ஆனால் யாழ் குடாநாட்டை தனது பிடியில் கொண்டு வருவதற்கு எதிரி யாழ் தீபகற்பகத்தின் ஒவ்வொரு விநியோகப் பாதையையும் மூடி முற்று முழுதான முற்றுகைக்குள் கொண்வர முயற்சித்தான். இவ்வேளையில்தான் கிளாலி கடனீரேரியுடனான போக்குவரத்துப்பாதை தமிழீழ விடுதலைப் புலிகளின் பாதுகாப்புடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கிளாலிக் கடனீரேரியில் பயணம் செய்த தமிழ்மக்களை படுகொலை செய்யவென வந்த சிங்களக் கடற்படைக்கெதிராகத் தீரமுடன் போராடி வீரச்சாவடைந்த கடற்புலிகளின் தாக்குதற் தளபதியின் கதை இது.

போராட்ட ஆரம்ப காலங்களில் சிங்களக் கடற்படையின் படகுகளைக் கண்டால் எங்களது சாதரண படகுகள் கடலில் நிற்காது, நிற்கவும் முடியாது.

தரையைப் போல கடலிலும் சிங்களப் படையைத் துரத்தித் தாக்கி அழிக்கலாம் எனச் சொல்லித் தந்தவனும், முதன் முதலாக மட்டுமல்ல தொடராக அதனைச் செய்து காட்டியவனும் எங்கள் தளபதி சாள்ஸ்தான்.

1991இன் இறுதியில் அது ஆரம்பித்தது. நயினாதீவிலிருந்து ஊர்காவற்றுறைக்கு ரோந்து புரிகின்ற நேவிப் படகுகளை வழிமறித்து தாக்க சாள்ஸ் முடிவெடுத்தான்.

தளபதி கங்கைஅமரனின் துணையோடு றெக்கி பார்த்து, தாக்குதல் திட்டம் வகுத்து, தாக்குதல் குழுக்களை ஒழுங்கு படுத்தி, ஆயுதங்களோடு படகுகளைத் தயார் செய்து, தானே கொமாண்டராகி வியூகம் அமைத்து நின்று, அந்தக் கடற் சண்டையை வழி நடாத்தினான் சாள்ஸ்.

கனன் பீரங்கிகளுக்கும் பிப்ரிகெலிபருக்கும் மிகையான கனரகத் துப்பாக்கிகளுடன், அதிவேகம் கொண்ட நேவியின் சண்டைப்படகுகளை- பிப்ரி, ஜி.பி.எம்.ஜியுடன், சாதரண ரைபிள்களை மட்டுமே கொண்ட எங்களது மீன்பிடிப் படகுகள் துரத்தித் தாக்கின. சிங்களக் கடற்படையைப் புலிகளின் படகுகள் கலைத்து விரட்டிய முதல் வரலாறு அது.

எதிரியின் போர்ப்படகொன்று மூழ்கடிக்கப்பட்டதுடன் எல்.எம்.ஜி ஒன்றும் கைப்பற்றப்பட்டபோதும் இழப்பேதும் இல்லை எங்களுக்கு. இதற்கு முன்னர், நெடுந்தீவுக்கும் குறிகட்டுவானிற்கும் இடையிலுள்ள கடலில் சாள்ஸ் நடத்திய ஒரு கண்ணிவெடித் தாக்குதல் குறிப்பிடத்தக்கது.

இரவு முழுவதும் ஆழக்கடலுக்குள் இறங்கி நின்று, அலைகளின் நடுவில் அவன் கண்ணிவெடியை விதைத்துவிட்டு வர, மறு நாள் காலை அதில் சிக்கிய எதிரியின் படகொன்றை அலைகள் விழுங்கிக் கொண்டன என்பதுடன், சிங்களக் கடற்படையின் வட பிராந்தியத் தளபதி கொமடோர் அமரவீர படுகாயமடைந்தார் என்பதும் ஏழு படையினர் கொல்லப்பட்டதும் முக்கியமானது. உடைந்த படகையும், ஆயுதங்களையும், கடலுக்கடியில் இருந்து மீட்ட பின்னர்தான், சாள்ஸ் அடுத்த வேலைக்குப் போனான்.

1992இன் துவக்கத்தில் தாளையடிக்கடலில் எதிரியின் சவட்டன் விசைப் படகு மீது தானே கொமாண்டராக நின்று ஒரு பகற்பொழுது தாக்குதலை நடாத்தினான் சாள்ஸ். எங்களது நான்கு வீரர்களை நாங்கள் இழந்ததுடன், அவனுக்கு காலில் காயமேற்படுத்தியது அந்தச் சண்டை.

ஆனையிறவுக் கடனீரேரியில் எதிரியின் நீருந்து விசைப்படகொன்றை மூழ்கடித்து பிப்ரி உட்பட ஆயுதங்களையும் கைப்பற்றிய கடற் கண்ணித் தாக்குதல். அதே நீரேரியில் எதிரியின் ரோந்துப் படகுத் தொடரை தாக்கிப் பல ஆயுதங்களையும் கைப்பற்றிய இன்னொரு சண்டை. மாதகல் கடற் பிரதேசத்தில் விசைப் படகொன்றை மூழ்கடித்த மற்றொரு கண்ணிவெடித் தாக்குதல். பூநகரி கல்முனைக்கருகே உள்ள மான்தீவில், சிங்களப்படையின் கரையோரக் காவலரணைத் தகர்த்து, றைபிள்களோடு எதிரியின் சடலங்களையும் எடுத்து வந்த அதிரடித் தாக்குதல்.

இவ்வாறாக கடற்புலிகளின் கடற்சண்டைத்திறன் வளர்ந்த ஒவ்வொரு தாக்குதலுக்குப் பின்னாலும் இருந்த உந்து விசை அவன். அவனிடம் ஒப்படைக்கப்படுவது என்ன வேலையாகத்தான் இருந்தாலும், அந்த வேலையோடு தன்னையே கலந்து செய்து முடிக்கும் தன்மை அவனுடையது. களைப்பில்லாத, சலிப்பில்லாத, ஊக்கம் நிறைந்த, உற்சாகமான மனது அவனுடையது.

வெற்றிகரமான கடற்சண்டைகளில் முன்னோடித் தளபதி மட்டுமல்ல, அவனொரு சிறந்த தொழில் நுட்பவியலாளனுமாவான். வேலையில்லாத வேளையில்லாதவன் அவன். ஓய்வுக்கு ஓய்வு கொடுத்திருந்த அந்த உழைப்பாளி, ஓய்வு நேரங்களில் மூளைக்கு வேலை கொடுத்து எதையாவது ஆய்வு செய்து கொண்டிருப்பான்.

கடற்புலிகளின் தொழில்நுட்ப வளர்ச்சியும் சாள்சின் அறிவாற்றலும் ஒன்றோடொன்று இறுகப் பிணைக்கப் பட்டிருந்தன. வோக்கி கதைக்க குறோஸ் செய்ய வேண்டுமென்றாலும் சரி, என்னவாகத்தான் இருந்தாலும்- அது இது வேண்டும் என்றும் எதிர்பார்க்காமல், உள்ளூரில் கிடைக்கக் கூடியவற்றைக் கொண்டே செய்து முடித்துவிடுவதுதான், மற்றைய தொழில் நுட்பவியலாளர்களுக்கும் அவனுக்கும் இடையிலுள்ள வேறுபாடு.

கடற்புலி வீரர்களுக்கான படகுப் பயிற்சிக் கல்லூரி ஒன்றை ஆரம்பித்தான் அந்த சிறந்த படகோட்டுனன். புயலுக்கும் சூறாவளிக்கும் இடையில், ஆர்பரித்தெழும் கடல் அலைகளுக்கு நடுவில் படகை நீண்ட துாரத்திற்குச் செலுத்தக் கூடியதான பயிற்சியை அளித்து, பெண்புலிகள் உட்பட திறமையான ஓட்டிகளை சாள்ஸ் உருவாக்கித் தந்தான். இப்போது அவன் இல்லை. ஆனால் அந்தப்பட்டறை இனி எப்போதும் புதியவர்களை தயார் செய்து கொண்டே இருக்கும்- அவனது நினைவோடு.

தோழர்களில் அவன் கொண்டிருந்த அன்பும் பாசமும் அலாதியானது. மற்றெல்லாரையும்விட வித்தியாசமான விதத்தில் பழகுகின்ற இவன்- எல்லாப் போராளிகளிலும் கவரப்பட்டு அவர்களின் நெஞ்சங்களில் நீக்கமற நிலைத்து விட்ட ஓர் உற்ற நண்பன்.

கிளாலியிலிருந்து வேலையாக வந்து எங்காவது நிற்கும்போது கோவில் திருவிழா பார்க்க நண்பன் அழைத்தால், பொடியளை விட்டிட்டு வந்திட்டன். நான் வரேல்ல என்ற போக மறுக்கும் சாள்ஸ், என்ன நிகழ்ச்சி பார்ப்பதற்கென்றாலும்- அது சரியோ தவறோ தன்னோடு நிற்கும் போராளிகள் எல்லோரையும் அழைத்துச் செல்லாமல் ஒரு நாள்கூட போயிருக்காத உயிர்த்தோழன்.

எந்த மாவட்டத்திற்கு போனாலும், அங்கு நிற்கும் யாராவது ஒரு போராளி வந்து, சாள்ஸ் அண்ணையிட்டை சுகம் கேட்டதென்று சொல்லுங்கோ என்பான், என்று சொன்னார் பிருந்தன். அந்தளவுக்கு வியாபித்திருந்தது அவன் நட்பு.

வகுப்பு எடுக்கும் பொழுது- பகிடியாகவும் செல்லமாகவும் கதைத்து, தான் சொல்வதை அவர்கள் மனவிருப்போடு கேட்டுப் படிக்கக் கூடியதாக விளங்கப்படுத்திக் கற்பிப்பது அவனுடைய பாணி. தனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுத்துவிடும் தன்மை அவனுடையது. கடலிலும் தரையிலும் தான் பெற்ற அனுபவங்கள், பட்ட துயரங்கள், திறமையான செயற்பாடுகள் என எல்லாவற்றையும் சொல்லிக்கொடுப்பான். புத்தகத்தில் படித்த அறிவு இல்லாவிட்டாலும் பரவாயில்லை அனுபவம் மூலம் படிக்க நிறைய இருக்கு. அனுபவம் பலதரப்பட்ட பாடங்களையும் எங்களுக்கு கற்பிக்கின்ற வழிகாட்டி என்று சொல்லி தான் வளர்ந்ததைப் போலவே- பட்டறிவு மூலம்- போராளிகளை வளர்க்கும் வழிமுறை அவனுடையது.

போராட்டத்தைப் பற்றியும், இயக்கத்தைப்பற்றியும், தலைவரைப் பற்றியும் சொல்லிச் சொல்லி எங்களை எப்போதும் உற்சாகத்தோடு வைத்திருப்பான் சாள்ஸ். என்றுமே மறக்கமுடியாத பசுமை நினைவுகள் அவனுடையவை. இன்று எங்களோடு அவன் இல்லை- ஆனால் எல்லோருக்குள்ளும் அவன் நிறைந்திருக்கின்றான்.

திருகோணமலையின் கடற்கரையோரமுள்ளது திருக்கடலூர் அந்த வீரனைப் பெற்றுத் தந்த பெருமை அதற்குத்தான் சேரும். 1960இன் 15ஆம் திகதி கடைசி மாதத்தில் அழுகுரலுடன் அது நடந்தது. அப்பா ஆனந்த ராசாவிற்கும் அம்மா விஜயதேவிக்கும் மகனாக இரண்டு அக்காமாருக்கும் நான்கு தம்பிமாருக்கும் இடையில் பிறந்தவனுக்கு, அவர்கள் ஆசையோடு வைத்த பெயர் தவராஜன். கடற்தொழில் அந்தக் குடும்பத்திற்கு மட்டுமல்ல அந்தக் கிராமத்திற்கும் சொந்தமானது. புனித ஜோசப் கல்லூரியில் 10ஆம் வகுப்புவரை படித்துவிட்டு அப்பாவோடு தொழிலுக்குப் போனவன், சின்ன வயதிலேயே திறமைமிக்க படகோட்டியாகத் தேர்ச்சி பெற்றான்.

மட்டக்களப்புத் தொழில் நுட்பக்கல்லூரியில் அவன் பாடத்திட்டம் ஒன்றைப் பூர்த்தி செய்வதற்கு இயற்கையாகவே அவனிடமிருந்த ரெக்னிக்கல் மூளை துணையாக இருந்தது. தடங்கலின்றி சிங்களத்தில் உரையாடுவதோடு, ஆங்கிலத்தில் பேசும் ஆற்றலையும் சாள்ஸ் கொண்டிருந்தான்.

சிங்கள இனவாதப்புயல் எங்கள் தாய் நிலத்தில் வீசியபோது, எல்லோரையும் போலவே இந்தக் குடும்பத்தின் அமைதியான வாழ்வும் குலைந்தது. பச்சைப் பேய்களின் பவனி. இராணுவ வண்டிகளின் வலம். சிங்களக் காடையர்களின் அட்டூழியம். திருகோணமலை எரிந்தது. தமிழர்கள் பிணங்களாய்க் குவிந்தார்கள். எங்கள் கடலில் அவர்கள். விடிகாலையிற் கரையொதுங்கும் பிணங்கள். அந்த எரிமலை தனக்குள் குமுறும்.

எல்லாவற்றிற்கும் மேலாக அன்புத் தம்பி ஜெயராஜனை சிங்களத்துப்பாக்கிகள் குரூரமாகக் கொன்றபோது அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தாயகத்திற்கு செய்ய வேண்டிய பணி, சொந்த வாழ்வையும் தாக்கிய பேரினவாதம், இயக்கத்திற்கு போக முடிவெடுத்தான்.

புலிகள் இயக்கத்தின் தொடர்பைத் தேடி, சந்துபொந்தெல்லாம் அலைந்து திரிந்தவனுக்கு, நீண்ட காலத்திற்கு பின் -1985இன் நடுப்பகுதியில் -அது கிடைத்தது. சந்தோசம் மாஸ்ரரைத் தேடிப்பிடித்து இயக்கத்தில் சேர்ந்தவன், திருமலையில் இரண்டாவது பயிற்சி முகாமில் பயிற்சி எடுக்கும்போதே புலேந்தி அம்மானின் கவனத்தை ஈர்க்குமளவிற்கு ஆற்றலை வெளிப்படுத்தித் திறம்படச் செய்தான்.

திருமலைக்கான கடல்மார்க்க விநியோகத்தைச் செய்வதே அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்த வேலை. ஆனால் மிகச்சிரமமான அந்தப் பணியில் வண்டி ஓட்டிவிட்டுக் களைப்போடு வந்தாலும், ஆமிக்குச் சக்கை அடிக்க சுரேந்திரன் வெளிக்கிட்டால் தானும் சேர்ந்து போவான்.

1986இன் இறுதி. சுற்றிவளைப்பொன்றில் காயமடைந்து யாழ்ப்பாணம் வந்தபின், தமிழகத்திற்கு வண்டி ஓட்டுவது அவனுக்கு ஒப்படைக்கப்பட்ட வேலை. அந்தப் பணியின்போது அவன் நேவியிடம் கலைபடுவது மூன்றுநேர உணவைப் போல நிகழும் சம்பவம்.

அப்படியான ஒரு நாளில்- முன் இரவு நேரம், பொருட்களோடும் போராளிகளோடும் வந்து கொண்டிருந்தது சாள்சின் படகு. திடீரென எதிர்ப்பட்ட நேவிப்படகு கலைத்துக் கலைத்துத் தாக்க, இயலுமான வரை வேகத்தைக் கூட்டி சாள்ஸ் ஓடமுயல, பீரங்கிக்குண்டு பட்டு வெடித்துச்சிதறிய படகிலிருந்து அவன் தூக்கி வீசப்பட்டான். முகம்மது மாத்திரம் கண்ணுக்குத் தெரிந்தான். கரையை நோக்கி நீந்தத் தொடங்கினார்கள். மைல்கணக்கான துாரம். நேரம் செல்லச் செல்ல களைத்துப் போய் பின்தங்கிய முகம்மது, கண்ணுக்கு முன்னாலேயே அலைகளுக்குள் காணாமல் போய்விட்டான்.

தொடர்ச்சி 11ம் பக்கம்

## அன்புச் சகோதரமே...

### வணக்கம்!

சிங்களமும் போர்வீரர் நாள் கொண்டாடுகின்றது பார்த்தீர்களா..?

தமிழீழத்திற்கு மாவீரர் நாள்.

சிங்களத்திற்கு போர்வீரர் நாள்.

தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டம் இவ்வளவு வீச்சம் பெற்றதற்கும், தமிழினம் உணர்வுகொண்டு எழுந்ததற்கும் மாவீரர்களின் உயிர்த்தியாகமும், அர்ப்பணிப்புமே ஆதாரம்.

நீண்டு இயக்கும் விடுதலைச் சக்தியாய் கிளைத்து அவர்களின் ஆன்மாவே எம்மக்கள் மனங்களில் நிறைந்திருக்கின்றது.

ஆயுதம் தரித்த ஒவ்வொரு போராளியின் உள்ளும் இறுதியாக மாவீரர்கள் உரைத்துச் செல்லும் தாயகவிடுதலை தாகவரிகளே வியாபித்து நிற்கும்.

தாயினை ஒத்த தழுவல், அரவணைப்பு முத்தம், கண்ணீர் கலங்க வழியனுப்பும் ஈரம் இவையனைத்தும் விடுதலைச் சேனைக்குத்தான் சாத்தியம்.

உள்ளுணர்வில் குடும்பமாகி, விட்டுப்பிரியாத உறவின் தூய்மையில் வாழ்ந்து பிரிந்து சரித்திரமாகின்றபோது, கிளர்ந்தெழும் சபதம் விடுதலைச் சேனையிடை மாத்திரம்தான்.

காசுக்குப் பணிபுரியும் இராணுவ வீரனுக்கும், தனது அரசியல் செல்வாக்கிற்காகவும், அடுத்ததேர்தல் வெற்றிக்காகவும் படையினரை சுயநலம் சார்ந்து பிரயோகிக்கும் வெறும் அரசியல் கட்சித்தலைமைக்கும் இடையே, உறவெங்கே வியாபிக்கும். இங்கு இருவர் சிந்தனைக்கும் இடையே இருப்பது வியாபாரம். படையில் சேர்ந்தால் சம்பளமாய் அள்ளலாம், பவுசாக வாழலாம் என்ற பாமரத்தனமான ஆசையுடன் சிந்தனையுடன் படைக்கு விரையும் ஏழைஇளைஞனுக்கும், பவுசாக வாழ்ந்து பழக்கப்பட்ட, தமது அதிகார ஆசைகளுக்காக எதையும் செய்யத்துணியும் அதிகாரவெறிபிடித்த சிங்கள அரசியல் வாதிகளுக்கும் இடையே இருப்பது ஆண்டான் அடிமை உறவே.

இறந்த இராணுவ வீரர்களின் உடல்களைப் பொறுப்பேற்க மறுப்பதுடன், இறந்தவர்களைக் காணாமல்போனோர் பட்டியலில் சேர்த்து தப்பிக்கும் அரசு, இறந்த படையினருக்காக போர்வீரர் தினம் அறிவிக்கின்றது என்பது, புனிதமான உணர்வுடன் அல்ல.

காசுக்கும் வசதிக்கும் ஆசைகாட்டி சிங்கள இளைஞனை கவர்ந்து போரிடப் பணிப்பது, நிரம்பவும் சிரமமாகிப்போயுள்ள நிலையில், சிறீலங்கா அரசு, நாட்டைக் காட்டி, இனத்தைக் காட்டி சிங்கள இனத்தை சூடேற்றி போருக்கு அழைக்கின்றது.

இலங்கைத்தீவில், இரு தேசிய இனங்களும் துண்டுபட்டு நிற்கின்றன. தமிழீழ மக்களுக்கு மாவீரர் நாள். சிங்களவர்களுக்கு போர்வீரர் நாள் என்பது சந்திரிகாவின் முடிவு.

தமிழர்கள் போரிடுவதோ, தமது நிரந்தர விடுதலைக்கும் நிம்மதியான வாழ்வுக்கும்.

சிங்கள அரசுகள் சிங்கள இளைஞர்களைப் போரிடப்பணிப்பதோ ஆக்கிரமிப்பையும் தமிழர்மீதான தமது அதிகாரத்தையும் உறுதிப்படுத்த.

எமது மண்ணில் எமது வீரர்கள் வீழ்ந்தால் மாவீரர்கள்!
சிங்கள இராணுவத்தினர் எம்மண்ணில் வீழ்தால் பலிக்கடாக்கள்!

அன்புடன்..
ஆசிரியர்.

## புலம்பெயர்ந்துவாழும் தமிழீழ மக்களே!

தமிழீழம் எங்களின் தேசம் வளம் நிறைந்த பூமி. மீட்கப்பட்ட எமது தமிழீழ தேசம், பொருண்மிய வளம் மிக்க நாடாகத் திகழ வேண்டுமல்லவா!

ஆகவே, அதற்கான வேலைத்திட்டங்களை வகுத்து, அதனை முன்னெடுத்துச் செல்லவேண்டிய நிலையில், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் உள்ளது.

இந்த தேசமுன்னெடுப்புப் பணி, பாரம் நிறைந்தது. சிலரின் உழைப்பில் சாத்தியப்படும் பணியல்ல.

அதனால், ஆர்வமுள்ள தொண்டர்களின் பரந்துபட்ட பலம், உழைப்பு தேவைப்படுகின்றது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தனது வேலைத் திட்டங்கள் பலவற்றை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ஆர்வமுள்ள தொண்டர்களை வேண்டி நிற்கின்றது.

புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து, தாயகத்திற்கு பொருண்மிய வலுவூட்ட எல்லோரும் இணைந்து செயற்படுவோம். மேலதிக விபரங்களைப் பெற்று உங்கள் கடமையை ஆற்ற உங்கள் நாடுகளிலுள்ள, தமிழீழ விடுதலைப் புலிகளின் பணியகங் களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

10ம் பக்கத் தொடர்ச்சி

## கணப்பொழுது

அந்த நினைவுகளெல்லாம் நாங்களும் ஒரு நாளைக்கு நேவிப் படகுகளைக் கலைத்து அடிக்க வேண்டும், என்ற வேட்கையை, அந்த வீரனுக்குள் வளர்த்துக் கொண்டிருந்திருக்கும்.

இந்தியர்கள் வெளியேற்றப்பட்டபின் சிறிய கால இடைவெளிக்குப் பின்னர் இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கியதும் அவன் கடற்புலிகள் பிரிவோடு இணைக்கப்பட்டான். சாள்சின் எல்லாத் திறமைகளும் முழுமையாக வெளிப்பட்ட காலமது.

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் புதிய பரிமாணம் பெற்றபோது தளபதி சூசையின் உற்ற தோழனாக நின்று, கடற்புலிகளின் வளர்ச்சிக்காக ஓய்வில்லாமல் உழைத்தான்.

சாள்ஸ் ஒரு கடற்காவியம்!

விடுதலைப் புலிகளின் வரலாற்றில் கடற்புலிகள் முக்கியமான ஓர் அத்தியாயம் என்று தலைவர் அவர்கள் சொல்லுகின்றார். கடற்புலிகளின் வளர்ச்சியில் சாள்ஸ் ஒரு பிரதான உந்துவிசை என்கிறார் சூசை.

சின்னக் குழந்தையாகத் தவழும் கடற்புலிகளை, பெரும்படை அமைப்பாகக் கட்டியெழுப்பும் கனவுகளோடு வாழ்ந்தவன் அந்த வீரன்.

24-6-1993 அன்றிரவு

20 மைல் நீளப் பெருங்கடல் படகோட்டம் தொடங்கிவிட்டது. ஏக்கவிழிகளோடு படகுகளில் மக்கள். தமிழரை வேட்டையாடவென காத்திருக்கும் சிங்களப் படையினர். மக்களைக் காக்கும் பணியில் கடற்புலிகள். அவர்களை வழிநடாத்தியபடி சாள்ஸ்.

அன்றும் தமிழர்களைப் படுகொலை செய்யவென வந்த கடற்படையினரோடு பொருதினர் கடற்புலிகள். மக்கள் மறுகரையை பாதுகாப்பாகச் சென்றடைந்தார்கள் ஆனால் நாங்கள் சாள்சை இந்த மோதலில் இழந்துவிட்டோம்.

ஓ..... சாள்ஸ்! எங்களின் கடற்போர்த் தளபதியே! உனது நினைவுகளையும் கனவுகளையும் எங்களோடு விட்டுச் சென்று விட்டாய். நீ சுமந்த இலட்சியத்தை நாங்களும் சுமக்கின்றோம். அதை அடையும் வரை நாங்கள் ஓயமாட்டோம்! உன்னைப் போலவும் கடலின் அலையைப் போலவும். ■

1ம் பக்கத் தொடர்ச்சி

## அடிக்கு மேல் அடி..!

தாக்குதல் தொடுத்தனர். சிங்களக் கடற் படையின் மிதக்கும் மினிமுகாம் எனக் காரணப் பெயர் சூட்டி அழைக்கப்படும் இஸ்ரேலியத் தயாரிப்பான டோரா அதி வேகத் தக்குதல் பீரங்கிப் படகொன்று, இரண்டு மணிநேர உக்கிரமான சண்டை யின் பின் விடுதலைப் புலிகளால் கைப் பற்றப்பட்டது. கடுமையாகச் சேதமடைந்த நிலையில், கடலில் முழுமையாகப் புதை யும் ஆவலில் தவித்த அந்த டோராவில் பொருத்தப் பட்டிருந்த நவீன போர்த் தளபாடங்களையும், போர்க்கருவிகளை யும், கடற்படையினரின் ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் அகற்றி எடுத்து, தமிழீழப் படையின் சொத்தாக்கினர். மீ ண்டும் சண்டை. காங்கேசன்துறையில் இருந்தும் திருகோணமலையிலிருந்தும் பத்துக்கும் மேற்பட்ட டோராக்கள் விரைந் தன. கிபிர் குண்டு வீச்சு விமானங்களும், எம்.ஐ 24 ரக உலங்குவானூர்திகளும் சண்டைக் களத்தில் கடுமையாகத் தாக் குதல் நடத்தின.

வான் கடல் மார்க்கங்களில் எதிரி தொடுத்த பலமான தாக்குதலுக்கு முகம் கொடுத்தபடி, விடுதலைப் புலிகள் மிகக் கடுமையாகத் துணிகரமாகச் சண்டைகள் செய்தனர். மேலும் ஒரு டோரா விடுத லைப் புலிகளால் அழிக்கப்பட்டது. சுமார் மூன்று மணி நேரமாக நடந்த கடற் சண் டையின் இறுதியில், இரண்டு டோராக்கள் அழிக்கப்பட்ட நிலையில், மேலும் இர ண்டு டோராக்கள் மிகக்கடுமையாக சேத மாக்கப்பட்ட நிலையில் சிங்களப் படை யினர் பின்வாங்கினர். இந்தக் கடற்சண் டையில் இருபத்தி மூன்று படையினரைக் காணவில்லை என்று சிறீலங்கா அரசு அறிவித்திருக்கின்றது.

துணிகரமான இவ்வீரமிகு கடற்சண் டையில், பன்னிரண்டு கடற்புலி வீரர்கள் வீரச்சாவடைந்தனர். கடந்த ஏப்பிரல் மாதம் ஏழாம் திகதியும் வடமராட்சி கிழக் கில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இரு டோராக்கள் அழிக்கப்பட்டமை இங்கு நினைவு கொள்ளத்தக்கது. ஆக இரு மாத இடைவெளிக்குள் சிங்களம் நான்கு டோராக்களை முழுமையாக இழந்துள்ள துடன், சிங்களப்படையின் மேலும் இரண்டு டோராக்கள் பாவனைக்கு முடி யாதபடி சேதமடைந்துள்ளன. குடா நாட்டுக்குள் சிக்குண்டுள்ள சிங்களப் படைக்கு, இது அபாய அறிவிப்பாயன்றி வேறு எதுவாகவும் இருக்கப் போவ தில்லை. ■

1ம் பக்கத் தொடர்ச்சி

## சிறீலங்காவில் குண்டுவெடிப்பு........

நினைவுநாள் அறிவித்திருக்கின்றது. சிறீலங்காவை யுத்த நிலையில் வைத் திருப்பதாக அறிவித்திருக்கும் சந்திரிகா வின் அடுத்த கட்டநகர்வு, இந்தப் போர் வீரர் தினம். தமிழ் இனத்திற்கு எதிராக, ஒட்டுமொத்த முழுச்சிங்கள இனத் தையும் திரட்டி தமிழினத்தை அழித் தொழித்து முழுதாக அடக்கி வைக்கலாம் என்பது இதனது நோக்கம்.

சமாதானத்தை வாயளவில் பேசிக் கொண்டு, செயலளவில் யுத்தத்தை தீவி ரப்படுத்தும் சந்திரிகா போர்வீரர்கள் நாளில் முழுச்சிங்கள மக்களையும் தமிழ் இனத்திற்கு எதிரான யுத்தத்திற்கு தயார்படுத்துவதை பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளார்.

இதன் ஒரு கட்டமாகப் பல்லாயிரக் கணக்கான தொண்டர்களைத் திரட்டிக் கொண்டு வீடுவீடாகக் கடைகடையாகச் சென்று யுத்தத்திற்கு நிதிசேகரித்துக் கொண்டிருந்த அமைச்சர் குணரத்தி னாவே, கடந்த ஏழாம் திகதி, சிங்களத்தின் போர்வீரர் நாளில் ரத்மலானையில் வைத்து கொல்லப்பட்டிருக்கின்றார்.

கொழும்பில் விடுதலைப் புலிகளின் எத்தகைய தாக்குதலையும் முறியடிக்கும் விதத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. அண்மைக்கால கரும்புலித் தாக்குதல்கள் யாவும் தோல்வியடைந்து வருகின்றன எனவும். இதற்குத் தமது பாதுகாப்பு ஏற்பாடுகள் நவீன முறையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளமையே காரணம் எனவும் தெரிவித்து வந்த சிறீலங்கா அரசு. கரும்புலிகளே இத்தாக்குதலைச் செய் தனர் என வழமை போலத் தெரிவித் துள்ளது. சந்திரிகா அரசு, தன்னைச் சுற்றி பல எதிரிகளை உருவாக்கி வைத்துள்ள போதும், இத்தகைய தாக்குதல்கள் நடை பெறும்போது விடுதலைப் புலிகள் நோக்கி சுட்டு விரல் நீட்டுவதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளது.

எது எப்படியிருப்பினும், தமிழ் மக் களின்மீது மேற்கொள்ளப்படும் இன அழிப்பு நடவடிக்கையின் எதிர்விளைவே இத்தகைய சிக்கலான நிலைக்கு கார ணம் என்கிறார் மறுமலர்ச்சி திராவிட முன் னேற்றக் கழகத் தலைவர் திரு. வைகோ. பொதுவாக வெகுசனங்களின் பொதுக் கருத்தும் அதுவாகவே இருக்கின்றது. ■

## ஏற்றிய உலையைக் காக்க ஓர் குடை
## சின்னவள் இவளைக் காக்க.......
## விழலாய் வாழ்வோமா..? நிழலாய் ஆவோம்



# செங்கதிரும் வெள்ளி நிலவும் உள்ளவரை இவர் பேரும் நிலவும்

பூமணம் அள்ளி வந்த தென்றல் காற்று- எங்கள்
போர் மறவர் கல்லறையில் மெல்ல வீசு
மாஞ்சோலை வாழுகின்ற செல்லக்குயில்கள்- இந்த
மாமறவர் புகழினை சொல்லித் திரிவீர்.

காலமெலாம் ஒலிக்கின்ற நீலக்கடலே- இவர்
கால்களிலே முத்தமிட்டுப் பாடி மகிழே
மேலோடி வெண்ணிலவை முட்டும் மலையே- தமிழ்
மானமது காத்தவரைக் தொட்டுப் பணியே

இளமைதன் இன்பங்கள் முற்றும் துறந்தார்;- பெரும்
ஈகையும் மானமும் பெற்று நிமிர்ந்தார்
இனம்வாழ முன்வந்து தம்மைக் கொடுத்தார்- ஈழம்
மலர்கின்ற கனவோடு கல்லிற் படுத்தார்.

வன்சமரில் வீழ்ந்து பட்டார்; குண்டாய் வெடித்தார்;-தன்
மானத்தை நினைந்துமே நஞ்சைக் குடித்தார்
என்னவிலை கொடுத்திவர் ஈழம் மீட்டார்- அந்த
ஈழத்தில் வாழுதற்கும் மீள மாட்டார்.

எண்ணியெண்ணிப் பார்க்கிறேன் புரியவில்லை- இவர்
ஏற்றிருந்த மானிடம் எங்கு மில்லை
இன்றமிழும் செங்கதிரும் வெள்ளிநிலவும்-இங்கே
இருக்கின்ற வரையிவர் பேரும் நிலவும்.

-பண்டிதர் பரந்தாமன்-




### ஓயாத அலைகள் எழுச்சி விழா

ஜேர்மனி பேர்லின் மாநகரில் கடந்த 28-05-00 அன்று ஞாயிறு மாலை ஓயாத அலைகள் எழுச்சி விழா இனிதே நடந்தேறியது. இந்நிகழ்வில் பலநூற்றுக்கணக் கான மக்கள் கலந்து கொண்டனர். ஓயாத அலைகள் எழுச்சி விழா நிகழ்வுகள் ஜேர்மனியின் பல்வேறு மாநிலங்களிளும் நடைபெற்று வருகின்றன.

### ஆனையிறவு வெற்றிவிழா

மலேசியாவில் ஆனையிறவு வெற்றிவிழாச் சிறப்பு நிகழ்வு மலேசிய தமிழ் நெறிக்கழகத்தின் சார்பில் உலகத் தமிழர் நிவாரண நிதியத்தின் ஒத்துழைப்போடு மலேசியாவின் பேராக் மாநிலத்தி லுள்ள தமிழ்நெறிக்கழக தலை மைப்பீடத்தில் கடந்த 29-04-00 அன்று நடைபெற்றது. அதில் மலேசியத் தமிழ் மக்கள் கலந்து கொண்டு பங்களிப்புக்களை அள்ளிவழங்கினர்.





### இத்தாலியில் கலைத் தென்றல் 2000

வலுவிழந்தோர் மேம்பாட்டு நிதிக் காக தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தின் அனுசரணையுடன் இத்தாலிப் பணியகக் கலை பண்பாட்டுக் கழ கம் கடந்த 14.05.00 ஞாயிற்றுக் கிழமை கப்பல் கோயில் மண்டபத் தில் கலைத் தென்றல் 2000 கலை நிகழ்ச்சியை நடாத்தியது. அத்து டன் ஆனையிறவுப் படைத்தளம் தமிழர் சேனையிடம் வீழ்ந்ததன் வெற்றி விழாவும் எழுச்சியுடன் மகிழ்ச்சியுடன் சிறப்புற நிகழ்ந் தது. இதில் மண்டபம் நிறைந்த மக்கள் கலந்து சிறப்பித்தனர்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| AUSTRALIA<br>TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072. | CANADA<br>WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5. | DENMARK<br>LTTE<br>P.O.Box 47,<br>7400 Herning. | FRANCE<br>TCC<br>341 Rue Des<br>Pyrenees,<br>75020 Paris. | GERMANY<br>TCC<br>Postfach 101613,<br>46016 Oberhaousen. | ITALY<br>TCC<br>Via Paolo Balsamo-11<br>90100 Palermo. |
| NETHERLANDS<br>TCC<br>P.O.Box 18600,<br>2502 EP Den Haag. | NORWAY<br>TCC<br>P.O.BOX 1699 Vika,<br>0110 Oslo. | SWITZERLAND<br>WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich. | SWEDEN<br>TCC<br>Glomminge Grand-25,<br>3rd Floor,<br>16362 Spanga. | UNITED KINGDOM<br>UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB. | U.S.A<br>W.T.C.C<br>170-10 Cedarcroft<br>Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432. |

# ஆனையிறவுத்தளம் தகர்ப்பு

ஆக்கிரமிப்புச் சின்னம் அழிக்கப்பட்டது!
தடைக்கல் அகற்றப்பட்டது!!
மைல்கல் நாட்டப்பட்டது!!!
புதிய சரித்திரம் படைக்கப்பட்டது!!!!
விடுதலைக்கான பாதை திறக்கப்பட்டது!!!!!



இன்றைய பின்னடைவே நாளைய
வெற்றியாக மாறுவது திண்ணம்

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.
மாவீரர் நாள் செய்தி - 1995


# களத்தில்

(30.04.2000) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (207)




தலைவன் காட்டிய பாதையில் பாய்ந்தனர் புலிகள்...
புதுச் சரித்திரம் படைத்தனர்.

## ஆனையிறவுத்தள அழிப்புடன்...
## குடாநாட்டுக்கான பாதை திறக்கப்பட்டுவிட்டது.
## கூடவே விடுதலையின் பாதையும்!

ஆனையிறவுப் படைத்தள அழிப்புடன், யாழ் குடாநாட்டுக்கான சுதந்திரமான பாதை திறக்கப்பட்டுவிட்டது. ஆயிரத்தி எழுநூற்றி அறுபதாம் ஆண்டு ஒல்லாந்தரால் நிறுவப்பட்ட ஆனையிறவுத்தளம், இருநூற்றி நாற்பதாண்டுகளின் பின்னால் இன்று விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டுள்ளது. தமிழீழ மண்ணில் இருந்து ஒரு ஆக்கிரமிப்புச் சின்னம், அழித்துத் துடைத்தெறியப்பட்டதாகவே இந்நிகழ்வு அமைந்திருக்கின்றது. கூடவே, விடுதலைப் போராட்ட வரலாற்றில், அரசியல் இராணுவத் தளங்களில் மாபெரும் திருப்புமுனையாகவும், ஆனையிறவுத்தள அழிப்பு அமைந்துவிட்டது.

தமிழீழத் தேசியத் தலைவரின் நேரடி திட்டமிடல், நெறிப்படுத்தலுடன் கடந்த ஆண்டு நவம்பர் இரண்டில், ஆரம்பிக்கப்பட்ட ஓயாத அலைகள் மூன்று தாயக மீட்பு நடவடிக்கையானது, மிகக்குறுகிய காலத்தில், சிங்கள ஆக்கிரமிப்புப்படையின் பிடியில் சிக்கியிருந்த பெரும் நிலப்பரப்பை மீட்டிருந்தது. வன்னிப் பெருநிலப்பரப்பை மீட்டெடுத்த ஓயாத அலைகள் மூன்று இராணுவ நடவடிக்கை, கடந்த ஆண்டு டிசம்பர் பத்தில், ஆனையிறவுப் பெருந்தள அழிப்பை குறியாகக் கொண்டு, குடாநாட்டுக்குள் கால் பதித்தது.

டிசம்பர் பதினோராம் திகதி, வெற்றிலைக்கேணி கட்டைக்காட்டுப் பகுதிகளில் கடல்வழியாகத் தரையிறங்கிய விடுதலைப் புலிகள், ஆனையிறவின் கிழக்குக்கரையோரக் கடற்பரப்பில், காவல்காரனாக பெரும் படைபலத்துடன் அமைந்திருந்த வெற்றிலைக்கேணி கட்டைக்காட்டு இராணுவக் கடற்படைக் கூட்டுத்தளத்தை, முழுமையாகக் கைப்பற்றிக் கொண்டனர்.

டிசம்பர் பதினாறாம் திகதி, ஆனையிறவின் தென்புறத்தே, பரந்தன் முகாம் இருபத்திமூன்று மணிநேரச்

தொடர்ச்சி 3ம் பக்கம்

## பல்லாண்டு வாழப் பாடுவோம்

மரகத நிலமும் எங்கள்
மாதவ மொழியும், வாழ்வும்
வதைபடக் கண்டும் நாங்கள்
வளைந்துபோய் இருந்தோம், எங்கள்
உதயமே! தமிழர் நெஞ்சில்
உணர்வினைத் தந்தாய், நாமும்
உதைக்கலாம் எதிரிக் கென்ற
உண்மையைச் சொல்லித் தந்தாய்

குட்டிடக் குனிந்தோம், மாற்றான்
குரல்வளை நெரித்த போதும்
கட்டுண்டு படுத்தோம், மூச்சுக்
காட்டிடா திருந்தோம், நெற்றிப்
பொட்டிடக் கூட அஞ்சிப்
புழுங்கினோம் தலைவா! உன்கை
பட்டபின் தானே நாங்கள்
பாய்கின்ற புலிகள் ஆனோம்.

இந்தமண் வீரம் கொண்டு
எழுந்திட வைத்தாய், பிஞ்சுச்
சந்தனப் பூவும் இங்கே
சரித்திரம் படைக்கச் செய்தாய்!
வந்துநம் மண்ணை யாரும்
வளைத்திட முடியா தென்றாய்
முந்தைய வீரம் மீண்டும்
முளைத்திடச் செய்தாய் வாழி!

-புதுவை இரத்தினதுரை-

## ஆனையிறவுப்பெருந்தளம்

1760ஆம் ஆண்டு ஒல்லாந்தர் தமது பாதுகாப்பிற்காக இக் கோட்டையை அமைத்திருந்தனர்.

காலத்திற்குக் காலம் ஆக்கிரமிப்பாளர்களின் கைமாறிய ஆனையிறவுக்கோட்டை 1958ஆம் ஆண்டு, சந்திரிகாவின் தந்தையார் பண்டாரநாயக்காவினால் இராணுவமுகாமாக்கப்பட்டது. தமிழர்களை ஒடுக்க பண்டாரநாயக்காவினால் அமைக்கப்பட்ட முகாமே, தற்போது பெரும் படைத்தளமாக விஸ்தரிக்கப்பட்டிருந்தது.

வடக்கே சோரன்பற்றுவரை, கிழக்கே தாயடிமுதல் கட்டைக்காடுவரையும், தெற்கே கிளிநொச்சி வரையும் சுமார் 259 சதுர கிலோமீற்றர் பரப்பில் முகாம்கள், மினி முகாம்கள், தளங்கள், தளத் தொகுதிகளைக் கொண்டு பெரும் பாதுகாப்புடன் ஆக்கிரமிப்பின் முக்கிய மைய நிலையாக ஆனையிறவுத் தளம் பின்னாளில் முக்கியம் பெற்றது.

குடாநாட்டு ஆக்கிரமிப்பை தக்கவைக்கவும், வன்னிக்கு பாதை திறப்பதற்கான பிரதான ஆரம்பத்தளமாகவும் கொண்டு, ஆனையிறவுத் தளத்திற்கு சந்திரிகா அரசு கொடுத்த முக்கியத்துவம் மிகப்பெரிது.

இராணுவச் செலவில் அதிக தொகை இதற்கு ஒதுக்கப்பட்டது. உலகநாட்டு இராணுவ விற்பனர்களிடம் விசேட பயிற்சிகள் பெற்றவர்கள் கட்டளையதிகாரிகளாக இங்கு அனுப்பப்பட்டனர்.

பதினையாயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர். சிறீலங்கா அரசின் மேலாண்மையின் சின்னமாகவும், சிங்களத்தின் உயர் கௌரவத்தின் சின்னமாகவும் ஆனையிறவுப் பெருந்தளம் கருத்தேற்றப்பட்டிருந்தது.

அன்று, தந்தையார் காலத்தில் புதுவடிவம்பெற்ற ஆக்கிரமிப்புச் சின்னம், இன்று மகள் காலத்தில் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டிருக்கின்றது. ■

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

# வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவுத் தகர்ப்பு

தமிழீழத்தில், ஆனையிறவுத் தளம் அமைந்திருந்த பிரதேசம் பூகோளரீதியாக கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதி. இதனை, தமிழீழத்தை ஆக்கிரமித்திருந்த ஆக்கிரமிப்பாளர்கள் நன்கு உணர்ந்து கொண்டதாலேயே, இங்கு நிரந்தரமாகவே, காவல் நிலைகளையும் படைத்தளங்களையும் அமைத்திருந்தனர்.

1760ஆம் ஆண்டு, தமிழீழப்பகுதியை ஆக்கிரமித்திருந்த ஒல்லாந்தர், இங்கு கோட்டை அமைத்து, தமது பாதுகாப்புக்கான தளத்தை இட்டனர். பின்னர் ஆங்கிலேயர் அதனைத் தமது தளமாகக் கொண்டனர்.

பின்னர் சிறீலங்காவின் ஆட்சியிலோ, சிறீலங்காவின் வனத்திணைக்களமும், சுங்கஇலாகாவும் ஆனையிறவை தமது பாவனையில் வைத்திருந்தனர். பின்னர் பொலிஸார், இராணுவம் என அது கைமாறியது.

அன்றிலிருந்து, இன்றுவரை ஆனையிறவுத் தளம் காலத்திற்குக் காலம் ஒவ்வொரு ஆக்கிரமிப்பாளர்களாலும், பலப்படுத்தப்பட்டு, பேணப்பட்டு, தமது குடாநாட்டு ஆக்கிரமிப்பை தக்கவைத்துக் கொள்ளும் பிரதான காவல்காரனாக கருதப்பட்டு வந்தது.

ஆனையிறவில், சிறீலங்கா இனஒடுக்குமுறை அரசால் இராணுவமுகாம் ஸ்தாபிக்கப்பட்டது 1958இல். தற்போதைய சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவின் தந்தையார் காலத்தில் ஆனையிறவில் முதல்முதலாக சிறீலங்காவின் இராணுவ முகாம் அமைக்கப்பட்டது. தமிழின ஒடுக்குமுறையை மேற்கொள்ள வசதியாக பண்டாரநாயக்காவால் அமைக்கப்பட்ட ஆனையிறவு இராணுவ முகாம், ஒடுக்குமுறைக்கெதிரான விடுதலைப் போரின் வளர்ச்சிப்போக்கில் தன்னையும் வளர்த்துக்கொண்டது.

1991ஆம் ஆண்டு 7ஆம் மாதம் விடுதலைப் புலிகளால், ஆகாய கடல் வெளி இராணுவ நடவடிக்கையில் முற்றுகைக்குள்ளாக்கப்பட்டபோது எண்ணூறு வரையான இராணுவத்தினர் அங்கு நிலைகொண்டிருந்னர். உலகத்தின் பார்வையை எமது தேசத்தில் குவியச் செய்ததுடன், விடுதலைப் போராட்டத்தை இன்னொரு பரிமாணத்திற்கு உயர்த்திய, ஆகாய கடல் வெளி இராணுவ நடவடிக்கை, தன் உரிய இலக்கை அடையமுடியவில்லை என்றபோதும், அதன் பிரதிபலன் விடுதலைப் போராட்டத்திற்கு இராணுவ அரசியல் ரீதியாக சாதகமாகவே அமைந்தது. முக்கியமான போராட்ட நிகழ்வாக, அமைந்த அன்றைய முற்றுகைச் சமரே, இன்றைய வெற்றியை எதிர்வுகூறியிருந்தது.

ஆனையிறவுமுகாம் வீழ்ச்சி, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இராணுவ அரசியல் தளங்களில் மிகமுக்கியமான திருப்பத்தை ஏற்படுத்தவல்லது என்பதை உணர்ந்துகொண்டு, அதன் இருப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொண்டு, தற்போதைய சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா ஆனையிறவு முகாமை மேலும் பலப்படுத்தி, பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினரைக் குவித்தார். யாழ் குடாநாட்டை ஆக்கிரமித்துள்ள சிங்களப்படையினரின் ஆக்கிரமிப்பு இருப்பின் தலைவிதியைத் தீர்மானிக்கும் முக்கிய புள்ளியாக ஆனையிறவுத்தளம் அதிமுக்கியத்துவம் பெற்றது.

இறுதியாக, பலம்வாய்ந்த சிங்களப் படையணிகளில் அதிமுக்கியமான படைப்பிரிவுகளைச் சேர்ந்த பதினையாயிரத்துக்கும் மேற்பட்ட சிங்களப்படையினர் அங்கு குவிக்கப்பட்டிருந்தனர். அதிநவீன படைக்கருவிகளும், கனரக இராணுவ வாகனங்களும், டாங்கிகள் கவசவாகனங்கள் என, போர் மூண்டிருக்கும் இருநாடுகளுக்கிடையேயான எல்லைப்பகுதி இராணுவத்தளத்திற்கு ஒத்தவகையில், பெரும் படையெடுப்பை முறியடிக்கும் வல்லமையுடன் ஆனையிறவுத்தளத்தை, சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா பலப்படுத்தி வைத்திருந்தார். அதற்காகவே இராணுவச் செலவீனத்துக்கு பெருந்தொகையை ஒதுக்கினார். உலக இராணுவ விற்பனர்களின் போரியல் நுட்பங்களை கற்றுத்தேர்ந்த படைத்தளபதிகளை அனுப்பிவைத்தார்.

ஆனையிறவின் முக்கியத்துவம் கருதி, அதனைப் பாதுகாக்க சிறீலங்கா அரசு பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்ததுபோல், தமிழீழ விடுதலைப் புலிகளும் ஆனையிறவுப் பெருந்தளத்தைப் பிடுங்கி எறியும் நீண்டகால அவாவுடன் அதற்கான காலத்திற்காய் காத்திருந்தனர்.

தமிழீழத்தின் தொண்டையை நெரித்தபடி, அதன் வாழ்வையும் வளத்தையும் அழித்தபடி இராணுவ அரக்கனாய் குந்தியிருந்த ஆனையிறவுப் பெருந்தளத்தினை, அடித்துவீழ்த்தும் நாளுக்காக விடுதலைப் புலிகள் காத்திருந்தனர். கடந்தகால பட்டறிவுகள், பாடங்கள், போரியல் நுணக்கங்கள், ஜெயசிக்குறுய் கற்றுத்தந்த மரபுவழிப் போர்ப்பயிற்சிகள் என்பன, விடுதலைப் புலிகளின் வீரத்தையும் தீரத்தையும் விவேகத்தையும் புடம்போட்டிருந்தன.

எதிரியின் பலம், பலவீனம் என்பனவற்றை துல்லியமாக எடைபோட்டு, விடுதலைச் சேனையின் பலத்தை கருத்தில்கொண்டு, தமிழீழத் தேசியத் தலைவரால் நிதானமாக வரையப்பட்ட தாக்குதல் பாடத்தின்படி, போராளிகள் புயல் எனச்சென்று, இந்த வரலாற்றைப் படைத்திருக்கின்றார்கள்.


முன்னைய ஆனையிறவு முற்றுகைச் சமரின் போது, விடுதலைப் புலிகளால் கவசவாகனங்களாக வடிவமைக்கப்பட்ட புல்டோசர்களும், போராளிகளின் தயாரிப்பான பசீலன்2000 போன்ற வகைகளே, முற்றுகைச் சமரில் பிரதான பாத்திரமேற்றன. ஆனால் இன்று நிலைமை வேறு. ஏதிரிப்படையே, நீண்டகால தொடர் போரின் மூலமாக விடுதலைப் புலிகளை ஆயுதரீதியாக நன்கு பலப்படுத்தியுள்ளனர். மரபுவழிப் போர்ப் பயிற்சியை விடுதலைப் புலிகளக்கு வழங்கிய பெருமையும் அவர்களையே சாரும்.

இந்த நீண்டகால களமுனை அனுபவமும், எதிரிப்படை தந்த அயுதங்களும், எதிரியின் அதியுயர் பலம் வாய்ந்த பெருந்தளத்தை, குறுகிய காலத்தில் அழித்தொழிக்கும் பலத்தை வழங்கியிருக்கின்றது.

போர்நிறுத்தம் செய்தால், விடுதலைப் புலிகள் பலம்பெற்றுவிடுவார்கள் என்றும், அந்தக்கால இடைவெளியில் தம்மை மீளமைத்துக்கொண்டு மீண்டும் சண்டைசெய்ய விளைவார்கள் என்றும் சந்திரிகா அர்த்தமற்றமுறையில் பிரச்சாரம் செய்துகொண்டிருக்கையில், இந்த வரலாற்றுச் சாதனை படைக்கப்பட்டிருக்கின்றது. இருநூற்று நாற்பதாண்டு காலமாக தடைப்பட்டிருந்த வன்னிக்கும் யாழ் குடாநாட்டுக்குமான சுதந்திரமான போக்குவரத்துப் பாதை தற்போது விடுதலைப் புலிகளால் திறந்துவைக்கப்பட்டிருக்கின்றது.

ஆனையிறவுத்தள அழிப்பு, யாழ்ப்பாணத்திற்கான பாதையை மட்டும் திறந்துவிடவில்லை. விடுதலைப் போராட்டப்பாதையிலும் அது திருப்புமுனையை ஏற்படுத்தப்போகின்றது.

ஆனையிறவுத்தளம் அழித்தொழிக்கப்பட்டிருக்கின்றது. இதனால் ஏற்படப்போகும் இராணுவ அரசியல் தாக்கங்கள், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஏற்படப்போகின்ற மாற்றங்கள் எதிர்வரும் காலங்களில் நன்கு வெளிப்படும். ■




| | | | | | |
|---|---|---|---|---|---|
| **AUSTRALIA**<br>TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072. | **CANADA**<br>WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5. | **DENMARK**<br>LTTE<br>P.O.Box 47,<br>7400 Herning. | **FRANCE**<br>TCC<br>341 Rue Des<br>Pyrenees,<br>75020 Paris. | **GERMANY**<br>TCC<br>Postfach 101613,<br>46016 Oberhaousen. | **ITALY**<br>TCC<br>Via Paolo Balsamo-11<br>90100 Palermo. |
| **NETHERLANDS**<br>TCC<br>P.O.Box 18600,<br>2502 EP Den Haag. | **NORWAY**<br>TCC<br>P.C.BOX 1699 Vika,<br>0110 Oslo. | **SWITZERLAND**<br>WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich. | **SWEDEN**<br>TCC<br>Glomminge Grand-25,<br>3rd Floor,<br>16362 Spanga. | **UNITED KINGDOM**<br>UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB. | **U.S.A**<br>W.T.C.C<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432. |

1ம் பக்கத் தொடர்ச்சி

சமரின் பின்னர் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

டிசம்பர் இருபத்தியோராம் திகதி, பரந்தன் இரசாயனக்கூட்டுத்தாபன முகாமையும், தொடர்ந்து கோரக்கன்கட்டு இராணுவமுகாமையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றிக்கொண்டனர்.


டிசம்பர் இருபத்தியேழாம் திகதி, ஆனையிறவின் தெற்குப்புறத்தே மேலும் நெருங்கி, உமையாள்புரம் இராணுவ முகாமை விடுதலைப் புலிகள் கைப்பற்றிக்கொண்டனர். இதன்மூலம் ஆனையிறவின் தென்பகுதி, விடுதலைப் புலிகளின் பெரும் தாக்குதலை எக்கணமும் எதிர்கொள்ளவேண்டிய நெருக்கடி நிலைக்கு முகம் கொடுத்தவண்ணம் இருந்தது. ஆனையிறவின் தென்புறத்தே தமது படையணிகளை இலாவகமாக முன்னகர்த்தி, தளத்தின் அச்சுறுத்தலை பாதுகாத்தபடி விடுதலைப் புலிகள் தமது கவனத்தை பெரும் தளத்தின் கிழக்கு, வடகிழக்கு, வடக்கு திசைவழியே செலுத்தினர்.

சிறிது சிறிதாக நகர்ந்து சிங்களப்படையின்ரின் முகாம்கள் மினிமுகாம்களைத் தகர்த்து, தமது நிலைகளை பலப்படுத்தியபடி விடுதலைப் புலிகளின் படையணிகள் நிதானமாக முன்னேறின.

தென்பகுதியில், தமது படையணிகளை உறுதியாக நிலைகொள்ள வைத்த விடுதலைப் புலிகள், மறுபுறத்தே, ஆனையிறவின் வடபுறத்தே, நெருக்குதல்களை அதிகரித்தனர். ஆனையிறவின் தரைவழி பிரதான வழங்கல் பாதையைத் துண்டாடும் இலக்குடன் மெதுவாகவும் நிதானமாகவும் முன்னேறினர்.

மார்ச் 27ஆம் திகதி, பளை இராணுவ முகாமின் முன்னரங்க நிலைகளை சிதைத்து ஊடுருவி மையநிலைவரை சென்ற விடுதலைப் புலிகள், ஆட்டிலறித்தளத்தை அழித்தனர். பதினொரு ஆட்டிலறிகள் அழிக்கப்பட்டன. ஆனையிறவின் பாதுகாப்பை, உறுதிப்படுத்திக்கொண்டிருந்த ஆட்டிலறித்தளமே அழிக்கப்பட்டது. ஆனையிறவு இயக்கச்சிப் பகுதிகளில் இருந்து விடுதலைப் புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தல்களில் இருந்து தப்பிக்க, பின்னகர்த்தப்பட்ட ஆட்டிலறிகள் பளையிலேயே பெரும் பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருந்தன. இங்கிருந்தே, ஆனையிறவுக்கான ஆட்டிலறிப்பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. இத்தளமும் அழிக்கப்பட்டதால், ஆனையிறவுத்தளம் ஆபத்துக்காலத் தோழன் இன்றி பரிதாப நிலையை அடைந்தது.

மார்ச் 29ஆம் திகதி, வடமராட்சி கிழக்கி தாளையடி, செம்பியன்பற்று, மருதங்கேணி ஆகிய பலம்வாய்ந்த மூன்று முக்கிய முகாம்களை உள்ளடக்கிய பெரும் படைத்தளம் விடுதலைப் புலிகளால், பன்னிரண்டு மணிநேரச் சண்டையின் மூலம் கைப்பற்றப்பட்டது. இந்த வெற்றியின்



உதவியுடன், கண்டிவீதிவரை விடுதலைப் புலிகளின் படையணிகள் முன்னேறின. பளைக்கும் எழுதுமட்டுவாளுக்கும் இடைப்பட்ட பகுதியில் பிரதான கண்டிவீதியை விடுதலைப் புலிகளின் படையணிகள் குறுக்கறுத்தன. சிங்களப்படைய்யை, இரு திசைவழியே விரட்டியடித்துவிட்டு, விடுதலைப் புலிகள் அங்கு தமது நிலைகளை அமைத்துக்கொண்டனர்.

ஆனையிறவின் பிரதான வழங்கல் பாதை விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது. இத்தாவில், முகமாலைப் பகுதிகள் விடுதலைப் புலிகளின் கைகளில் வந்துவிட்டன.

பிரதான வழங்கல் பாதையை மீட்க, சிங்களப்படையினர் பகீரத முயற்சிகளை மேற்கொண்டனர். சிறீலங்காவின் முப்படைத்தளபதிகளும் பலாலியில் தங்கியிருந்து படை நடவடிக்கைகளை நெறிப்படுத்தியபோதும், சிங்களப்படையினரின் முயற்சிகள் வெற்றிபெறவில்லை. ஆறுக்கும் மேற்பட்ட தடவைகள் சிங்களப்படை மேற்கொண்ட பல்முனை நகர்வுகள் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டன. சிங்களப்படை பெரும் இழப்பைச் சந்தித்தது.

மார்ச் 31ஆம் திகதி, வடமராட்சி கிழக்கில், மேலும் பகுதிகளை விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். நாகர்கோவில், குடாரப்புவரை விடுதலைப் புலிகளின் படையணிகள் முன்னேறி நிலைகொண்டிருந்தன.

இறுதிக்கட்டமாக, ஆனையிறவு முகாமை முழுமையாக முற்றுகைக்குள் கொண்டு வரும் தாக்குதலை விடுதலைப் புலிகளின் கொமாண்டோ அணிகள், ஏப்பிரல் பதினெட்டாம் திகதி ஆரம்பித்தனர். பளைக்கும் இயக்கச்சிக்கும் இடைப்பட்ட பகுதியை குறிவைத்து விடுதலைப் புலிகளின் கொமாண்டோக்கள் தாக்குதல் நடத்தினர். பெரும் பகுதியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். மாசார், சோரன்பற்று பகுதிகள் மீட்கப்பட்டதோடு, இயக்கச்சிக்கு நெருக்கமாக விடுதலைப் புலிகளின் அணிகள் நிலைகொண்டன. புதுக்காட்டுச்சந்தி விடுதலைப் புலிகளால் அன்றே கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து, முற்றுகை முழுமை பெற ஆரம்பித்தது.

ஏப்பிரல் பத்தொன்பதாம் திகதி, பளைக்கும் இயக்கச்சிக்கும் இடையிலான ஆறு கிலோமீற்றர் தூரத்தை விடுதலைப் புலிகள் தம்வசம் கொண்டுவந்தனர். முற்றுகை மேலும் இறுகியது. இயக்கச்சிக்கு மிகஅருகில் தற்போது விடுதலைப் புலிகள்.

இறுதிக்கட்டத் தாக்குதலை, விடுதலைப் புலிகள் இருபதாம் திகதி மிகவும், உறுதியுடனும் உத்வேகத்துடனும் ஆக்ரோசத்துடனும் ஆரம்பித்தனர். பகற்பொழுதில், மிகத்துணிகரமாகவும் நம்பிக்கையுடனும், களம் இறங்கிய விடுதலைப் புலிகளின் கொமாண்டோ அணிகள், ஆனையிறவின் வடக்காக, முகாம்கள், மினிமுகாம்கள், படைத்தளத்தொகுதிகளை உடைத்து துவம்சம் செய்தபடி ஆக்கிரமிப்பு மையநிலைநோக்கி வேகமாக முன்னேறினர்.

நாற்பத்தெட்டு மணிநேர உக்கிரமான சண்டையின் பின்னர், ஆனையிறவு இயக்கச்சிப் பெரும்தளம் விடுதலைப் புலிகளின் கைகளில் முழுமையாக வந்தது. சிங்களப்படையினர் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர். விடுதலைப் புலிகளின் மழைபோன்ற தாக்குதலை ஊடறுத்துக் கொண்டு, சிங்களப்படையினர் கிளாலி நோக்கி தலைதெறிக்க ஓடினர். ஒரு வரலாறு படைக்கப்படுகின்றது.

பதினையாயிரத்துக்கும் மேற்பட்ட சிங்களப்படையினர் பலம்பொருந்திய நிலையில், அதிநவீன ஆயுதங்களுடன், இராணுவத் தளபாடங்களுடன் நிலைகொண்டிருந்த பெரும்தளம், நாற்பத்தெட்டு மணிநேர இறுதிக்கட்டத் தாக்குதலில் முப்பத்தைந்து போராளிகள் இழப்புடன் வெற்றிகரமாக அழித்தொழிக்கப்பட்டிருக்கின்றது. விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றில் பெரும் ஆயுதக் களஞ்சியமொன்றை கைப்பற்றியதும், பெருந்தொகைப்படையினர் ஒரேதடவையில் கொல்லப்பட்டிருப்பதும் இங்கேதான் நிகழ்ந்திருக்கின்றது. உலக விடுதலைப் போராட்ட வரலாற்றில் வியத்தகு சாதனையொன்று பதிவாகியுள்ளது. ■




# 1991 ஆகாய கடல்வெளி இராணுவ நடவடிக்கை

இன்று வெற்றிகொள்ளப்பட்டுள்ள ஆனையிறவுப் பெருந்தளம், ஏற்கெனவே ஒன்பதாண்டுகளுக்கு முன்னதாக, விடுதலைப் புலிகளின் முற்றுகைக்கு உள்ளானது. ஆயிரத்தித் தொளாயிரத்து தொண்ணூற்றோராம் ஆண்டு, இந்த முற்றுகைச்சமர் இடம்பெற்றிருந்தது. விடுதலைப் போராட்ட வரலாற்றில், இராணுவ அரசியல் தளங்களில் ஒரு முக்கியமான தாக்கத்தை விளைவிக்கக்கூடிய ஒரு முற்றுகைச் சமராக அது அமைந்திருந்தது. குறைந்த ஆள் மற்றும் ஆயுத வலுவுடன் விடுதலைப் புலிகள், உலகம் வியக்கின்ற வகையில் முப்பத்தியொரு நாள் முற்றுகைச் சமரை நடத்தியிருந்தனர்.

கெரில்லாப்படையணிகளாக, பல வியத்தகு சாதனைகளைப் படைத்த விடுதலைப் புலிகள், ஒரு மரபுப்படையணியாகி சிங்கள இராணுவத்துடன் முப்பத்தியொரு நாட்கள் மோதிய காட்சியை உலகம் வியப்புடன் பார்த்தது. இலங்கைத்தீவில் இரு இராணுவங்கள் உண்டென்ற யதார்த்தத்தை உலகம் உணரத் தலைப்பட்டதும் இத்தாக்குதலாலேயே.

'ஆகாய கடல்வெளி' இராணுவ நடவடிக்கை என, விடுதலைப் புலிகளால் முதல்முதலாக பெயர்சூட்டப்பட்டு நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை இதுவாகும். 10-07-1991 அதிகாலை ஆரம்பித்து 09-08-1991 மாலைவரை நடைபெற்ற இந்த முற்றுகைச்சமர், இருவேறு பரிமாணங்களில் நடைபெற்றது.

ஆனையிறவுப் படைத்தளம் மீதான முற்றுகைச் சண்டையாகவும், ஆனையிறவுப் படைத்தளத்தை விடுதலைப் புலிகளின் முற்றுகையில் இருந்து காக்க, கடல்வழித் தரையிறங்கலை மேற்கொண்டு பிரதான தளம்நோக்கி நகர்ந்த சிங்களப்படையினரை எதிர்த்து நடத்தப்பட்ட வெற்றிலைக்கேணி, புல்லாவெளி நேரடிச் சண்டைகளாகவும் ஆகாய கடல்வெளி இராணுவ நடவடிக்கை அமைந்திருந்தது.

முற்றுகைச் சண்டையிலும், நேரடிச் சண்டையிலும் எண்ணாயிரத்திற்கும் அதிகமான சிறீலங்காப்படையினர் ஈடுபட்டனர். விமானப்படையும் கடற்படையும் சிங்களப்படையின் அதிமுக்கிய துணையாகின.

ஆனையிறவுத் தளத்தைக் காப்பாற்ற, விமானப்படையும் கடற்படையும் ஓயாது இயங்கின.

இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட புலிவீரர்கள், ஆகாய கடல்வெளி இராணுவ நடவடிக்கையில் பங்கேற்றனர்.

வெற்றிலைக்கேணியில் தரையிறங்கி, விடுதலைப் புலிகளின் கடுமையான எதிர்ப்புக்களை, இருபத்திமூன்று நாட்களாக எதிர்த்துப்போராடி, மெது மெதுவாக நகர்ந்து, பெரும் இழப்புக்களுடன், சிறீலங்காப்படையினர் ஆனையிறவு முற்றுகையை ஒருவாறு முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

விடுதலைப் புலிகளால், முதல் முறையாக பெயர்சூட்டி மரபுவழிப்போர் முறையில் நடத்தப்பட்ட ஆகாய கடல்வெளி இராணுவ நடவடிக்கையின்போது, நானூறுக்கும் மேற்பட்ட சிறீலங்காப் படையினர் கொல்லப்பட்டனர். ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயப்படுத்தப்பட்டனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில், ஐநூற்றி எழுபத்திமூன்று போராளிகள் வீரச்சாவடைந்தனர். ஆயிரத்தி ஐநூறு புலி வீரர்கள் காயமடைந்தனர்.

இந்த நீண்ட முற்றுகைச் சமரில், சிறீலங்காப்படையினரின் பதினொரு கவசவாகனங்கள் சேதமாக்கப்பட்டன. இரண்டு போர்விமானங்கள், ஒரு அவ்ரோ விமானம், ஒரு உலங்கு வானூர்த்தி என்பன, சேதமடைந்தன. ■

# அன்று சொன்னது இன்று நடந்தது
# முகாம்கள் சரிந்தன முகங்கள் மலர்ந்தன

## தலைவன் பெருமைகள் பாடி மக்கள் ஆனந்த நடனம்
## மகிழ்ச்சிப் பெருக்கில் உலகத் தமிழர் இறும்பூதெய்தினர்

1995இல் சந்திரிகா அம்மையார் பேச்சுவார்த்தைக்கான ஆயத்த நாடகங்கள் ஆடிய பொழுது, முதலில் எங்கள் மக்களின் நாளாந்த வாழ்வுக்கு தேவையானவைகளைச் செய்யுங்கள். அவர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்து அவர்களின் நடமாடும் சுதந்திரத்துக்குத் தடையாக விளங்கிய பூநகரி முகாமை அகற்றுங்கள் என்று எங்கள் தலைவர் பிரபாகரன் கேட்டார். தமிழ் மக்களின் நலனில் எவ்வித அக்கறையும் அற்ற சந்திரிகா தனது இராணுவ நலன்களைக் கருத்தில் கொண்டு அதனை மறுத்தார். ஆனால் நடந்தது என்ன விடுதலைப் புலிகளின் முயற்சியால் சிறிது காலத்தில் பூநகரி முகாம் இருந்தஇடம் தெரியாது மறைந்தது. இன்றோ, அப்பகுதி இராணுவ முகாங்களுக்கு எல்லாம் தாய் முகாமாக விளங்கிய ஆனையிறவு முகமும் அந்தப் பகுதியிலுள்ள இராணுவ முகாங்களுக்கு எல்லாம் காவலாக விளங்கிய இயக்கச்சி முகாமும் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டுவிட்டன. எங்கள் தலைவன் அன்று சொன்னது இன்று நடந்தது. நீயாக வெளியேறு இல்லையேல் நாமாக வெளியேற்றுவோம் என்ற எச்சரிக்கையை சந்திரிகா மீறியதன் விளைவு இன்று ஆனையிறவுப் பெருந்தளத்தில் ஆயிரத்திற்கும் மேலான ஆளணி இழப்பையும் பல கோடி பெறுமதியான ஆயுத தளபாட இழப்புக்களையும் அவரின் இராணுவம் இழந்து பின்வாங்கியுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் படைகளை முகாங்களுக்குள் முடங்கியிருக்கச் செய்யுங்கள் நாம் பேசுவோம் என்று நல்லெண்ண சமிக்ஞை கொடுத்த நேரங்களில் எல்லாம் அதகைக் கேட்டிருந்தால் இன்று வீறு கொண்டெழுந்துள்ள விடுதலைப் புலிகளுக்கு முன்பாக இவ்வளவு இழப்புக்களுக்கு இடையில் சந்திரிகா படைகள் முடங்கி அடங்கும் அவலம் தோன்றியிருக்காது. விடுதலை உணர்வுகொண்ட மக்களை எந்த சக்தியாலும் அடக்க முடியாது என்பதற்கு ஆனையிறவு வீழ்ச்சி மற்றொரு வரலாறாக உலகில் பதிவாகியுள்ளது.

இந்த மகத்தான வெற்றியினை ஈட்டிக்கொடுத்ததின் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் சிறீலங்கா இராணுவத்தின் முகாம்களை மட்டும் சரிக்கவில்லை சிறீலங்கா இராணுவத்தின் ஆணி வேரையே பிடுங்கியுள்ளனர். இனிமேல் சரியப்போவது இராணுவ முகாம்கள் அல்ல ஒட்டு மொத்தமான சிறீலங்கா இராணுவமுமே என்பது ஆனையிறவின் வீழ்ச்சியால் உலகறிந்த விடயமாகியுள்ளது. இந்த சிறீலங்காவின் பெருந்தளம் பதினேழாயிரம் படையினரால் நிரப்பப்பட்டு நவீன ஆயுத தளபாடங்களுடன் தமிழீழத் திருநாட்டின் சுதந்திரத்திற்குச் சவாலாக விளங்கிய பிரதேசம். இதனை மீட்டுள்ளமை தமிழீழத்தின் தொண்டைமுள்ளை அகற்றி சுகமான மூச்செடுப்பை தொடக்கி வைத்துள்ள செயற்பாடாக கருதப்படுகிறது. இனிமேல் தமிழீழத்தின் கலாச்சார பூமியான யாழ்ப்பாண நன்னகரின் சுதந்திரம் நோக்கிய பயணம் சுலபமாகிவிடும் என்பது களநிலை அறிந்த அனைவரதும் நம்பிக்கையாக உள்ளது. இன்னும் சில வாரங்களுள் ஏதாவது செய்யப்படாவிட்டால் யாழ்ப்பாணத்தின் இழப்பை யாராலும் தடுக்க முடியாததாகிவிடும் என சிறீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஓலமிட்டுள்ளார். சிங்கள பௌத்த பேரினவாதத்தின் ஆதரவாளர்களாக்த் தம்மை வெளிப்படுத்துவதில் இரு பெரும் சிங்களக் கட்சிகளும் முந்திக்கொண்டு செயற்படுவதற்கு ரணிலின் ஓலம் மற்றொரு சான்றாக உள்ளது. ரணில் மட்டுமல்ல எல்லாச் சிங்களத் தலைமைகளுமே தமிழர்கள் தங்கள் பாரம்பரியத் தாயகத்தைப் பாதுகாப்பதற்காகவும் அந்தத் தாயகத்தில் தாம் வாழ்வதற்காகவும் போராடுகின்றார்கள் என்ற யதார்த்தத்தை ஏற்கத்தயாராக இல்லை. ஏதோ சிங்கள பூமியொன்றின் ஒரு பிரதேசத்தை துண்டிப்பதற்குத் தமிழர்கள் போராடுவதாகவே அனைத்துச் சிங்களத் தலைமைகளும் தமது கருத்துக்களை வெளியிடுகின்றன. இதனால் இனியும் சிங்களத் தலைமைகள் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காட்டுவார்கள் என நம்ப எந்தத் தமிழீழக் குடிமகனும் ஆயத்தமாக இல்லை. தமிழீழ மக்கள் தமது அரசியல் எதிர்காலத்தை தாங்களே நிர்ணயிக்கின்ற தமது அடிப்படை மனித உரிமையான சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் மூலம் தமது தாயகத்தை மீளவும் சுதந்திர பூமியாக்கும் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றியையே தமது பாதுகாப்பான அமைதி வாழ்வுக்கான ஒரே தீர்வாகக் கருதி, தங்கள் மகத்தான தேசத் தலைவர் மேதகு பிரபாகரன் தலைமையிலே தங்கள் இலக்கை நெருங்கிக் கொண்டிருக்கின்றனர். இதனையே 17000 சிங்களப் படைகள் வான், கடற்படைகளின் துணையுடன் நவீன ஆயுதங்களுடன் ஆக்கிரமித்து நின்ற ஆனையிறவின் வீழ்ச்சி உலகிற்கு தெளிவுபடுத்தியுள்ளது.

அத்துடன் இந்த ஆனையிறவுப் பெருந்தளத்தில் ஆக்கிரமித்து நின்ற சிறீலங்காப் படைகள் தமிழீழத் தாய்நாட்டினை வடக்கென்றும் கிழக்கென்றும் புவியியல் ரீதியாக கூறுபோடும் சிங்களப் பௌத்த பேரினவாதத்தின் செயலுக்கு பெரும் ஆயுதபலமாக இருந்துவந்தது. தற்பொழுது தமிழீழ விடுதலைப் புலிகள் இதனைத் தகர்த்து எறிந்துள்ளமை தமிழீழத் தாய்மண்ணின் புவியியல் இணைப்பை மீளவும் உறுதிசெய்ய உறுதியான தளமமைத்துள்ளது. ஆதலால்தான் யாழ்ப்பாணக் குடாநாட்டின் கழுத்தாக விளங்கிய ஆனையிறவினை விடுதலைப் புலிகள் கைப்பற்றியமை ஒரு கல்லில் இரு மாங்காய்களை விழுத்திய செயலாக மாறியுளள்து. இனி யாழ்ப்பாணக் கலாச்சார பூமியும் மீளும், தென்தமிழீழமும் தன் விடுதலையை விரைவில் பெற்றிடும் என்பது பலரின் எதிர்வுகூறலாக உள்ளது.

ஆயினும் ரத்வத்தை கும்பல் இன்னமும் கள யதார்த்தத்தை உணர்ந்து உண்மைகளை ஏற்கும் நிலையில் இல்லை. எப்படியாவது தங்கள் தமிழின அழிப்பைத் தொடர்ந்து தமிழர்களை அடிமையாக்கியே ஆதல் வேண்டுமென்பதில் வேகம்கொண்டு நிற்கின்றனர். இதனால் பெரும் போர்க்களமாகவே எமது தாயகத்தை மாற்றும் அனைத்து முயற்சிகளிலும் சந்திரிகா அரசாங்கம் தொடர்ந்து முயற்சிக்கும் என்பதையே அவர்களின் ஆனையிறவு வீழ்ச்சி தொடர்பான அணுகுமுறைகள் பார்வைகள் தெளிவாக்கி வருகின்றன. எப்படி அன்று 1995இல் எங்கள் தலைவர் பிரபாகரன் அவர்கள் கூறிய கருத்துக்களை ஏற்கமறுத்து சண்டையைத் தொடங்கி எம் மக்களுக்கு தாங்கொணாத இன்னல்களை விளைத்தனரோ அதுபோல இன்றும் தமது தள்ளாடும் படைகளுக்கு எவ்விதத்திலாவது தெம்பூட்டி எங்கள் சொந்தங்களை தேசங்களை அழிப்பதற்கு சந்திரிகா அரசாங்கம் பல வழிகளில் வேகமாக முயற்சிக்கின்றது. எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவோ ஒரு படிமேலே போய் பிறநாட்டு இராணுத்துணைகளை பெற்றாவது தமிழர்களை அவர்களின் யாழ்ப்பாண கலாச்சார பூமியை மீளப்பெறுவதைத் தடுக்கவேண்டுமென சூளுரைத்துள்ளார். உலகின் சக்தி வாய்ந்த பிறநாட்டு இராணுவ நிபுணர்களின் பயிற்சியை, வழிகாட்டலைப் பெற்று பயிற்சி அளித்தவர்களே எந்த நிலையிலும் தாக்குப்பிடிப்பார்கள் எனச் சான்றிதழ் வழங்கிய 53வது 54வது படை அணிகளை விடுதலைப் புலிகள் அழித்தும்கூட இன்னமும் இராணுவச் சிந்தனைகள் சிங்களத் தலைவர்களைப் பிடித்தாட்டுவது அவர்களின் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் உச்ச வெளிப்பாட்டை உலகிற்கு உணர்த்துகிறது. இந்நிலையில் அவர்கள் எவ்வித கூப்பாடு போட்டாலென்ன எங்கள் தலைவன் பிரபாகரன் எம் மண்ணை மீட்டெடுப்பதில் வெற்றியின்மேல் வெற்றியாகச் சேர்த்து வருகின்றார் என்பதை தமிழர்களாகிய நாம் அறிவோம். அந்த மகத்தான தலைவனின் வழிகாட்டலில் வாழ்கின்றோம் என்ற உணர்வே தமிழர்களின் அடிமைத்தனங்களை எல்லாம் உடைத்தெறியும் வல்லமையை தமிழர்களுக்கு அளித்து வருகிறது என்பதற்கு ஆனையிறவும் ஓயாத அலைகள் 3இன் மாபெரும் இராணுவ வெற்றிகளும் நம் கண்முன்னே சாட்சியளிக்கின்றன. நாம், நமது தலைவனின் பார்வையில் வீரமும் ஓர்மமும் பெற்ற உறுதியான இனம். இனி எம்மண்ணில் எதிரி நிலைத்து நிற்க நாமெங்கு இருந்தாலும் இடமளியோம். எங்கள் உழைப்பு, எங்கள் ஆற்றல் அனைத்தும் களத்துக்கு நிதியாகவும் மதியாகவும் வலிமை சேர்க்கும். நம் தலைவன் பிரபாகரன் தலைமையில் நாம் நம் தேசத்தின் விடுதலையைக்காணும் நாள் வெகுதுாரத்தில் இல்லை. இதானல்தான் முகாம்கள் சரிந்ததும் தமிழ் மக்கள் முகங்கள் மலர்ந்தது. எம் தொல்லைகள் தீரும் நாள் வெகுதுாரத்தில் இல்லை என, தங்கள் தலைவன் பெருமைகளும், அந்தத் தலைவன் சொல்லேற்று களமாடும் தளபதிகள், போராளிகள், மக்களின் அருமைகளும் சொல்லி ஆனந்தநடனமிடுகின்றனர். உலகத் தமிழர்களும் தமிழீழ மக்களின் வெற்றியில் இறும்பூதெய்தி நிற்கின்றனர். அதேவேளை புலம்பெயர் தமிழர்களாகிய நாம், எமக்காக எம் தேசத்திற்காக ஆனையிறவு மீட்பில் தம் இன்னுயிர் தந்த மாவீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்தி அவர் இலட்சியம் நிறைவுபெற உழைக்க உறுதிபூண்டு நிற்கின்றோம்.

-பற்றிமாகரன்-



## மக்கள் களம்

ஆனையிறவுப் பெருவெற்றியால் உள்ளம் பூரித்துப் போயுள்ள எம் மக்களே உங்களுக்கான களமிது. உங்களது உள்ளத்து எழுச்சிகளை, மகிழ்ச்சிகளை கவிதைகளாகவோ பாடல்களாவோ, சிறு எழுத்துருக்களாகவோ எழுதி அனுப்புங்கள். பிரசுரிக்க காத்திருக்கிறோம்.

KALATHIL
TCC
341,Rue De Pyrenees
75020 Paris
France

# ஆனையிறவுக்குப்பின்: தொடரும் ஓயாத அலைகளிற்கான பலம்!

ஆனையிறவுப் பெரும் படைத்தள தகர்ப்பு தமிழீழ - சிறீலங்கா போர்ச் சமநிலையில் பெரும் புலப்படும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. சிங்களப் பெரும் படைக்குவிப்பை நவீன மரபுவழி படைநகர்த்தல் மூலம் தமிழீழத் தேசியத் தலைவர் எதிர்கொண்டு போராடி முறியடித்துவரும் சரித்திர நிகழ்வின் ஒரு சிறப்பு மிக்க அம்சமாக ஆனையிறவுப் படைத்தள தகர்ப்பு திகழ்கின்றது.

கொழும்பு இனவாத செய்தி ஏடுகள் தமக்கு ஏற்பட்டது பேரழிவு எனக் கூறுகின்றன. ஆனையிறவுப் படைத்தளத்தை இழப்பது சிறீலங்காவுக்கு அரசியல், இராணுவ இழப்புக்களை ஏற்படுத்தும் என அவை கூக்குரல் இடுகின்றன. தோல்விக்குப் பல காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. திறமையற்ற அரசியல் தலைமை தான் காரணம் என முன்பு சொல்லி வந்த சிங்கள இனவாத சக்திகள் இப்போது நேரடியாக தமது நாயகர்களான இராணுவத்தை விமர்சிக்க ஆரம்பித்துவிட்டன. இனியாவது இராணுவத் தளபதி பொய்சொல்வதை நிறுத்த வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாகக் கூறுகின்றார். இத்தனைகாலமும் தமது வீரம்மிக்க இராணுவத்தை நம்பியிருந்த சிங்கள இனவாத இயந்திரம் இப்போது சர்வதேச இராணுவ உதவிகள் பெறப்பட வேண்டும் என்கின்றது.

## பலாலி நோக்கிய பயணம்

இத்தகைய சாதகமான உறவு மாற்றங்கள் மத்தியில் ஓயாத அலைகள் 3 நடவடிக்கை தொடர்ந்தும் யாழ். குடாநாட்டின் பிற பகுதிகளை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. தென்மராட்சி - வடமராட்சிப் பகுதிகளில் உறுதியுடன் கால்களை ஊன்றியுள்ள புலிகள், பலாலியில் அமைந்துள்ள சிங்களத்தின் பெரும் படைத்தளத்தையும், வலிகாமம் பகுதியில் பரவிக் காணப்படும் படைநிலைகளையும் நோக்கி நகர்ந்து வருகின்றனர் என்ற தமது அச்சத்தை சிங்களம் பகிரங்கமாக ஒப்புக் கொண்டுவிட்டது.

சந்திரிகா அரசின் திட்டமிடப்பட்ட அரசியல், இராணுவ, இராஜதந்திர காய்நகர்த்தல்களால் சிங்கள - தமிழ்த் தேசியங்களுக்கு இடையேயான போரின் மையமாக உலக நாடுகளுக்கு சுட்டிக் காட்டப்பட்ட பிரதேசம் யாழ்.குடாவாகும். அப் பிரதேசத்தை புலிகள் மீட்டிடப் போகின்றார்கள் என்ற யதார்த்தம் இன்று அனைவராலும் உணரப்பட்டு வருகின்றது. அம் மீட்பானது சிங்களத்தின் ஆளுமைக்கு சாவுமணி அடித்துவிடும் என்பதையும் அனைவரும் உணர்கின்றனர்.

## இறுதி முயற்சிகள்

யாழ் குடாநாட்டில் சிங்கள அரசு நிர்க்கதியான நிலையில் தன் பாதுகாப்பு அரண்களை அமைத்து வருவதாக லண்டன் ரெலிகிராப் செய்திஏடு நிலைமையை விபரிக்கின்றது. புலிகளிடமிருந்து பலாலி படைத்தளத்தைப் பாதுகாக்க சிங்களப் படைகள் முயல்கின்றது என அவ் ஏடு விபரிக்கின்றது. சிங்கள எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒருபடி மேலே சென்று யாழ்ப்பாணத்தை இழப்பதும், பலாலியை இழப்பதும் இடம் பெறக் கூடியது என்கின்றார்.

சிங்கள அரசியல் - இராணுவத் தலைமைகள் இத் தோல்விகளை தவிர்ப்பதற்கான இறுதி முயற்சிக்கு தம்மை தயார்ப்படுத்தி வருகின்றன. மூர்க்கமாகப் போரை நடத்தக்கூடிய தளபதிகள் என



சிங்களத்து நாயகன் ஜானக பெரேரா

தாம் நம்பும் தளபதிகளை யாழ் குடா ஆக்கிரமிப்பை தலைமை தாங்க நியமிக்கும் முயற்சி ஆனையிறவு சுற்றிவளைப்பு இறுகத் தொடங்கிய பின்னர் துரிதமாக இடம்பெறத்தொடங்கின. தமிழீழப் பிரதேசங்களில் பெரும் இன அழிப்பை புரிந்த மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா மீள யாழ். போர்முனைக்கு அனுப்பப்பட்டமை இக் கொடுர நோக்குடனேயேயாகும். மக்கள் செறிந்து வாழும் இடங்களில் போரை நடத்தும் சிக்கலான புறநிலையில் ஜானக பெரேரா போன்றவர்கள் மக்கள் மீது பெரும் வன்முறைகளை புரியும் வக்கிரம் கொண்டவர்கள் என்பதை சில சிங்கள ஆய்வாளர்களே ஒப்புக் கொள்கின்றனர். பளைப் பகுதியில் மக்களை கேடயங்களாக வைத்து போரிட முயன்ற சிங்களப் படைகள் தமது ஆக்கிரமிப்பை நிலைப்படுத்த யாழ்.குடாவில் பெரும் அழிவில் ஈடுபடுட முயலும் சாத்தியங்கள் நிலவுகின்றது.

இதேவேளை தமது படைகளிற்கு சர்வதேச நாசகார இராணுவ சக்திகளின் வல்லுனர்களை அழைத்து ஆலோசகர்களாக நியமிக்கக் கோரும் குரல்களை சிங்களம் எழுப்பிவருகின்றது. தமது படைகள் களைப்படைந்து, மனோவியல் சிக்கலில் தள்ளாடுவதாகக் கூறும் சிங்களத் தரப்பினர் தமது இனவாத ஆக்கிரமிப்பு தொடரவேண்டும் என்ற பேரினவாத நிலையில் மாற்றத்தை வெளிக்காட்டவில்லை. எப்பாடுபட்டாவது தமிழர்களை வெல்ல வேண்டும் என்ற இனக்குரோதம் சிங்களத்திடம் தலைவிரித்தாடுகின்றது. சிங்களப்படைகள் யுத்த விமானங்களையும், உலங்கு வானூர்திகளையும் உடனடியாக கொள்வனவு செய்யவேண்டும் எனவும், ஒவ்வொரு படைப்பிரிவிலும் வெளிநாட்டு ஆலோசகர்களை நியமிக்க வேண்டும் எனவும் ஒரு சிங்கள புத்திஜீவி டில்லியிலிருந்து வெளிவரும் தி ஹிண்டுஸ்தான் டைம்ஸ் ஏட்டிற்கு கருத்துக் கூறியுள்ளார்.

தமக்கு ஏற்பட்டது பேரழிவு என்பதை உணரும் சிங்களம் தமிழர் பகுதிகளில் இருந்து வெளியேற மறுப்பதாலும் கோரமாகப் போரைத் தொடர முயல்வதாலும் தமிழர்களின் ஓயாத அலைகள் 3 நடவடிக்கையின் எதிர்காலம் முக்கியத்துவம் பெறத்தொடங்கியுள்ளது. தோற்றோடும் மனோநிலையில் உள்ள சிங்களப் படைகள் மோசமான தளபதிகளின் வழிநடத்தலில் மக்களை வதைக்க முற்பட்டால் ஏற்படும் அச்ச நிலைமைகள் ஒருபுறமும் புதியரக ஆயுத தளபாடங்கள், நாசகார ஆலோசகர்கள் என பலப்பட முயலும் நடவடிக்கைகள் மறுபுறமும் ஓயாத அலைகளின் நடவடிக்கையை நுட்பமானதாக்கியுள்ளது.

## தேசியத் தலைவரிற்கான ஆதரவு

வெற்றிக்கான போராக ஓயாத அலைகள் நடவடிக்கையை வடிவமைத்த தேசியத் தலைவர், யாழ்க்குடாவில் மண்மீட்புப் பணியை தொடர்ந்து மேற்கொள்ளும் வரலாற்றுக் கடமையை மேற்கொள்கின்றார். தீர்க்கமான போர் உத்திகள், வியூகங்கள் என்பனவற்றுடன் பெரும் மக்கள் பங்களிப்பை துணைப்படைகள் மூலம் பெற்று சிங்களப் படைக் கட்டுமானத்தை தகர்த்துவரும் புலிகள், மண்மீட்புப் பணியில் உலகளாவிய தமிழ் மக்களின் ஆதரவை என்றுமில்லாதளவு பெற்று வருகின்றனர்.

ஆனையிறவுப் படைத்தள தகர்ப்பு புகலிடத் தமிழர்களிடம் ஏற்படுத்திய உளப்பூர்வமான உவகை பல்வேறு மட்டங்களில் வெளிப்பட்டது. சிங்கள இராணுவபலத்தை உடைத்தெறியும் இராணுவ வளர்ச்சியை நாம் எட்டியுள்ளோம் என்ற நிரூபணம் புகலிடத் தமிழர்களிடம் எழுச்சியை ஏற்படுத்தியது. இவ்வெழுச்சியானது ஓயாத அலைகளின் தொடர்ச்சியான போக்கினூடு செழுமைப் படுத்தப்பட வேண்டியதாகும். தொடர்ச்சியான பங்களிப்புகள் ஊடாக தமது இராணுவ - அரசியல் பலத்தை பாதுகாக்கும் தேவையை புகலிடத் தமிழர்கள் கொண்டுள்ளனர். இரத்தம்சிந்தி புலிகளும் மக்களும் பெற்று வரும் பெருவெற்றியை பாதுகாக்கும் பணியை ஆழமாக புரிந்துணர்ந்து வெற்றிவரை பங்களிப்புக்களை வீச்சாக்குவதே, ஓயாத அலைகளின் இலக்குகள் அடையப்பட உலகதமிழர் புரிய வேண்டிய பங்காகும். ●

நாதன்




## உங்கள் கவனத்திற்கு




அடக்குமுறை இராணுவங்களின் பிடியில் சிக்கி, எமது மக்கள் பட்ட கொடுமைகள், துன்பங்கள் எண்ணிலடங்காதவை. தசாப்தங்களாக எம் மக்கள் எத்தனை துன்பங்களை துயரங்களைச் சந்தித்துவிட்டனர். மனதுக்குள் புளுங்கிக் கொண்டிருக்கும் அந்தக் கொடிய அனுபவங்களை, நினைவுகளை கொட்டித்தீர்க்க இங்கே களமமைத்திருக்கின்றோம். இந்தப் பகுதியில், எமது மக்கள் தாம் பட்ட துயரங்களை துன்பங்களை கொட்டித் தீர்க்கலாம். இது கற்பனை கலந்த கதைக்களமாக நிட்சயமாக இருக்காது. உண்மையின் களம் இது. தமது அனுபவங்களை, அல்லது, தமக்கு முன்னால் நிகழ்ந்த தாம் அறிந்த கொடுமைகளை யாரும் எழுதியனுப்பலாம். யாவும் உண்மையாக இருத்தல் வேண்டும் என்பது எமது தாழ்மையான வேண்டுகோள். உங்கள் நாடுகளில், எமது கிளைகளுக்கூடாகவோ பிரதிநிதிகளுக்கூடாகவோ இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்களை அனுப்பி வையுங்கள். உங்களுடன் தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி இலக்கம் மற்றும் முகவரியை முக்கியமாக குறிப்பிடவும். வெளியிடப்படும் வாக்குமூலம் பகுதியில் உண்மையான பெயர் விபரங்களை வெளியிடுவதை தவிர்ப்பதும் தவிர்க்காமல் விடுவதும் உங்களைப் பொறுத்தது.

நேரடியாக எமக்கு எழுதி அனுப்பவிரும்புவோர். KALATHIL C.C.T France. 341 rue des Pyrénées, 75020 Paris. FRANCE. என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

# பிரச்சினையைப் பேசித் தீர்க்க அரசிற்கு உண்மையான அக்கறையில்லை

மார்ச் மாதம் 25ஆம் திகதி, இலண்டனில் இருந்து வெளிவரும் தமிழ்கார்டியன் பத்திரிகைக்கு, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் செவ்வி வழங்கியிருந்தார். பேச்சுவார்த்தை ஒன்றின் ஆரம்பத்திற்கு தோற்றுவிக்கப்படவேண்டிய சமாதானச் சூழ்நிலைகள் குறித்தும், சமாதானப் பேச்சுவார்த்தை மற்றும் தீர்வு முயற்சிகள் தொடர்பாக விடுதலைப் புலிகள் கொண்டுள்ள நிலைப்பாடுகள் குறித்தும் தெளிவாக விளக்கமளித்திருந்தார்.

அவரது செவ்வி, உலகச் செய்தி ஊடகங்களால் வெளியிடப்பட்டன. இலங்கை விவகாரத்தை கூர்ந்துநோக்கும் இராஜதந்திரிகள் மட்டத்தில் அவரது செவ்வி கூடுதல் கவனத்தைப் பெற்றதுடன், இதுவிடயத்தை நேர்மையாக நோக்கும் நாடுகளின் ஆதரவையும் பெற்றது.

சிறீலங்கா அரசிற்கு ஒரு நெருக்கடியை இந்தச் செவ்வி வழங்கியது. அதன் சமாதானம் பற்றிய தோற்றம் திரு. பாலசிங்கத்தின் செவ்வியால் அம்பலப்பட்டிருந்த நிலையில், சிறீலங்கா வெளிவிவகார அமைச்சகம், இதற்குப் பதிலளிக்கும் விதமாய் ஏப்பிரல் பதினைந்தாம் திகதி, நீண்ட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

சிறீலங்கா வெளிவிவகார அமைச்சகத்தால், அதன் மனக்கொதிப்பை ஆற்ற உண்மைக்குப்புறம்பாக வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கைக்கு, திரு. பாலசிங்கம் அவர்கள் விளக்கமளிக்கும் வகையில், மீண்டும் ஒரு செவ்வியை வழங்கியிருக்கின்றார். மீண்டும் தமிழ்கார்டியன் பத்திரிகைக்கு அவர் வழங்கிய செவ்வியை களத்தில் வாசகர்களுக்காக இங்கு தருகின்றோம்.

சிறீலங்கா வெளிவிவகார அமைச்சகத்தின் கருத்துக்களுக்கு பதில் சொல்லும் வகையில் அவரது செவ்வி அமைந்திருக்கின்றது. சிறீலங்கா வெளிவிவகார அமைச்சகத்தின் அறிக்கையை கேள்விகளாக்கி, அதற்கான திரு. பாலசிங்கம் அவர்களின் பதில்களை இங்கு தொகுத்திருக்கின்றோம்.



**தமிழ்மக்களின் நலன்கருதியே சில பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றை ஒடுக்குமுறை வடிவங்களாக சித்தரிப்பது தவறு. திரு. பாலசிங்கத்தின் அறிக்கையானது மிகைப்படுத்தப்பட்ட மிரட்டல்.**

'எனது அறிக்கையை மிகைப்படுத்தப்பட்ட மிரட்டல் பேச்சு என அரசாங்கம் வர்ணித்திருப்பது மிகவும் தவறானது, நான் தெளிவான மொழியில், தர்க்கீகமாக தமிழர் தாயகத்தில் நிலவும் யதார்த்த நிலைமைகளை விளக்கியிருந்தேன். சிங்கள அரசு எமது மக்கள் மீது திணித்திருக்கும் ஒடுக்குமுறை வடிவங்களின் தன்மையை அம்பலப்படுத்தியிருந்தேன். நான் 'போர்க்குணம் கொண்டு மிரட்டல் பேச்சு பேசவில்லை சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னதாக, போர் நெருக்கடியைத் தணித்து, போர் நிறுத்தம் செய்து, இயல்பு நிலையையும் நல்லெண்ண சூழ்நிலையையும் ஏற்படுத்த வேண்டும் என்றே நான் வலியுறுத்தினேன். எனது அறிக்கையில் கூறப்பட்ட யோசனைகளுக்கு சர்வதேச ராஜதந்திர வட்டாரங்களில் வரவேற்பு இருந்தது. இதனால் தான் என்னைக் கண்டித்து ஒரு அறிக்கையை வெளியிட்டு, தமிழர் மீது திணிக்கப்பட்ட ஒடுக்குமுறைகளை நியாயப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் சிறீலங்கா அரசிற்கு ஏற்பட்டது.'

**தமிழர்கள்மீது நாம் தடைகளையும் ஒடுக்குமுறைகளையும் திணிக்கவில்லை, புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவே பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கின்றோம்.**

'தமிழர் மீது திணிக்கப்பட்ட ஒடுக்குமுறை வடிவங்களை பாதுகாப்பு நடவடிக்கைகளென அரசாங்கம் திரிக்க முனைகிறது. இதனால் எமது மக்கள் எதிர்கொள்ளும் பாரிய துன்பங்களையும் இடர்பாடுகளையும் அரசாங்கம் மூடிமறைக்கப் பார்க்கிறது. இந்த ஒடுக்குமுறையான தடைகள் எமது மக்களின் சமூகப்பொருளாதார வாழ்நிலையை ஆழமாகப் பாதித்திருக்கிறது. மீன்பிடித்துறை ஒரு காலம் எமது மக்களுக்கு வளம் சேர்க்கும் தொழிலாக அமைந்தது. ஆனால் இன்று மீன்பிடித்தொழில் மீது இடப்பட்ட தடைகளால் மீன்பிடித்துறை முற்றாகச் செயலிழந்துகிடக்கிறது. இதனால் பல்லாயிரக்கணக்கான மீனவக்குடும்பங்கள் வாழவழியின்றி வறுமையின் பிடிக்குள்சிக்குண்டு அவலப்படுகிறார்கள். உரவகைகள் மீது போடப்பட்ட தடைகளால் தமிழ் விவசாய சமூகம் பெரிய பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து நிற்கிறது. எமது மக்களின் சுதந்திரமான நடமாட்டங்களுக்கு எதிராகவும், பயணங்களைக் கட்டுப்படுத்தியும், விதிக்கப்பட்ட தடைகள், பாஸ் முறைகள் தென்னாபிரிக்காவில் நிலவிய இனக்குரோதத்தைவிடக் கொடுமையானது. அத்தோடு காவற்சாவடிகளில் மறித்து சோதனையிடுவது, கைதுசெய்வது, தடுத்துவைப்பது, கொடுமைப்படுத்துவது போன்ற பல்வேறு ரகமான ஒடுக்குமுறைகள் எமது மக்கள் மீது பெரும் துன்பத்தை ஏற்படுத்திவருகிறது. இந்த ஒடுக்குமுறை வடிவங்களின் கொடுமையான தன்மையை எமது மக்கள்தான் நன்கறிவார்கள். ஏனென்றால் அவர்கள்தான் தமது சொந்த கௌரவத்தையும் சுதந்திரத்தையும் இழந்து இத்தகைய அவலங்களை அனுபவித்து வருகிறார்கள். பாதுகாப்பு நடவடிக்கைகளால் தமிழர்கள் மட்டுமன்றி எல்லா இனமக்களுமே சிறிய 'இடையூறுகளுக்கு' ஆளாகிவருகிறார்கள் என அரசாங்கம் கூறுகிறது. இது முற்றிலும் தவறானது. இது எமதுமக்களின் பெருந்துயரை சிறுமைப்படுத்தும் ஒரு கேலிக்கூத்தான முயற்சி. இந்த ஒடுக்கு முறைகளால் வேறு இனத்தவர்கள் பாதிக்கப்படவில்லை. தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக எமது மக்கள் மீது வழங்கப்பட்ட கூட்டுத்தண்டனை இது. இதில் இனக்குரோதம் ஒளிந்து கிடக்கிறது'

'பாதுகாப்புப் படைகளை தமிழ்மக்களின் காவற்தெய்வங்களாக அரசாங்கம் சித்தரிக்கமுயல்கிறது. யாழ்ப்பாணம் போன்ற தமிழ்மக்கள் வாழும் பகுதிகளில் கடமையாற்றும் பாதுகாப்புப் படையினர் தமிழ்மக்களை பாதுகாக்கும் தமது கடமைகளில் சிறந்த பொறுப்பாற்றல் மிக்கவர்களாக நடந்து கொள்கிறார்கள் என்றும் அரசாங்கம் ஒரு விசித்திரமான கருத்தையும் முன்வைக்கிறது. தமிழ்ப் பகுதிகளில் பாதுகாப்புப்படையினர் இழைத்த கொடுமைகளை எடுத்துக்காட்ட ஒரு நீண்ட பட்டியலே இருக்கிறது. அதாவது சட்டத்திற்குப் புறம்பான கொலைகள், பாலியல் வன்முறைகள், உடல்வதைகள் மற்றும் பலகொடூரச் செயல்களில் பாதுகாப்புப் படையினர் எத்தகைய பொறுப்பாற்றல் மிக்கவர்கள் என்பதை எடுத்துக் காட்டுவதற்கு எமக்கு நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன. இடம்பெயர்ந்த யாழ்ப்பாண மக்கள் பாதுகாப்புப் படையினரை நம்பி மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பியபோது அவர்கள் மீது எத்தகைய கொடுஞ்செயல் இழைக்கப்பட்டது என்பதை நிரூபிப்பதற்கு இன்னும் தோண்டப்படாத புதைகுழிகள் செம்மணியில் இருக்கின்றன. அங்கு காணாமற்போன ஆயிரம் அப்பாவிகளின் சோகவரலாறு புதையுண்டு கிடக்கிறது.'

**விடுதலைப் புலிகள் இயக்கம் தனது வன்முறைப் பாதையையும், பயங்கரவாதச் செயல்பாடுகளையும் கைவிடும்வரை, தடைகள் நீக்கப்படமாட்டாது.**

'எமது ஆயுதம்தரித்த விடுதலைப் போராட்டத்தையே வன்முறைப் பாதையென்றும் பயங்கரவாதம் என்றும் சிங்கள அரசு வர்ணித்து வருகிறது. பழைய பாராளுமன்றத் தலைமையின்கீழ் முன்னெடுக்கப்பட்ட அகிம்சைப் போராட்டங்கள் தோல்வியுற்றதைத் தொடர்ந்து ஆயுதம்தரித்த விடுதலைப் போராட்டமானது தமிழீழ மக்களின் அரசியற் போராட்டமாக வடிவம் பெற்றது. கடந்த 25 வருடங்களுக்கு மேலாகத் தொடரும் விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் ஒரு நீண்ட வரலாற்றுப் போக்கையும் வளர்ச்சியையும் கொண்டது. இன்றைய வரலாற்றுக் கட்டத்தில் புலிகளின் ஆயுதப் போராட்டமானது சிங்கள அரசுக்கு எதிரான முழு அளவிலான போராகப் பரிமாணம் பெற்றிருக்கிறது. இந்தப் போரில் இரு தரப்பினருமே பெரும் படைகளுடன் மரபுவழிப்போரை நடத்திவருகின்றன. சிங்கள ஆயுதப் படைகளினது ஆக்கிரமிப்பிலிருந்தும் அடக்குமுறையிலிருந்தும் எமது மக்களையும் எமது மண்ணையும் மீட்டெடுப்பதே எமது ஆயுதப் போராட்டத்தின் குறிக்கோளும் இலட்சியமும் ஆகும். இன்று வடகிழக்குப் பிரதேசமான எமது தாயகத்தின் 70 விகிதமான பெருநிலப்பரப்பு எமது விடுதலை வீரர்களின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. தமிழர்கள் செறிந்து வாழும் பல பட்டினங்கள் இன்னும் சிங்கள ஆயுதப்படைகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. இப்பொழுது சிங்கள இராணுவம் ஆக்கிரமிப்புப் படையெடுப்புக்களை கைவிட்டு தன்னையும் தான் காலூன்றி நிற்கும் நிலைகளையும் பாதுகாக்கவே போர் புரிந்து வருகிறது. தமிழரின் பாரம்பரிய பட்டினங்கள் ஒவ்வொன்றிலுமிருந்து சிங்கள இராணுவம் பின்வாங்கி ஓடவேண்டிய காலம் கனிந்துவருகிறது. இக் காலத்தில் எமது தாயகமண் அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து முற்றாக விடுதலைபெறும்.

'சிறீலங்கா அரசின் சர்வதேசப் பிரச்சார அலகான வெளிவிவகார அமைச்சு விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றி உலகடங்கலும் விசமத்தனமான பொய்களை கூறிவருகிறது. புலிகள் இயக்கமானது குழந்தை இராணுவத்தைக் கொண்ட ஒரு சிறிய ஆயுதக்குழுவென்றும், குறிக்கோளற்ற பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவதே எமது நோக்கமென்றும் புரட்டுக்களை கட்டவிழ்த்து விடுகிறது. வெளிவிவகார அமைச்சு இந்தப்பொய்களை ஒரு சில உலக நாடுகளுக்கு சந்தைப்படுத்தியும் இருக்கிறது. ஆனால் இன்றைய சர்வதேச சமூகம் இலங்கையில் நிகழ்ந்துவரும் ஆயுதப்போராட்டத்தின் தன்மை பற்றியும், உண்மைநிலை பற்றியும் அறிந்து வருகிறது. சிறீலங்கா அரசு உருவகித்துக் காட்டுவது போல தமிழரின் சுதந்திரப் போராட்டத்தை பயங்கரவாதமாகச் சித்தரிக்க முடியாது என்பதையும், இப் போராட்டம் வெகுசன இயக்கமான பரிமாணத்தைக் கொண்டது என்பதையும் உணர்ந்து வருகின்றன. ஆனால் சிறீலங்கா அரசு தொடர்ந்தும் 'பயங்கரவாதம் ' என்ற பதத்தையே பாவித்து வருகிறது. இந்தச் சொல்லுக்கும் புலிகள் இயக்கம் முன்னெடுத்துவரும் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்திற்கும் எதுவித தொடர்புமில்லை. விடுதலைப்போரின் புறநிலை யதார்த்தத்தை இந்தச் சொல் எந்தவகையிலும் பிரதிபலித்துக் காட்டவில்லை'.

**அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் குறித்து கொழும்பில் நடக்கும் பேச்சுக்களை, திரு. பாலசிங்கம் குறைகூறியிருக்கின்றார், கேலிபேசியிருக்கின்றார். சமாதான முயற்சிகளில் புலிகளுக்கு நம்பிக்கை இல்லை என்பதையே திரு. பாலசிங்கத்தின் கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன.**

'அரசமைப்பை உருவாக்குவது சம்பந்தமாக தென்னிலங்கையில் கருத்தொற்றுமை காண நிகழும் பேச்சுக்களை நான் கிண்டல் செய்யவில்லை. பேச்சுக்களை நடத்தும் இரு பெரும் சிங்களக் கட்சிகளும் பேரினவாதக் கட்சிகள் என்பதாலும் இரண்டுமே இரத்தம் தோய்ந்த வரலாற்றைக் கொண்டிருப்பதாலும் இவர்கள் மத்தியில் ஏற்படும் கருத்தொற்றுமை தமிழரின் தேசிய அபிலாசைகளை பூர்த்திசெய்யக்கூடிய ஒரு தீர்வுத்திட்டத்தை உருவாக்குமா என்றே சந்தேகப்பட்டேன். அத்தோடு தமிழ் மக்கள் இன்று பாரிய வாழ்க்கைப் பிரச்சினைகளை எதிர்கொண்டு திணறுகிறார்கள். அரசமைப்பு மாற்றம் பற்றி இழுபட்டுக்கொண்டிருக்கும் விவாதங்களுக்கும் எமது மக்களின் அன்றாட அவலங்களுக்கும் எவ்வித

சம்பந்தமும் இல்லை என்பதையே சுட்டிக்காட்டினேன். புதிய அரசமைப்பை உருவாக்கும் அரசாங்கத்தின் முயற்சி கடந்த 5 ஆண்டுகளாக இழுபட்டு வருகின்றது. ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு வடிவத்தில் திட்டவரைபுகள் வெளியாகி வருகின்றன. இறுதியாக வெளிவந்த வரைவில் கூட தமிழரின் அடிப்படைக் கோரிக்கைகள் ஆராயப் படவில்லை. சமீபத்தில் அரசாங்கமும் யு.என்.பி யும் ஆறு தடவைகள் கூடிக் கதைத்துள்ளன. இந்த நீண்ட கலந்துரையாடல்களில் தமிழரின் தேசியப் பிரச்சினை சம்பந்தமாக எதுவுமே விவாதிக்கப்படவில்லை. தனிப்பட்ட விவகாரங்களும் கட்சிப் பிரச்சினைகள் பற்றியுமே நீண்டநேரம் பேசப்பட்டிருக்கின்றது. இது ஒருபுறமிருக்க, பௌத்தமகா சங்கத்தினர் அண்மையில் பொரளையில் ஒரு மாநாடு கூட்டி 'ஏழு கோட்பாடுகளை' அல்லது 'ஏழு கட்டளைகளை' பிரகடனப் படுத்தியுள்ளனர். புதிய அரசமைப்பில் இணக்கம் காணமுடியாத நிபந்தனைகளாக இவை பிரகடனமாகியுள்ளன. இந்தப் பொரளைக் கோட்பாடுகள் தமிழரின் திம்புக் கோட்பாடுகளுக்கு முற்றிலும் முரண்பட்டவையாக அமைந்திருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் தென் இலங்கையில் ஏற்பட்டு வருவதாகக் கூறப்படும் கருத்தொற்றுமை எந்த அளவிற்கு தமிழரின் இனப்பிரச்சினைக்கு ஒரு நீதியான தீர்வை வழங்கும் என்பதில் புலிகள் இயக்கத்திற்கும் தமிழ் மக்களிற்கும் பெரும் சந்தேகம் எழுந்திருக்கின்றது'.

> வன்னிக்கு உணவுப் பொருட்களுக்கும் மருந்துப் பொருட்களுக்கும் அரசாங்கம் தடை விதித்திருப்பதாக புலிகள் கூறுவதில் உண்மையில்லை. போருக்குப் பயன்படுத்தக்கூடிய பொருட்கள் தவிர உணவு, மருந்துவகைகள் போன்ற அத்தியாவசியப் பொருட்களை புலிகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் வன்னிக்கு அரசாங்கம் அனுப்பிக்கொண்டே இருக்கின்றது.

'உணவுவகைகளையோ, மருந்துவகைகளையோ மற்றும் வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையோ அரசாங்கம் ஒழுங்கான முறையில் தேவையான அளவிற்கு அனுப்புவதில்லை. யானைப் பசிக்கு சோளப்பொரி போட்டது போல எப்பொழுதாவது இடைக்கிடையே பற்றாக்குறையாகவே பொருட்கள் அனுப்பப்படுவது வழக்கம். சில காலங்களில் ஒன்றுமே வருவதில்லை. சில சமயங்களில் எல்லையில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் உணவு, மருந்துப் பொருட்களை உள்ளே அனுமதியாது தடுத்துவிடுகிறார்கள். இதனால் பல சந்தர்ப்பங்களில் வன்னியில் வாழும் மக்கள் பட்டினிக்கும் சாவின் விளிம்பிற்கும் தள்ளப்படுவதுண்டு. உணவையும், மருந்தையும் போராட்டமாக பாவிக்கும் இந்தக் கொடுஞ் செயலைக் கண்டித்து வன்னிமக்கள் எத்தனையோ தடவைகள் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்பாக ஆர்ப்பாட்டங்களை, உண்ணாவிரதங்களை நடத்தியிருக்கிறார்கள். கடந்த பல மாதங்களாக வன்னிக்கு மருந்துப் பொருட்களை செல்லவிடாது இராணுவம் தடுத்து வருகிறது. இதனால் வன்னிப் பெருநிலத்தில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டு மக்கள் ஆபத்தான நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கிறார்கள். மருத்துவ மனைகளே மூடப்பட்டுவரும் மோசமான நிலை அங்கு தோன்றியிருக்கிறது. சிங்கள இராணுவத்தினரின் இந்த மனிதாபிமானமற்ற செயலை வன்மையாகக் கண்டித்து அண்மையில் எம். எஸ். எப் என்ற பிரெஞ்சு வைத்திய நிறுவனம் ஓர் பகிரங்கமான அறிக்கையை வெளியிட்டு இருக்கிறது. எமது மக்கள் எதிர்கொள்ளும் இந்த துன்பமான அவலநிலமை பற்றி சர்வதேச சமூகம் அறியும். ஆனாலும் சர்வதேச நாடுகள் சிறீலங்கா அரசாங்கத்தைக் கண்டிக்காமல் மௌனம் சாதித்து வருகின்றன. இந்த மௌனமானது சிறீலங்கா அரசாங்கத்தின் இனக்கொலைத் திட்டத்திற்கு ஊக்கமளிப்பதாக அமைகிறது.'

> வடக்கிலும் தென்னிலங்கையிலும் வாழும் தமிழர்களில் பெரும்பாலானோர் சிறீலங்காப் பாதுகாப்புப்படையினரின் பாதுகாப்பிலும் நிர்வாகத்தின்கீழும் வாழ்ந்துவருகின்றனர். ஏராளமானோர் சிங்களமக்கள் வாழும் பகுதிகளில் சிங்கள மக்களுடன் இரண்டறக் கலந்து வாழ்கின்றனர். இப்படியான சூழ்நிலையில், தமிழர்களின் ஏகபிரதிநிதிகள் தாமே என, விடுதலைப் புலிகள் உரிமைகோர முடியாது.

'தமிழ்க் குடிசனச் செறிவுள்ள பகுதிகளை சிங்கள ஆயுதப்யுபடைகள் ஆக்கிரமித்து நிற்பதால் அந்த அடக்குமுறை ஆட்சியை தமிழ் மக்கள் ஆதரிக்கிறார்கள் என அரசாங்கம் கூறுவது மிகவும் அபத்தமானது. சமீபத்தில் நிகழ்ந்த ஜனாதிபதித் தேர்தலின்போது வடக்கிலும் தெற்கிலும் வசிக்கும் தமிழ் மக்கள் சந்திரிகாவுக்கு எதிராக வாக்களிக்கவில்லையா?

விடுதலைப் புலிகள் இயக்கம்தான் தமிழீழ மக்களின் உண்மையான ஏகபோக பிரதிநிதிகள் என நாம் உரிமை கொண்டாடுவதற்கு பல மதிப்பீடுகள், அடிப்படைகள் உள்ளன.

**முதலாவதாக,** எமது விடுதலை இயக்கம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காக கடந்த 25ஆண்டுகளாக திடமான, உறுதியான போராட்டத்தை நடத்திவருகிறது. பரந்துபட்ட தமிழ் மக்களின் பேராதரவு எமக்கு இருப்பதால்தான் நாம் சிங்கள அரசிற்கு எதிராகவும் மற்றும் பலம்வாய்ந்த சக்திகளுக்கு எதிராகவும் எத்தனையோ இன்னல்கள் மத்தியிலும் ஒரு நீண்ட வரலாற்றைக்கொண்ட ஆயுதப் போராட்டத்தை நடத்த முடிகிறது. வெகுசனத்தின் நல்லாதரவின்றி எந்தவொரு ஆயுதம்தரித்த விடுதலைப்போராட்டமும் நிலைத்து நிற்க முடியாது என்பது வரலாறு பகரும் உண்மை.

**இரண்டாவதாக,** தமிழ்மக்களின் உண்மையான அரசியல் அபிலாசைகளை பிரதிபலிக்கும் கொள்கைகளை இலட்சியமாகவரித்தே நாம் போராடி வருகிறோம். கடந்த கால்நூற்றாண்டு காலத்துக்கு மேலாக எத்தனையோ சவால்களையும், எத்தனையோ ஆபத்துக்களையும், எத்தனையோ அழுத்தங்களையும் எதிர்கொண்டபோதும் நாம் எமது கொள்கையையும் இலட்சியத்தையும் உறுதிதளராது கடைப்பிடித்து வருகிறோம்.

**மூன்றாவதாக,** எமது போராளிகள் மகத்தான தியாகங்கள்புரிந்து, மாபெரும் அர்ப்பணிப்புக்களைச் செய்து தமிழீழ விடுதலைப்போராட்டத்தை முன்னெடுத்து வருகிறார்கள். இதனால் விடுதலைப் புலிகள் இயக்கமானது தமிழ் மக்களின் நன்மதிப்பையும் பாராட்டுதலையும் பெற்ற விடுதலை அமைப்பாகத் திகழ்கிறது.

**நான்காவதாக,** எமது ஆயுதப்போராட்டமே தமிழ் மக்களின் தேசியப்பிரச்சினைக்கு சர்வதேச முக்கியத்துவத்தைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றது. எமது போராட்டமே தமிழரின் சுதந்திரப் போரை சமகால உலகவரலாற்றின் பக்கங்களில் பதித்திருக்கிறது.

**ஐந்தாவதாக,** விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டுமே வடக்கிலும், தென்னிலங்கையில் வாழும் தமிழர்கள் மத்தியில் மட்டுமன்றி உலகடங்கிலும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் மத்தியிலும் நல்லாதரவைப் பெற்ற இயக்கமாகும். கிட்டத்தட்ட பத்துலட்சம் மக்களைக்கொண்ட புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகமானது தமிழ்தேசிய இனக்கட்டமைப்பின் இணைபிரியாத அங்கமாகும்.

**ஆறாவதாக,** எம்மைவிட எந்தவொரு தமிழ் அரசியல் அமைப்பும் தமிழர்களின் பிரதிநிதிகளாக உரிமை கொண்டாட அருகதையற்றவை. அரசாங்கத்துடன் ஒட்டி நிற்கும் தமிழ்க் கட்சிகளும், ஆயுதக் குழுக்களும் அரசு வழிசெய்து கொடுத்த ஏமாற்று வித்தையான தேர்தல்களைப் பயன்படுத்தியே பாராளுமன்றத்தினுள் நுழைந்திருக்கின்றன. ஜனநாயக நீரோட்டத்தில் இறங்கியிருப்பதாகக் கூறிக்கொள்ளும் தமிழ் ஆயுதக்குழுக்கள் தத்தமது குட்டி இராணுவங்களுடன் அரசாங்கத்தின் கூலிப்படைகளாகவே செயற்படுகின்றன. ஆயுதப்படைகளுக்கு தொண்டுபுரிந்து சிங்கள அரசிற்கு தமிழினத்தை அடிமைப்படுத்துவதே இவர்கள் செய்துவரும் சேவை.

நான் குறிப்பிட்ட இந்த ஆறு அடிப்படைகளையும் மதிப்பீடாகக் கொண்டு பார்த்தால் விடுதலைப் புலிகள் தான் தமிழீழமக்களின் உண்மையான ஏகபோக பிரதிநிதிகள் என்பது புலனாகும். ■




# கிடைக்கப் பெற்ற மாவீரர்களின் பெயர்கள்

திருகோணமலை மாவட்டம் அன்புவழிபுரம் பகுதியில் 10.03.2000 அன்று சிறீலங்கைப்படையுடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டவர்.

**கப்டன் அறிவு அல்லது அறிவன்**
பொன்னம்பலம் - செல்வக்குமார்
திருகோணமலை மாவட்டம்

மணலாறுப் பகுதியில் கடந்த 25.03.2000 அன்று சிறீலங்காப் படைகளுடன் ஏற்பட்ட மோதல்களில் வீரச்சாவடைந்த மாவீரர்கள்.

**வீரவேங்கை அமுதன்**
ஆறுமுகம் - ஜெயச்சந்திரன்,
மட்டக்களப்பு மாவட்டம்

**வீரவேங்கை விஜயகார்த்திக்**
பாக்கியராஜா உதயராஜ்,
மட்டக்களப்பு மாவட்டம்

**துணைப்படை வீரர் சின்னவன்**
சுப்பரமணியம் செல்வரத்தினம்,
கொக்குத்தொடுவாய் முல்லைத்தீவு மாவட்டம்

பொலநறுவை மாவட்டம் தம்பண்ணைப்பகுதியில் 07.04.2000 அன்று சிறீலங்காப் பொலீஸார்மீது மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டவர்.

**கப்டன்.தேவகாந்தன்**

ஓயாத அலைகள் 3 இன் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கிடைக்கப்பெற்ற மாவீரர்களின் பெயர் விபரம்

**25.03.00**

**வீரவேங்கை பிரியங்கா**
நடராசா -சுபாஜினி,
யாழ் மாவட்டம்

**26.03.00**

**கரும்புலி மேஜர் சலசன்**
தம்பிராசா இலங்கேஸ்வரன்
திருகோணமலை மாவட்டம்

**கரும்புலி சுதர்ஜினி**
ஜேசுகி தெய்வேந்திரம்பிள்ளை
யாழ் மாவட்டம்

**27.03.00**

**கப்டன் றொபின்சன்**
பாலசிங்கம் பிரபாகரன்
யாழ் மாவட்டம்

**வீரவேங்கை தரணி அல்லது தரணீதரன்**
இராஜேந்திரன் சோமசுந்தரம்
மன்னார் மாவட்டம்

**2ம். லெப். சசி**
யோசெப் புவனேஸ்வரி
வட்டக்கச்சி கிளிநொச்சி மாவட்டம்

**கப்டன். சுடர்விழி**
தர்மபாலா சுதர்ஜினி
யாழ் மாவட்டம்

**லெப். அன்பு வேங்கை**
கருணாகரன் அமுதா
முள்ளியவளை முல்லைத்தீவு மாவட்டம்

**கப்டன். அன்புவிழி**
பூபாலசிங்கம் லீலாவதி
யாழ் மாவட்டம்

**லெப். அன்பரசி**
கந்தையா மோகனாம்பிகை
இராமநாதபுரம் கிளிநொச்சி மாவட்டம்

**2ம். லெப். உமா**
கந்தையா பாமினி
பூநகரி கிளிநொச்சி மாவட்டம்

**மேஜர். கோகிலா**
இராசதுரை யசோதரணி
நெடுங்கேணி முல்லைத்தீவு மாவட்டம்

**வீரவேங்கை கௌசிகன்**
ஆறுமுகம் சதீஸ்குமார்
அக்கராயன் கிளிநொச்சி மாவட்டம்

**வீரவேங்கை தென்னவன்**
கந்தசாமி சந்திரமோகன்
மன்னார் மாவட்டம்

**வீரவேங்கை இனியவன் அல்லது தமிழ்ப்புலி**
பஞ்சாட்சரம் செல்வக்குமார்
மன்னார் மாவட்டம்

8ம் பக்கத் தொடர்ச்சி




# கிடைக்கப் பெற்ற மாவீரர்களின் பெயர்கள்

7ம் பக்கத் தொடர்ச்சி

**வீரவேங்கை வேந்தன்**
செபமாலை செல்வம்
யாழ் மாவட்டம்

**வீரவேங்கை நிலானி**
இருதயநாதன் சந்திரகுமாரி
புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு மாவட்டம்

**வீரவேங்கை மாணிக்கப்போடி**
கங்காதரன்
மட்டக்களப்பு மாவட்டம்

**வீரவேங்கை கதிரொளி**
சின்னத்தம்பி தர்சினி
யாழ் மாவட்டம்

**வீரவேங்கை தமிழ்முரசு**
பன்னீர்ச்செல்வம் சங்கீதா
யாழ் மாவட்டம்

**வீரவேங்கை நர்மதா**
மர்ஜுகதாஸ் சகாயமேரி
நெடுங்கேணி முல்லைத்தீவு மாவட்டம்

**கப்டன் தயானந்தா அல்லது நிவேதன்**
துரைராஜா சுரேந்திரன்
மட்டக்களப்பு மாவட்டம்

**வீரவேங்கை கீர்த்திகா**
செல்வன் சிவரஞ்சினி
யாழ் மாவட்டம்

**வீரவேங்கை பாவை**
நடடேசபிள்ளை நந்தினி
திருகோணமலை மாவட்டம்

**வீரவேங்கை தேவி அல்லது இளந்திரையன்**
இராமசாமி சுந்தரலிங்கம்
யாழ் மாவட்டம்

**வீரவேங்கை ஆறுமுகன்**
கந்தசாமி நாகேஸ்வரன்
யாழ் மாவட்டம்

**வீரவேங்கை மதியன் அல்லது கன்னியரசன்**
இராமச்சந்திரன் இலங்கேஸ்வரன்
வவுனியா மாவட்டம்

**வீரவேங்கை ஈழச்செல்வன்**
ஜேம்ஸ் ரவிகவியான்
யாழ் மாவட்டம்

**வீரவேங்கை வெள்ளை**
யுவராஜேஸ்வரன்
திருகோணமலை மாவட்டம்

**கப்டன். துரியோதனன்**
ஆனந்தக்குமாரசாமி சமிலன்
யாழ் மாவட்டம்

**வீரவேங்கை வாணி**
அந்தோனி லோகநாயகி
இரணைதீவு கிளிநொச்சி மாவட்டம்

**கப்டன். கண்ணதாசன்**
ஆறுமுகம் கஜரூபன்
மட்டக்களப்பு மாவட்டம்

**வீரவேங்கை வர்ணன்**
நல்லதம்பி ராஜன்
கிளிநொச்சி

**வீரவேங்கை இசையரசன்**
மாசிலாமணி மேட்டவுன்
யாழ் மாவட்டம்

**வீரவேங்கை அறிவுபுகழன்**
ராஜேந்திரன் பிரபாகரன்
யாழ் மாவட்டம்

**வீரவேங்கை தேன்மொழியான்**
சண்முகம் புஷ்பநாதன்
கிளிநொச்சி மாவட்டம்

**வீரவேங்கை கௌதமி**
கந்தசாமி ராதிகா
யாழ் மாவட்டம்

**வீரவேங்கை வைகை அல்லது தரைமதி**
இரத்தினகோபால் டயானா
கிளிநொச்சி மாவட்டம்

**வீரவேங்கை ஞானமலர்**
பிச்சையா கமலாதேவி
வவுனியா மாவட்டம்

**வீரவேங்கை பாக்கியம் அல்லது பாக்கி**
தேவசகாயம் ஜேசுதாசன்
யாழ் மாவட்டம்

**வீரவேங்கை கருமுகிலன்**
பேரம்பலம் கிருபாகரன்
முல்லைத்தீவு மாவட்டம்

**சிறப்பு எல்லைப்படைவீரர் நாகன்**
சிதம்பரப்பிள்ளை செந்தில்நாதன்
யாழ் மாவட்டம்

**கப்டன். அன்புமணி**
கனகரத்தினம் சத்தியசுகி
யாழ் மாவட்டம்

**வீரவேங்கை இசையரசன்**
சண்முகம் சந்திரகுமார்
யாழ் மாவட்டம்

**வீரவேங்கை நிலவன்**
புஸ்பராசா சிவகுமார்
யாழ் மாவட்டம்

**வீரவேங்கை விசும்பன்**
நடராஜா ரஜனிகாந்த்
மட்டக்களப்பு மாவட்டம்

**வீரவேங்கை தங்கலெட்சுமி**
மனோகரன் சுதர்சனா
யாழ் மாவட்டம்

**15.04.00**

**வீரவேங்கை அன்புத்தேவன்**
விவேகானந்தக்குருக்கள் துஷ்யந்தன்
யாழ் மாவட்டம்

**வீரவேங்கை தராகி அல்லது செந்தூரா**
தியாகராசா ஜெபர் கனிஸ்ரா
முல்லைத்தீவு மாவட்டம்

**2ம். லெப். பாவரசி**
கணபதிப்பிள்ளை தயாநிதி
மாங்குளம் முல்லைத்தீவு மாவட்டம்

**வீரவேங்கை வேங்கை**
சிவராசா சிவகரன்
யாழ் மாவட்டம்

**வீரவேங்கை சென்னிச்செல்வன்**
அரியநாயகம் அருள்ராஜ்
மட்டக்களப்பு மாவட்டம்

**வீரவேங்கை கலைமாறன்**
அருமைத்துரை சிவகுமார்
யாழ் மாவட்டம்

**வீரவேங்கை நிலாயினி**
குமாரசாமி சாந்தகுமாரி
முள்ளியவளை முல்லைத்தீவு மாவட்டம்

**வீரவேங்கை பாவேந்தன்**
பரமலிங்கம் கலைச்செல்வன்
நெடுங்கேணி முல்லைத்தீவு மாவட்டம்

**வீரவேங்கை செந்தமிழ்**
அண்ணாவி செல்வராணி
கிளிநொச்சி மாவட்டம்

**17.04.200**

**வீரவேங்கை ஈழநிலா**
மகாலிங்கம் தயாநிதி
யாழ் மாவட்டம்

**வீரவேங்கை மணிமேகலை**
சந்திரசேகர் இலங்கேஸ்வரி
முல்லைத்தீவு மாவட்டம்

**2ம். லெப். மதிநிலவன்**
இராமையா யோகேந்திரன்
விசுவமடு முல்லைத்தீவு மாவட்டம்

**2ம். லெப். சிலம்பரசன்**
இரத்தினம் செந்தில்நாதன்
கிளிநொச்சி மாவட்டம்

**வீரவேங்கை சுமன்**
வேணு ஹரிதாஸ் ஜென்சன்
முல்லைத்தீவு மாவட்டம்

**2ம் லெப்டினன்ட் கதிரவன்**
விக்கினேஸ்வரநாதன் துஸ்யந்தன்
யாழ் மாவட்டம்

**வீரவேங்கை கவிதா**
சொந்தக்குட்டி தம்புவதி
திருகோணமலை மாவட்டம்

**வீரவேங்கை மங்கையரசி**
வேலுப்பிள்ளை உமாதேவி
வவுனியா மாவட்டம்

**வீரவேங்கை சிவப்பிரியா**
கிருஸ்ணபிள்ளை தவலோஜினி
கிளிநொச்சி மாவட்டம்

**வீரவேங்கை தயாளினி**
நடராசா சுலோஜனா
புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு மாவட்டம்

**வீரவேங்கை மதிராணி அல்லது மைவிழி**
சச்சிதானந்தன் மைதிலி
யாழ் மாவட்டம்

**லெப்டினன்ட் கேணல் பரிபாலினி**
சந்திரசேகரம் சுரநுதா
யாழ் மாவட்டம்



# கண்ணீர்ப்பொழுது

27.7.1991 அன்று ஆனையிறவுத் தடைமுகாம் மீதான தாக்குதலில் வீரச்சாவடைந்த தளபதி சராவைப் பற்றிய நினைவுக் கட்டுரையானது இன்று ஆனையிறவுத்தளம் தமிழீழ விடுதலைப் புலிகளால் வெற்றி கொள்ளப்பட்டுள்ள நிலையில் நினைவு மீட்பாக வெளியிடப்படுகின்றது.

சரா,.... சரா,....

அவனது முகத்தை கடைசியாக ஒருதரம் பார்க்கவேண்டும். எனக்கு இதயம் வெடித்து விடும்போல இருந்தது.

எங்கள் போராளிகளின் உடல்கள் துப்பரவு செய்யும் இடம்.

'சராவின் உடல் வந்து விட்டதா?' என்னை மாதிரிப் பலர் கேட்டுக்கொண்டு நின்றார்கள். உள்ளே போனேன். வீரமரணமடைந்த எமது போராளிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கிடந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரின் முகங்களாக நான் தடவினேன். எனக்குப் பழக்கமான சராவின் முகத்தைக் காணவே இல்லை. ஆனால் அந்தத் தோழர்களின் முகங்களும் எனக்குப் பல கதைகளைச் சொல்லின.

பதினைந்து வயதிருக்கும், சற்று நிறமான, சுருள் சுருளான தலைமயிருடன் ஒரு போராளி முகம் வாடிக்கிடந்தான். அவனது உயிரை அழைத்துச் சென்ற விமானக்குண்டு வயிற்றை ஆழமாகச் சிதைத்திருந்தது.

அவனைக் கடந்ததும், சின்னப் போராளி ஒருவன் தூங்கிக் கொண்டிருந்தான். கால் ஒன்று தொடையில் ஆழமாகப் பிய்ந்திருந்தது. உடலைக் குறுக்காகவும் ஒரு ரவை துளைத்திருந்தது. உயிர் பிரியும்போது இருந்த வேதனை அந்தச் சின்ன முகத்தில் படிந்து போய்க்கிடந்தது.

அடுத்ததாக ஒரு போராளி, சப்பாத்துக்கூட கழட்டாமல் கிடந்தான். சீருடைகூட ஒழுங்காக இருந்தது. அவன் எப்படி மரணித்தான்? முகத்தைத் திருப்பினேன். முகத்தின் ஒரு பக்கம் கோறையாக இருந்தது.

இப்படிப் பல போராளிகள்....

இவர்களில் சிலரை சராவின் பயிற்சி முகாமில் பார்த்திருக்கிறேன். சில நேரங்களில் வேகமாகச் செல்லும் வாகனமொன்றிற்குள் சிரித்தபடி செல்வதைக் கண்டிருக்கிறேன். அந்தத் தோழர்கள்தான் இன்று இப்படி......

இந்த மரணங்களை நன்றாகத் தெரிந்து கொண்டுதான், இவர்கள் துப்பாக்கிகளைத் தொட்டார்கள். போர்முனைகளிற்கு வெளிக்கிடும்போதும், வழியிலும் எதிரியை எதிர்த்து நின்று போராடும் பொழுதும் தமது மரணத்தைப் பற்றி இவர்கள் உணர்ந்துதான் இருந்தார்கள்.

ஆனாலும், இந்த இளவீரர்கள் உறுதியாக நின்று போராடினார்கள். இவர்களின் நெஞ்சங்களில் இருந்ததெல்லாம் விடுதலை என்ற உணர்வு ஒன்றேதான். தன்னை இழந்து சுதந்திரத்திற்காகப் போராடும் மனவன்மையை இவர்களுக்குத் தந்தது நம்பிக்கைதான். தலைவர் மீது கொண்ட நம்பிக்கை, தங்கள் இலட்சியம் நிச்சயம் வெல்லப்படும் என்ற நம்பிக்கை, இவைதான் இந்த இளைஞர்களை மலைபோன்ற மாவீரர்களாய் மாற்றி நிற்கிறது.

அந்த இடத்தின் ஒரு ஓரமாக, சிலர் ஒவ்வொரு உடலாக துப்பரவுசெய்து கொண்டிருந்தார்கள். அந்த மனிதர்களின் முகங்கள் சோகமாக இருந்தன. அலங்கோலமாகக் கிடந்த போராளிகளின் உடல்களை ஒழுங்குபடுத்தி அடிமனதின் விருப்பத்தோடு உயிர் கொடுக்க அவர்கள் முயன்றுகொண்டிருந்தார்கள்.

ஏற்கனவே எடுத்துவைத்த சவப்பெட்டிகளில் அளவுக்கு ஏற்ற மாதிரி அந்தப் போராளிகள் கிடத்தப்பட்டார்கள்.

சராவின் உடல் வரவே இல்லை.

ஒரு மண் வீதியால்விழுந்து கடற்கரையில் ஏறுகின்றேன். அந்தச் சிறுகடல் கோபத்தில் அலைகளை அள்ளி வீசமுடியாமல் தவித்து தளதளத்துக் கொண்டிருந்தது. இந்த வீதியால், இந்தக் கடலைப் பார்த்துக் கொண்டுதான் சரா அடிக்கடி போவது வழமை. என்னையும் இந்த வீதியால், சில தடவைகள் அவன் நடத்திய பயிற்சி முகாமிற்கு அழைத்துச் சென்றிருந்தான்.

இன்று இந்தக் கடல், மக்கள், குன்றும் குழியுமாக இருக்கும் வீதி எல்லோருமே அவனை இறுதியாக ஒரு தரம் பார்க்க ஏங்கிக் கொண்டிருந்தார்கள்.

வானம் இருண்டு திட்டுத் திட்டாகக் காணப்பட்டது. கருமேகங்கள் எங்கேயோ வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தன. அதில் சராவை மாதிரியே ஒரு மேகம். அவனது கறுப்பு அவனுடன் இருக்கும் சாதுவான தாடி, பழகும் போது வீசும் குளிர்மை.....

அந்த மேகம் எனக்குக் கதைசொல்லத் தொடங்கியது.

நாங்கள் வெப்பமான மலைகளிற்குக் கீழ் வாழ்ந்த இனிமையான காலம். எமது பயிற்சி முகாமிற்கு சரா ஜேர்மனியிலிருந்து வந்திருந்தான். அந்த பயிற்சி முகாமின் வெப்பமான சூழ்நிலை கடுமையான பயிற்சி எல்லாமாகச் சேர்ந்து அவனது வெளிநாட்டுத் தோற்றத்தை இலகுவாக மாற்றி ஒரு கிராமப்புறத் தோற்றத்தைத் தந்துவிட்டது.


பொதுவாக பயிற்சி முகாம்களில் சிலர் மட்டும்தான் எல்லோராலும் அறியப்பட்டவர்களாக இருப்பார்கள். அவர்களிடம் ஏதோ ஒரு திறமை, அது நடிப்பாகவோ, விளையாட்டாகவோ இருக்கும். அப்படி எல்லோராலும் அறியப்பட்டவர்களில் சராவும் ஒருவன்.

குளப்படிதான் அவனது திறமை.

எங்கள் பயிற்சி முகாமின் பொறுப்பாளர் பொன்னம்மானின் கண்கள் எப்போதும் சராவைத்தான் சுற்றும். குளப்படிகளைச் செய்துவிட்டு அவன்தப்பிவிடுவான் என்பது அவருக்கு நன்றாகவே தெரியும்.

அந்தப் பயிற்சி முகாமின் இனிமையான கலகலப்புக்கு காரணங்களில் சராவும் ஒருவன். பயிற்சி முடிந்த பின் நாங்கள் சிலர் முதன் முதலில் முகாமிலிருந்து பிரிந்து சென்றோம். அந்தச் சின்னப் பிரிவைத்தாங்க முடியாமல் எல்லோருமே இயலுமட்டும் அழுதுதீர்த்தோம். அப்போது நான் சராவைப் பார்த்தேன். கலங்கிய கண்களுடன் அவன் எனக்கு விடைதந்தான். அதன் பின்பு மன்னார் பொலிஸ்நிலையத் தாக்குதலின் பின்தான் சராவைப் பார்த்தேன். ஜி 3 துப்பாக்கி ஒன்றை வைத்திருந்தான். அவனது உயர்ந்த கம்பீரமான தோற்றத்திற்கு அது பொருத்தமாக இருந்தது.

மன்னார் பொலிஸ் நிலையத் தாக்குதலில் தான் செய்தவற்றைச் சொன்னான். யாழ் பொலிஸ் நிலையத் தாக்குதலிலும் பங்குபற்றியதாகக் கூறினான்.



லெப்.கேணல் சரா

காலங்கள் சென்றன. சரா கல்வியங்காடு, திருநெல்வேலிப் பகுதிகளுக்கான பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான். அப்பகுதியில் சராவை, சராவின் செயற்பாடுகளை எல்லா மக்களுமே விரும்பினார்கள்.

அந்த நேரத்தில்தான் இந்தியப்படைகள் தென்றலெனச் சொல்லிக் கொண்டு எங்கள் தேசத்தில் புயலாகப் புகுந்தார்கள். இந்த மண்ணின் மீது தங்கள் கோரக்கரங்களை அகல விரித்தனர்.

இந்திய வல்லாதிக்கத்திற்கெதிராக புலிகள் தொடுத்த போரில் சரா முன்னணியில் நின்று திறமையாகச் சண்டையிட்டான். ஒரு முறை இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பிலிருந்து தப்பிச் செல்லும்போது சராவின் கையில் ஆழமாக காயமேற்படுகிறது. அவன் சிகிச்சைக்காக தமிழகத்திற்குச் சென்றான். அங்கு வைத்து இந்திய அரசால் கைதுசெய்யப்பட்டான்.

இந்தியர்களின் சிறைகளில் இரு வருடங்களைக் கழித்தபின் தமிழீழம் அவனை வரவேற்றது. சராவினது போராட்ட வாழ்க்கை தொடர்ந்தது.

சிறீலங்கா அரசுடனான போர் மீண்டும் தொடங்கிய பின் யாழ்க் கோட்டை இராணுவ முகாம் மீதான முற்றுகைப் போரில் சராவும் ஒருவனாகக் கலந்து கொண்டான். கோட்டை வெற்றிகொள்ளப்பட்டதன் பின்பு புலிகளின், பயிற்சி முகாம்களிற்கான பொறுப்பாளராக செயற்பட்டான்.

ஆனையிறவு இராணுவத் தளம் மீதான முற்றுகைப் போர் ஆரம்பித்தவுடன் அப்போர் முனையில் ஒரு தளபதியாக சராவும் நின்றான். பழைய தடைமுகாம் இராணுவத்தினர் மீது ஒரு தாக்குதலைத் தொடுத்தோம். அந்தத் தாக்குதல் வெற்றியடையவில்லை. எல்லாமாக 63 போராளிகளை நாங்கள் இழந்திருந்தோம். சராவிற்குகாலில் காயம். வைத்தியசாலை வாசலில் நின்றான். நான் அவனைப் பார்ப்பதற்காகப் போயிருந்தேன். சின்னக் காயம்தான் பழையபடி போர்முனைக்கு போகப்போவதாகச் சொன்னான்.

'இழப்புகள்தான் அதிகம் போராட்டம் வளரும் பொழுது, போர் முனைகளும் பெரிதாக மாறும் இழப்புகளும் அதிகமாகத்தான் இருக்கும். இதைத் தவிர்க்க முடியாது.' என்றான் அந்த நேரத்தில் அவரசமாக வந்த வாகனம் ஒன்றில் ஏறி அவன் போர்க்களத்திற்குச் சென்று விட்டான்.

ஆனையிறவு முற்றுகையை முறியடிப்பதற்காக கடற்கரையில் இறக்கப்பட்ட இராணுவத்தினர் நெருப்பு மழையைப் பொழிந்து கொண்டே முன்னேறத் தொடங்கினார்கள். இரவும் பகலும் வானத்தில் நீந்திய விமானங்கள் அங்குலம், அங்குலமாக குண்டுகளை விதைத்தன. கடலிலிருந்து நிலத்தை நோக்கி அலை அலையாக குண்டுகள் வந்து கொண்டிருந்தன. சிறீலங்கா அரச இயந்திரங்கள் தங்கள் முழுப் பலத்தையும் திரட்டி வெளிக்காட்டியவாறு முன்னேறி வந்தார்கள்.

இந்த நிலையில், இரண்டாவது தடவையாக தடைமுகாம் இராணுவ முகாம் மீதான தாக்குதல் ஒன்றுக்கு புலிகள் திட்டமிட்டனர். கவச வாகனங்களின் உதவியுடன் எம்மவர்கள் முன்னேறுவதாக இருந்தது.

தாக்குதல் ஆரம்பமாகும் நேரம் எமது கவச வாகனம் நின்று புறப்படும் இடத்தில் நானும் நின்றேன். சரா வந்தான். என்னுடைய கன்னங்களைத் தடவினான் 'மச்சான், என்னுடைய நல்ல படம் வைத்திருக்கிறாயாடா' என்று கேட்டான்.

'ஏன்' நான் விளங்காமல் கேட்டேன்.

'நான்தான் டோசர் கொண்டு போறன்' என்றான் பயிற்சி முகாமிலிருந்து நாங்கள் பிரியும்போது கலங்கிய கண்கள் இன்று மீண்டும் கலங்கியது.

ஆனால் இந்தப் பிரிவு... நான் விழிகளைத் துடைக்க வேறு பக்கம் திரும்பினேன். சரா இன்னொரு தோழனிடம் சொல்லிக் கொண்டிருந்தான்.

'எனது உடல் சிதையாமல் வந்தா, இந்தச் சீருடையைப் போடுங்கோ, இந்தப் புலிக்கொடியைப் போர்த்துங்கோ'

இந்தச் சண்டையில் தப்பிவரும் சந்தர்ப்பங்கள் மிகக் குறைவு என்பது சராவிற்கு நன்றாகவே தெரியும். தங்கள் மரணத்தைத் தெரிந்து கொண்டு போர் முனைக்குச் செல்லும் உயர்ந்த மனிதர்களை இந்த மண் பிரசவித்திருக்கிறது.

தாக்குதல் தொடங்கியது. துப்பாக்கி ரவைகளால் அரண்களை அமைத்தபடியே புலிகள் முன்னேறினார்கள். சராவின் வாகனமும் முன்னேறியது ஒரு பீரங்கிக் குண்டு அந்த வாகனத்தில் பட்டு வெடித்தது.

சரா, அவனுடன் சேர்ந்து சென்ற குகதாஸ்..., தாக்குதல் தொடர்ந்தது. காலை வேளை வெற்றி இல்லாமல் எம்மவர்கள் பின்வாங்கினார்கள்.

சராவின் உடலை மீட்பதற்கு முடியாமலே போய்விட்டது. இரண்டு நாளின் பின் போர் முனையிலிருந்து வந்த ஒரு தோழன், 'எங்கள் நிலைகளிற்கு முன்னால், இராணுவ முகாம் வேலிக்குப் பக்கத்தில் சரா அண்ணை கொண்டு சென்ற வாகனம் நிற்கிது, காகங்கள் உள்ளே இறங்கி ஏறுது ' எனச் சொன்னான்.

தொடர்ச்சி 11ம் பக்கம்



புள்ளிமானைப்போல் துள்ளித்திரிந்தாள், சுமித்தா. அள்ளிப்போட்ட தாவணியை அவளது தோழியான ராதா சீர்செய்து 'கிளிப்' பண்ணிவிட்டபோது, நிலைக்கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்து, மகிழ்வும், நிறைவும் அவளுக்கு ஏற்பட்டது. தோழிகள் இருவரும் கோயிலுக்குப் புறப்பட்டனர்.

சுமியின் தலையிலிருந்த கனகாம்பர மாலையைச் சீர்செய்—தவாறே ராதா கேட்டாள்.

'சுமி! நீர் சுவிஸ்சுக்குப் போனபிறகு சாறி உடுக்க சான்ஸ்ஸே இல்லாமப்போயிடும் என்ன!'

'நான் அங்கைபோனாலும் சாறிதான் உடுப்பன். எங்கட பரம்பரைப் பண்பாட்டை நான் மீற விரும்பேல்ல'

வெடுக்கெனப் பதிலளித்தாள் சுமித்தா.

'நீர் விரும்பாட்டியும் அவற்றை விருப்பத்தைப் பேணி நடக்கத்தானே வேணும்'

ராதாவின் வார்த்தைகள் சுமித்தாவின் முகத்தில் குங்குமமாகச் சிவப்பை ஏற்படுத்தின. அவள் சுவிஸ்சை நோக்கிய பயணத்தை ஆரம்பிக்க இன்னும் நான்கு நாட்கள் இருந்தன.

சுமி முருகப்பெருமானிடம் மனதார வேண்டிக்கொண்டாள் 'முருகா! என்னுடைய வாழ்க்கைப் பயணம் சீராக அமைய நீயே எனக்கு வழிகாட்ட வேண்டும். தந்தைக்கு




உபதேசம் 'செய்தவனே! நின் அருள் சுரந்து என்னைக் காத்திடுவாய்'

அன்றைய இரவு ஏனோ அவளது உள்ளத்தின் அமைதி குலைந்து, தூக்கம் அவளை அணுக மறுத்தது. தாய் மண்ணைவிட்டுப் பிரியப்போகிறோம். என்ற ஏக்கமோ அல்லது பெற்றார், உற்றாரைப் பிரிய வேண்டியதால் ஏற்பட்ட தவிப்போ எதுவென்று அவளுக்குப் புரியவில்லை. இனந்தெரியாத குமைச்சல் ஒன்று அவளது மனதைக்குடைந்து கொண்டிருந்தது. அவளது நினைவலைகள் கடந்துவந்த பாதையை நோக்கிப் பாயத்தொடங்கின.

பள்ளிப்பருவத்தில், சிட்டுக் குருவியாய் அவள் சிறகடித்த நாட்கள் பசுமையானவை. அந்தப் பசுமைக்கு நீர்வார்த்து மெருகேற்றியவன், பார்த்தீபன். அவன் பரம ஏழையானாலும் படிப்பிலும்சரி, பண்பிலும்சரி முதன்மையானவனாய் விளங்கினான். அவனது எடுப்பான தோற்றமும், துடுக்கான போக்கும் சுமியின் கவனத்தை ஈர்த்துக் காந்தமெனக் கவர்ந்தது. மலைக்கும் மடுவுக்கும் உள்ள ஏற்றத்தாழ்வை எண்ணிப் பார்த்திபன் தயங்கினான்.

'சுமி! நான் படிச்சு ஒரு நல்ல நிலைக்கு வந்தால்.... எங்கட வாழ்க்கையை இணைத்துக் கொள்ளலாம் என்று நம்புறன்'

'தீபன்! நிச்சயமாய் நீங்கள் ஒரு டொக்டராய் வருவீங்கள். அந்தத்திறமை உங்களுக்கு இருக்கு. ஆனபடியால..... நான் எத்தனை வருசம் போனாலும் உங்களுக்காகக் காத்திருப்பன்.'

ஏனோ இந்த வார்த்தைகள் மாறி மாறி அவளது சிந்தையில் தோன்றி, அவளைச் சிதறடித்துக் கொண்டிருந்தது,

'ம்! .... ' புரண்டு படுத்தாள், சுமி.

'நானாக தீபனை ஏமாற்றவில்லை. அவர்தானே என்னை மறந்து இயக்கத்துக்குப்போனவர். அதற்கு நான் என்ன செய்யமுடியும் ?

சுமி, தனக்குத்தானே சமாதானம் சொல்லிக்கொண்டாள். தீபனைக் கடைசியாகச் சந்தித்த நாள் நினைவுகள் அவளது மனத்திரையில் தோன்றி அவளை அலைக்கழித்தது.

டியூசன் வகுப்பு முடித்து வந்தவேளையில் சுமி அவனைச் சந்தித்தாள்.

'தீபன்! என்ன மாதிரி, எல்லாம் படிச்சிட்டீங்களே! பரீட்சைக்கு இன்னும் ஒரு மாதம்தானே இருக்கு'

'சுமி! மற்றவைக்கெல்லாம் இந்தப் பரீட்சையை எதிர்நோக்கிற ஒரு பிரச்சனைதான் இருக்கு. ஆனால் எனக்கு.... அதோட மற்றுமொரு பிரச்சனையும் இருக்குது.'

கலகலவெனச் சிரித்தாள், சுமி

'அது என்ன பிரச்சனை என்று நான் அறியலாமோ?' கண்ணைச் சிமிட்டியவாறு தீபன் கூறினான்.

'அதுதான் என்னுடைய வருங்கால வாழ்க்கைப் பிரச்சனை.' சுமியின் இதயம் ஒரு கணம் புளகாங்கிதத்தால் பூரித்துப்போனது. தான் வானத்தில் எழுந்து பறந்துதிரிவது போன்றதொரு பிரமை அவளை ஆட்கொண்டது.

இதே நினைவுகளை எத்தனையோ தடவைகள் இரைமீட்டு இறுமாந்திருந்தவள், அவள். ஆனால் ஒருநாள்.... அந்த நினைவுக்குப் பங்கம் வந்துவிட்டது.

எமது மண்ணை ஆக்கிரமிக்கவென சிறீலங்கா இராணுவத்தினர் ஆனையிறவிலிருந்து புறப்பட்டுவிட்டனர். ஆக்கிரமிப்பாளனது அகோர ஷெல் வீச்சினால் பரந்தன், கிளிநொச்சியை அண்டிய பகுதியிலுள்ள கிராமத்து மக்கள் தம் இல்லிடங்களைவிட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. சுமியின் குடும்பத்தினரும் இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல. அவர்கள் இடம்பெயர்ந்து, ஸ்கந்தபுரத்திலுள்ள மாமாவின் வீட்டில் குடியேறினர்.

தீபன் குடும்பத்தினர் சில காலம் பாடசாலையில் தங்கியிருந்தனர். பின்னர், வன்னேரிக்குளத்தில் காடுவெட்டி சிறு குடிசையொன்றை அமைத்து அங்கு குடியேறிவிட்டனர். கல்வியே கருந்தனமென்றிருந்த தீபன், இடையில் ஏற்பட்ட குழப்பத்தினால் மனம் தளர்ந்து போனான். அத்துடன் உழுதுண்டு வாழ்ந்து வந்த அவனது குடும்பம், ஊதியம் ஏதுமற்ற நிலையில் வறுமையில் உழலத் தொடங்கியது.

இந்தச் சமயத்தில் அவர்களுடைய கிராமத்தவர் சிலர் தமது வீடுகளுக்குச் சென்று வருவதை அவதானித்த அவனது அப்பா தானும் ஒருதரம் போய் வந்தாலென்ன என்று எண்ணமிட்டார். மனைவியை அழைத்து, தன் எண்ணத்தைக் கூறினார்.

'இஞ்சாரும் கமலம்! எல்லோரும் வீடுபாக்க எண்டு போய்வாறாங்கள். நானும் ஒருக்காப்போய் கொஞ்சத் தேங்காயும் உரிச்சுக்கொண்டு ஒரு அரைமூட்டை நெல்லையும் கட்டிக்கொண்டு வருவமெண்டு பாக்கிறன். ஆனசாப்பாடில்லாமல் பிள்ளையள் வாடிப்போயிருக்கிறதை என்னால பாக்கேலாமக் கிடக்கு'

சிறிது·நேரம் மௌனத்தைத் தழுவியிருந்த கமலம் அவரது விருப்பத்தை ஆமோதித்தாள்.

'எதுக்கும் வலு அவதானமாய்ப் போகவேணும் நீங்கள் போய்வாற வரைக்கும் எனக்கு நெஞ்சில தண்ணி இருக்காது'

மனைவியின் சம்மதம் கிடைத்த மறுகணமே அவர் புறப்பட்டுவிட்டார். அன்றைய இரவுவரை வீடு திரும்பாத அவரை விடிய விடிய விழித்திருந்து காத்திருந்தனர் அந்தக் குடும்பத்தினர்.

அவர் வரவில்லை. செய்திதான் வந்தது. வீடு பார்க்கப்போனவர்கள் சிலரை இராணுவத்தினர் வெட்—டிக்கொலை செய்துவிட்டனராம். அந்தப் பட்டியலில் தீபனது அப்பாவும் ஒருவரானார்.

தீபன் ஒரேயடியாக மனமுடைந்து போனான். தனது தந்தையைக் கொலை செய்—தவர்களைப் பழிவாங்க வேண்டும் என்ற வேகம் அவனுள்ளத்தில் புகுந்து கொண்டது.

விளைவு............

ஒரு நாள் சுமியின் கையில் கடிதமொன்று கிடைத்தது. கடிதஉறையில் தீபனது கையெழுத்தைக் கண்டு உற்சாகத்துடன் அதைப்பிரித்தாள், பிரித்தவளுக்கு அங்கு பலத்த ஏமாற்றம் காத்திருந்தது.

அன்புள்ள சுமி,

எனது நிலைப்பாட்டை விளக்குவதற்காகவே இக் கடிதத்தை உமக்கு எழுதுகிறேன். 'சுதந்திரத்தை வென்றெடுக்காதுபோனால் நாம் அடிமைகளாக வாழவேண்டும். தன்மானம் இழந்து தலைகுனிந்து வாழவேண்டும். பயந்து பயந்து பதற்றத்துடன் வாழவேண்டும். படிப்படியாக அழிந்து போகவேண்டும் ஆகவே சுதந்திரத்திற்காகப் போராடுவதைத்தவிர எமக்கு வேறு வழியில்லை.' இந்தப் பொன்மொழிகளைப் பின்பற்ற வேண்டிய அவசியம் எனக்கு வந்துவிட்டது. இத்தனை காலமும் எதுவிதப் பாதிப்புமின்றி, கல்வியில் மட்டும் என் முழுக் கவனத்தையும் செலுத்திவந்த எனக்கு, அப்பாவின் கொலைக்குப் பின்னர்தான் இங்கு நடைபெறும் அனர்த்தங்களும், ஆக்கிரமிப்பாளனின் அடாவடித்தனங்களும் கண்ணுக்குத் தெரிந்தது. எனவே, உமது எதிர்கால நல்வாழ்வுக்கு எனது வாழ்த்துக்களைக் கூறிவிடை பெறுகிறேன்.

அன்புடன்,
தீபன்.

கடிதத்தைப் படித்த சுமி, பித்துப் பிடித்தவளானாள். தீபன் தன்னை ஏமாற்றிவிட்டதாக கூட அவன்மீது ஆத்திரமடைந்தாள். பெற்றோரின் ஏற்பாட்டில், இன்னும் சில மாதங்களில் அவள் சுவிஸ்ஸில் வாழும் சுதர்சனது மனைவியாகப் போகிறாள்.

ஆனால்....ஏனோ இன்று தீபன் அவளது மனதில் தோன்றி, அவளைக் குழப்ப நிலைக்கு ஆளாக்கிக் கொண்டிருந்தான்.

தீபன்! நான் உங்களை மனமார நேசித்தேன். சலனமற்றிருந்த உங்கள் மனதில் அன்பெனும் ஊற்றைக் கசியவைத்ததும் நானேதான். ஆனால்........ நீங்கள் ஏன் இப்படிச் செய்தீர்கள்? உங்களது நிலையில் இருந்து பார்க்கும் போது, உங்களது முடிவு சரியானதுதான். ஆனால், அதற்காக நான் என்ன செய்யமுடியும்?

நினைவுகளில் மூழ்கிப்போன சுமியை, நித்திராதேவி அரவணைத்துக்கொண்டாள். சொற்பநேரம் கண்ணயர்ந்திருந்தவளை குண்டுச்சத்தங்களின் அதிர்வும், வேட்டொலிகளும் விழித்தெழவைத்தன.

ஏற்கனவே அம்மா எழுந்துவிட்டாள் போலும், அப்பாவுக்குச் சொல்லிக்கொண்டிருந்தாள்.

'கிளிநொச்சிப் பக்கமாத்தான் ஏதோ சண்டை நடக்குதுபோல கிடக்கு. அப்படி ஏதும் பிரச்சனை எண்டால் என்னெண்டு நீங்கள் நாளண்டைக்கு சுமியைக் கூட்டிக்கொண்டு போறது. ஆமிக்காறர் அங்கால ஆக்களை எடுக்கிறாங்களோ தெரியேல்ல..'

'எல்லாம் நல்லபடி நடக்கும். நீர் ஏன் இப்ப வீணாய் அங்கலாய்க்கிறீர்?'

ஒரே வார்த்தையில் அப்பா அம்மாவின் வாய்க்குப் பூட்டுப்போட்டுவிட்டார். சுமிக்கு ஏனோ அப்பா மீதும், அம்மாவின் மீதும் சினம் தோன்றியது. அவளது உள்ளத்தில் ஆழப்புதைந்துகிடந்த உணர்வலைகள் விழிப்படைய முயன்றன.

'இந்தளவு குண்டுச் சத்தத்துக்கையும் நிண்டு அடிபடுறது என்னுடைய தீபன் மட்டுமல்ல. என்னை ஒத்த வயதுடைய பிள்ளைகளும்தான். நானும் எனது குடும்பமும் எங்களுடைய சொந்த நலன்களிலேயே அக்கறைகொண்டிருக்கிறோம். யாருக்காக அவர்கள் போராடி மாள்கிறார்கள். எங்களைப்போல ஒத்த மக்களுக்காகத்தான்.'

இந்த உண்மையை அவள் உணர்ந்து கொண்டபோது இதயத்தின் ஓர் மூலையில் குற்றவுணர்வு தலைதூக்கியது. மாறி மாறி அதிர்வுகளை ஏற்படுத்திய குண்டுச் சத்தங்கள் அவளது இதயத்துடிப்பை அதிகரிக்கச் செய்தன.

மறுநாட்பொழுது விடிந்தது. விடுதலைப் புலிகள் கிளிநொச்சி நகரைக் கைப்பற்றிச் விட்டதாகச் செய்தி பரவியது. சுமியின் இதயம் இனம் புரியாத

தொடர்ச்சி 11ம் பக்கம்

மலரன்னை

## அன்புச் சகோதரமே...

## வணக்கம்!

யாரும் நினைத்துப் பார்த்திருக்க முடியாது.

திட்டமிட்ட தலைவரையும், செயற்படுத்த விரைந்த தளபதிகளையும் தவிர இந்த அதிசயம் இத்தனை விரைவாய், பெரும் இழப்புக்களின்றி நடாத்தி முடிக்கப்படும் என யாரும் நினைத்திருக்க முடியாது. சிங்களப்பாதுபாப்பு உயர்பீடமும் அரசும் கூட.

எத்துணை பெரிய வரலாற்றுச் சாதனை.

தமிழன் வரலாற்றில் இப்படி ஓர் அதிசயம் முன்னெப்போதும் நிகழ்ந்திருக்கச் சாத்தியமேயில்லை.

நீண்டு செல்லும் எமது விடுதலைப் போராட்டத்தில் எத்துணை துன்பங்களை, துயரங்களை, வேதனைகளை எமது மக்கள் பட்டு நொந்திருப்பர். துன்பம் சுமந்தபடி நாளும் பொழுதும் விடிவுக்காய் ஏங்கும் எம் இனத்தின் துயர் சொல்ல வார்த்தைகள் உண்டா?

ஆனால், அத்தனை துன்பங்களும் ஓர் நொடியில் ஒருசேரத் தொலைந்ததுபோல் ஓர் உணர்வு. இது அற்புதமான ஆனந்தமான செய்தி. மனமகிழ்வின் உச்சத்தில் நம் மக்கள்.

இந்த ஆனந்த அவஸ்த்தை தமிழீழத்தில் மட்டும்தானா...? இல்லை.

தமிழன் எங்கெங்கெல்லாம் அகதியாய் அடிமையாய் அடிபட்டு மிதிபட்டு அவமானப்பட்டு வாழ்கிறானோ... அங்கெல்லாம் ஆனையிறவின் வெற்றிமுகம் பிரகாசித்தது.

ஆனையிறவில் நமது தேசியக்கொடி பட்டொளிவீசிப்பறந்தது போல்.. உலகத்தமிழன் தமிழீழத் தேசியக்கொடியை காவியபடி வீதியில் திரிந்தான்.

தமிழீழத்தில் தலைவரின் புகழ்பாடி நகரங்கள், பட்டினங்கள், ஊர்கள், கிராமங்கள் ஆர்பரித்ததுபோல், உலகத்தமிழனும் ஆர்ப்பரித்தான். தேசியத் தலைவரின் உருவப்படத்தை பவ்வியமாகப் பொறித்தான்.

வெடி கொழுத்தினான். இனிப்புகள் கொடுத்தான். ஆனந்த முத்தங்களை அள்ளிச் சொரிந்தான்.

இது விடுதலைக்கு ஏங்கும் ஓர் தேசிய இனத்தின் ஆத்மதாக வெளிப்பாடு.

பிறிட்டுக்கிளம்பும் தாய்மண் நேசம்.


யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்து கொடியேற்றிக் குதூகலித்த சிங்களத்தின் உணர்வுஅல்ல இது.

தாய்மண்ணை நம் புலிவீரர்கள் மீட்டனர் என்ற ஆனந்தக்களிப்பு.

அது ஆக்கிரமிப்பின் எக்காளம்.

இது விடுதலையின் ஆனந்தம்.

அன்புடன்..
ஆசிரியர்.




### தமிழீழத் தேசியக்கொடி

தமிழீழத் தேசியக்கொடியின் பயன்பாட்டு விதிமுறைகள் குறித்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையால் வெளியிடப்பட்ட தேசியக்கொடி பயன்பாட்டு விதிக்கோவை என்ற சிறுகைநூலில் தெரிவிக்கப்பட்ட விடயங்களை, பகுதி பகுதியாக, இங்கு பிரசுரிக்கின்றோம்.

# தேசியக்கொடி

### கொடிமீது கொண்ட பற்று

சிறப்பு நிகழ்வுகளுக்கான ஊர்வலங்களின்போது தேசியக் கொடியை ஏந்திச் செல்வதும், ஏந்தி நிற்பதும்கூடத் தேசியக் கொடிக்குச் செலுத்துகின்ற மதிப்பு வணக்கமாகும். தேசியக் கொடி ஏந்துபவர்களும், கொடிக்கம்பத்தைக் காப்பவர்களும் தேசியக்கொடி சிதையவோ அன்றிக் கொடிக்கம்பம் சரியவோ இடமளிக்கமாட்டார்கள்.

தேசியக்கொடியை ஏந்துபவர்கள் ஏந்துகின்ற கொடியை கடமை முடிந்ததும் உரிய இடத்தில் வைப்பார்கள் அல்லது தகுதியானவர்களிடம் கையளிப்பார்கள். எவ்வித இடர்வரினும், உயிரே போகின்ற நிலைவரினும் கொடியைக் கைவிடாத தன்மையைக் கொண்டிருப்பர். தாம் ஏந்துகின்ற கொடி சரிந்தாலோ, கீழே விழுந்தாலோ அது தமது நாட்டுக்கு இழுக்காகிவிடும், தமது நாட்டின் ஆட்சி வீழ்ந்ததாகக் கொள்ளப்படும் என்ற உணர்வு அவர்களிடமிருக்கும். பண்டைக் காலத்திலேயே தமிழ் மக்கள் நாட்டின் கொடிமீது கொண்டிருந்த பற்றும், அதற்குக் கொடுத்த மதிப்பும்பற்றி இலக்கியங்கள், வரலாறுகள் எடுத்தியம்புகின்றன.

### துயர நிகழ்வில் தேசியக்கொடி..

தலைவர்கள், சிறப்புக் குடிமக்கள் போன்றோரின் மறைவையொட்டி ஏற்படும் நாட்டின் துயர நிகழ்வின்போது தேசியக் கொடி, கொடிக்கம்பத்தின் உச்சிவரை ஏற்றப்பட்டு, கொடிக் கம்பத்தின் நடுப்பகுதிரை இறக்கிக் கட்டிப் பறக்கவிடப்படுவது வழக்கம். இதன் மூலம் நாட்டின் துயரம் உணர்த்தப்படுகின்றது. கொடிக்கம்பத்தின் நுனியிலே பறக்கின்றகொடி நடுப்பகுதி வரை இறக்கப்பட்டு, அரைக் கம்பத்தில் பறப்பதே நாட்டின் மிகு துயரை உணர்த்துவதாயின் தேசியக்கொடி சிதைவுறுவதோ, இழிவுபடுத்தப்படுதோ, கீழே வீழ்த்தப்படுவதோ, வீசப்படுவதோ, கால்களில் மிதிக்கப்படுவதோ எண்ணிக்கூடப் பார்க்கமுடியாத நிலையாகும்.

10ம் பக்கத் தொடர்ச்சி

## நீ நடந்த பதையிலே

மகிழ்ச்சியினால் நிறைந்திருந்தது. அந்த மகிழச்சிக்குக் காரணம் தான் பிறந்து வளர்ந்த மண் மீட்கப்பட்டதாலா? அன்றி அந்த வெற்றி எம் இனத்துக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி என்ற எண்ணம் அவளுள்ளத்தில் வேரூன்றியதாலா?

சுமியின் உள்ளம் ஒரு விவாத மேடையாம்ாறி, தன் உள்ளத்து உணர்வுகளை எடைபோட முயன்று கொண்டிருந்தது. அவளுடைய தோழி ராதா, பரபரப்புடன் அவளிடம் ஒடி வந்தாள்.

'சுமி! நியூஸ் கேள்விப்பட்டநீரே?'

'ஓ.....! எனக்குத் தெரியும். கிளிநொச்சியில இருந்து ஆமியை விரட்டியாச்சு'

கலகலவெனச் சிரித்தவாறு சொன்னாள் சுமி. ராதா முகத்தில் சோகம் ததும்ப செய்தியைச் சொன்னாள்.

'கிளிநொச்சியை கைப்பற்றின சமரில எங்கட கிளாஸ்மேற் பார்த்தீபன் வீரச்சாவாம்'

'ஐயோ தீபன்!'

கத்தியவாறே மயங்கி விழுந்தாள் சுமி, அம்மாவுக்கு ராதாவின்மேல் கோபமாக வந்தது.

'ஏன் பிள்ளை அப்பிடியான செய்தியை வந்து சுமியிட்டைச் சொன்னனீர் தனக்குத் தெரிஞ்ச ஆக்களெண்டால் அவள் தாங்கமாட்டாள்'

மயக்கம் தெளிந்த சுமி, அம்மா எவ்வளவோ தடுத்தும் கேளாதவளாய் ராதாவுடன் தீபனுடைய வீட்டிற்குப் புறப்பட்டுவிட்டாள்.

அங்கே....... நடுமுற்றத்தில் கொட்டகை அமைத்து, தீபனது புகழுடலைக் கிடத்தியிருந்தார்கள். அவனுடைய அம்மாவும், சகோதரர்களும் அவன் மீது விழுந்து கதறிக் கொண்டிருந்தார்கள்.

சுமி மனதில் ஒருவித துணிவை வரவழைத்துக் கொண்டாள். நேராக நடந்து போய் தீபனது புகழுடலுக்கு அருகில் நின்று, அவனது முகத்தையே வைத்தகண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தாள். நிறைவான புன்னகையுடன் அவன் மீளாத்துயிலில் ஆழ்ந்திருந்தான்.

தன்னைக் கவர்ந்த அந்தமுகம் இன்று தாய்மண்ணைக் காதலித்து, அந்தக் காதலுக்குத் தன்னையே அர்ப்பணித்து பெருவெற்றியை ஈட்டித்தந்துவிட்டு மாவீரன் என்ற புகழராத்தைஏற்று அமைதி பெற்றுக் கிடக்கிறது.

தீபனது புகழுடலுக்கு யார் யாரோ வந்து பூமாலை சாத்தி, அஞ்சலி செலுத்தியவாறிருந்தனர். ஆம் இன்று அவன் ஈன்றெடுத்த தாய்க்கு மட்டும் சேய் அல்லவே. இந்த மண்ணின் மைந்தனல்லவா. அவனுக்கு அஞ்சலி செலுத்தவேண்டியது எம் மண்ணில் வாழும் மக்கள் அனைவரினதும் கடமையல்லவா? அதனால்தான் நிறையப்பேர் வந்துபோகிறார்களோ.............

சுமியின்பார்வை அவனது முகத்திலிருந்து விலகியபோது அவனுடைய புகழுடலைப் போர்த்தியிருந்த புலிச்சின்னத்தை. அவதானிக்க முடிந்தது. அவளையறியாமலே அவளது மேனியெங்கும் சிலிர்த்து, மயிர்க்கால்கள் குத்திட அவள் உணர்ச்சிவசப்பட்டாள். மானசீகமாக தீபனுடன் உரையாடினாள்.

'தீபன்' உங்கள் கரங்கள் அணைத்த ஆயுதம் இனி எனதாகும். நீங்கள் நடந்த பாதையிலே என் கால் பதியும்'

சுமி, அருகிலிருந்த தட்டத்திலிருந்து பூக்களை அள்ளி அவனது புகழுடலின்மீது வைத்து அஞ்சலித்தாள். ■

9ம் பக்கத் தொடர்ச்சி

## கணப் பொழுது

சராவை, காகங்கள்..., என்னால் வேதனையைத் தாங்க முடியாமலிருக்கிறது, என் முன்னாலிருக்கும் சாளரத்தின் வழியே பார்க்கிறேன், கோட்டை தெரிகிறது. சிதைந்து அழிந்து கொண்டிருக்கும் அந்த ஆக்கிரமிப்புச் சின்னத்தின் முன்னே, இப்படித்தான் அகழியையும் உயர்ந்த கோட்டைச் சுவரையும் தாண்டுவதற்காக எம்மவர்கள் பயன்படுத்திய கருவிகள் அப்படி அப்படியே கிடக்கிறது.

மதிலில் ஏறுவதற்காகச் சாத்திய ஏணி மதிலுடன் விழுந்து கிடக்கிறது. சேற்று அகழியை தாண்டுவதற்காக அடுக்கிய பல கைகள் அப்படியே தாழாமல் கிடக்கின்றன. இவை எல்லாம் வீரம் நிறைந்த கடுமையான அந்த நாட்களை நினைவு படுத்துகின்றன.

கோட்டை இராணுவ முகாம் மீதான இரண்டாவது தாக்குதல் முயற்சி, அன்றும் சரா ஒரு கவசவாகனத்தை ஓட்டிச் சென்றான். முன்னேறிச் சென்ற அந்த வாகனம் பள்ளம் ஒன்றிற்குள் விழுந்து சரிந்தது. அன்றைய தாக்குதலும் வெற்றியடையவில்லை.

விடிந்தது, எங்கள் கண்களிற்கு முன்னால் வெட்டை வெளியில் எங்கள் தோழர்களின் உடல்கள் கிடந்தன. அவர்களின் மீது காகங்கள் இருக்க முயல்வதும் பறப்பதுமாக...

அந்த வேதனையான நினைவுகளை எண்ணியபடியே நிமிர்கிறேன். சிதைந்து போன கோட்டையின் எஞ்சிய மதிற்சுவரால் எங்கள் போராளிகளில் சிலர் நடந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் கைகளில் இருக்கும் துப்பாக்கிகள் புது நம்பிக்கைகளை விதைத்துக் கொண்டிருந்தன.

சற்றுத் தள்ளி, காற்றில் தன் கைகளை வீசிப் புலிக்கொடி பறக்கிறது.

**-வவுனியா தினேஸ்-**

■



# விரைவில் வருவேனென என் வீட்டிற்குச் சொல்லி வருக

பரிவட்டம் கட்டிய நிலவே !
பார்; என்னை.
விரியுண்ட வான விதானமே
விழிதிறந்து பார்; என்னை
நள்ளிரவுக்கு மேலாச்சு.
எல்லோரும் உறக்கத்தில்... என்னைத் தவிர
போகமற்றுக் கிடக்கிறது சாமப்பொழுது.
என்மேனி தழுவ மறந்து எங்கே போனாய் காற்றே!
இரவுப் புட்களும் மௌனித்து
கரந்துறை கின்றனவா?
ஒருவர்கூட அருகிலற்ற இரவு
எத்தனை கொடுமையானது.
பல்லியொன்று உச்சரித்துப் போக
சில்வண்டின் சீழ்க்கையொலி கேட்கிறது தொலைவில்.
என்ன ராகமாக இருக்கும்?
நிச்சயமாக எனக்காக சிந்துபைரவியையே
சில்வண்டு வாசிக்கும்.
மேகமுந்தானைக்குள்ளே நிலவு சரசம் செய்ய
பங்குனி மாத இரவில்
ஆடைகளைகிறது முற்றத்து வேம்பு.
இரவில் இதுகூடச் சங்கீதம்.
விழிகளுக்குள்ளே வரமறுக்கிறது உறக்கம்.
எப்படிவரும்?
முடி சூடி உலாவரும் நினைப்பில்
தலை நிமிர்த்தி நடந்த வீதிகளின்றி.
எனக்குன் மேனி சொந்த மென்ற மகிழ்வில்
புரட்டியெடுத்த வயல்களின்றி.
பொங்கிப் படைத்துக் கும்பிட்டு நின்ற
பெருமாட்டியின் திருவாசல் தரிசனமற்று.
சுரந்தூறி வரும் அமுதக் கரைசலை
அள்ளிக் குடிக்கக் கிணறுகளற்று.
எத்தனை நாள் துயருற்றிருப்பேன்?
மார்கழி மழையை...
தைமாதப் பனியை ...
பங்குனி வெய்யிலை...
வைகாசி மாதத்து வசந்தத்தை...
என் வீட்டு முற்றத்தில் காண்பதே இனிமை
இரவுக் குருவியே!
ஒரு எக்கு எக்கி எழும்பு.
கடற்சுவர் தாண்டி கச்சாயில் போயிறங்கு.
அப்பால் நடந்து
செம்மணி கடந்து.
நல்லூரரைச் சென்றடைவாய்.
வள்ளி மணாளனின் வாசல் வணங்கி
தேர்வீதி வலம் வரும் போது
மேற்கு வீதியால் திரும்பி! நேரே செல்.
மங்கல நாயகி மனோன்மணி அம்மன்
சட்டவிளக்கின் முகமொளிரத் தனித்திருப்பாள்.
கும்பிட்டுத் திரும்பு.
மூடிச் சாந்திட்ட கிணறிருக்கும்.
அருகில் ஒழுங்கையொன்று
உள்ளே போவெனத் தள்ளும்
உள்ளே போ,
இரும்புப் படலையா..? அதையும் திற.
வாசலில் செவ்வரத்தை வரவேற்கும்?
நிமிர்ந்து பார்.
"என்னைப் பார்
என் கண்ணைப்பார்'' என்று
கண்ணீறு கழிக்கும், படமொன்று தொங்கும்
அந்த வீடுதான்
இரவுக் குருவியே!
விரைவில் வருவேனென
என் வீட்டிற்குச் சொல்லி வருக...

**புதுவை இரத்தினதுரை**



பிஞ்சுப் பாதங்கள் நொந்து துவழ
வாழ்விடம் தேடும் இளைய தளிர்கள்

**கண்கெட்டுக் கிடப்பதா...?**
**கட்டியணைப்போம்**

